காமகோடி க்ரந்தாவலி : 34

# திருக்குறள் நூற்றெட்டு

தெய்வப்புலவர் திருவள்ளுவனார்

இயற்றிய

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது

முதுமறைவழி தழுவிய உரையுடன் கூடியது

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது

19 JUL 1991



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, வி[illegible] ரூபாய் [illegible]

[விலை ரூபாய் 1

முதற் பதிப்பு : பிப்ரவரி 1950

PRINTED AT THE LIBERTY PRESS, MADRAS



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்

॥ श्रीः ॥

ஸ்ரீ:

# ஸ்ரீ முகம்

(முத்திரை)

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पादप्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिपजगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ॥

வேதங்களிலும், தர்மசாஸ்திரங்களிலும், இதிகாஸ புராணங்களிலும் துலங்கும் தர்மங்கள் தெய்வப் புலமை திருவள்ளுவரது அழியாப்புகழ் பெற்ற திருக்குறளிலும் மிளிர்வதைக் காண்கிறோம். மனிதன் தேவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை, பித்ருக்களுக்குச் செய்யவேண்டிய கடமை, அதிதிபூஜை இவைகளும், மறுபிறப்பும், சுவர்க்க நரகங்களும், பார்ப்பார்க்குப் பிறப்பையொட்டிய ஒழுக்கமும், மறை ஓதல் முதலிய அறுதொழில்கள், நான்கு ஆச்ரமங்கள், யக்ஞங்கள், யக்ஞங்களால் மழை சரிவரப் பொழிதல், பதிவ்ரதா தர்மம், கோ ஸம்ரக்ஷணமும், இவைகளுக் கெல்லாம் காரணமான செங்கோலையுடைய க்ஷத்ரிய தர்மமும், நேர்மை கோணாத வைச்ய தர்மமும், பிறந்தோ ரெல்லோருக்கும் இன்றியமையாத பேரன்பாம் பகவத் பக்தியும், அதன்பயனும் பகவானுடைய லோகத்தைச் சேர்ந்து நீடூழி வாழ்தலும், எல்லாப் பொருள்களுடைய

உண்மைநிலையான பரம்பொருளின் தத்வஞானத்தினால் அவித்யை என்னும் இருள் நீக்கி அழியா சிறப்பாம் மோக்ஷநிலையில் நிற்றலும், இன்னும் அனேக விதமான தர்மங்களும் குறளைப் படிப்போருள்ளத்து பசுமரத்தாணி போல் பாய்வதைக் காண்கிறோம்.

காமகோடி கோசஸ்தானத்தில் வெளியிடப்படும் இப்பதிப்பில் இத்தகைய தர்மங்கள் மலிந்து நிற்கும் சில குறள்கள் தொகுக்கப்பட்டு முறையே இதே பொருள்களைக் கொண்டுள்ள சாஸ்திர வாக்கியங்களும் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இச் சாஸ்திர வசனங்களையும், அவைகளுக்குச் சரியான குறள்களையும் ஒப்பிட்டுப்பார்த்தல் ஒன்றிற்கொன்று அர்த்த புஷ்டியைக் கொடுத்துக்கொண்டு கலைஞர்களுக்குக் கலைச்சுவையைப் பெருக்குவது மாத்திரமல்லாமல் மனிதன் தானெடுத்த பிறப்பை எந்த முறையில் உபயோகப் படுத்திக்கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் தாழ்நிலை யெய்தாமல், இறுதியாக, இம்மையும் மறுமையுமற்ற ஞானநிலையில் அழிவும் அசைவுமற்ற நிறைவை யடையலாம் என்பதற்கு ஒரு வழித்துணை யாகவுமிருக்கிறது.

தமிழ் நாட்டில் பிறந்தவர்களெல்லோரும் இப் பெருநூலைத் துணைக்கொண்டு அறவழியே நடந்து, தம்தம் ஆத்மாவிற்கும், ரபிற்கும், நாட்டிற்கும், பெருஞ்சிறப்பைத் தேடியடைவார்களாக என ஸ்ரீ சந்திர மௌளீச்வரர் சன்னிதானத்தில் பிரார்த்திக்கின்றோம்.

முகாம்: திருவிடைமருதூர்
சாலிவாகன சகாப்தம்
1872, பால்குன சுத்த
ஷஷ்டி - (23-2-50).

நாராயணஸ்மரணை

# முகவுரை

பண்டையதமிழ்க் கலைவானத்தில் திருவள்ளுவர் பூர்ண சந்திரனாக விளங்குகிறார். அதற்குக் காரணம் ஒரே நூலில் நான்கு புருஷார்த்தங்களையும் பற்றி அவர் விவரித்திருப்பதுமாத்திர மல்லாமல் ஒவ்வொரு விஷயத்தையும் சொல்லும்பொழுது உலகோர் அனுபவத்தைத் தனது ஸ்வானுபவமாக்கிக் கொண்டு தன்மயமாகிவிடுகிறார். இவ்வுண்மையே மற்றெல்லா நூல்களைவிட அவரது நூல் படிப்போரது உள்ளத்து அகலாது இடம்பெற்றிருப்பதற்கும் காரணம்.

இவரது நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூவகையாகப் பிரிக்கப்பட்டு தர்மார்த்த காமங்களென்னும் மூன்று புருஷார்த்தங்களையே சொல்லுவதாக ப்ரசித்தி பெற்றிருந்தாலும் உண்மையில் மோக்ஷ புருஷார்த்தமும் இதில் நன்றாக அறிவிக்கப்பட்டே யிருக்கிறது. அதெங்ஙனமெனின், அறத்துப்பாலை இவர் இல்லறம், துறவறமென இருவகையாகப் பிரித்திருக்கிறார். அதில் துறவறத்தின் பயன் வீடு எனப்படும் மோக்ஷமேயாதலால் இந்நூலில் அதுவும் நன்றாக விளக்கப்பட்டே யிருக்கிறது.

நாயன்மார்களும் தாயுமானவ சுவாமிகளும் தமது நூல்களில் சிவபிரான் சனகாதிகளான நால்வருக்கு அறமுரைத்ததாக ஆங்காங்கு குறிப்பிடுகிறார்கள். ஒவ்வொரு சிவாலயத்திலும் இளம்வயதுடைய கோலத்துடனே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, மிகவும் வயது முதிர்ந்த கோலத்தைத் தாங்கிய சனக, சனந்தன, சனாதன, சனத்ஸுஜாதர்களுக்கு இடதுகையில் ஒருசுவடியையும், வலதுகையில்

ஞான முத்திரையையும் தாங்கி உபதேசிப்பதாக சில்ப ஓவியத்தில் காண்கிறோம். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் பாதம் அரக்கவடிவந்தாங்கிய மயக்கநோயாம் முயலகனை மிதித்து அழுத்திக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். ஸ்ரீ நடராஜப்பெருமானின் வடிவத்திலும் அவர்பாதம் இதே மயக்கமாம் முயலகனை அழுத்திக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். தக்ஷிணாமூர்த்தி ஞானமூர்த்தி, நடராஜமூர்த்தி ஆனந்த மூர்த்தி. அத்வைததத்வத்தில் ஞானமும் ஆனந்தமும் ஒன்றே, மயக்கமழியும்போது ஞானானந்தம் ப்ரகாசிக்கிறது. இதுவே இம்மூர்த்திகளின் தத்வம். இவ்விரு மூர்த்திகளுமே தென்திசைநோக்கி நிற்பன. இம்மூர்த்திகளில் ஒன்றை வழிபடுவோர் தென்னவனும் யமன் வசம் சிக்கவேண்டியதில்லை. ஜீவன்முக்தி யடைந்தவராகிறார். நடராஜமூர்த்தி தனது ஆனந்த தாண்டவ முடிவில் தமது கையிலிருக்கும் உடுக்கையை '14' தடவை ஒலிக்கிறார். [1]அவ்வோசைகள் '14' சூத்ரங்களாகின. [2]சனகாதிமுனிவர்கள் சன்னிதியில் நிற்கின்றார்கள். அவர்களை உய்விக்கவே இவ்வொலிகளை எம்பிரான் ஒலிப்பித்தது.

உடனே நந்திகேசர் அவ்வொலிகளைச் சுவடியில் வரிவடிவிலேற்றி அவைகளுக்கு உரையாக '27' சிறு சுலோகங்களை இயற்றினார். இவ்வுரைக்கு நந்திகேசுவர காரிகையென்று பெயர். இக்காரிகைக்கு உபமன்யு முனிவர் சம்ஸ்கிருத வசன நடையில் பாஷ்ய மியற்றியிருக்கிறார். இந்

* (1) ந்ருத்தாவஸானே நடராஜ ராஜ: நநாத டக்காம் நவ பஞ்சவாரம் | உத்தர்த்து காமஸ் ஸனகாதி ஸித்தாந் ஏதத் விமர்சே ஶிவஸூத்ரஜாலம்.

* (2) அஇஉண் - ருலுக் - ஏஓங் - ஐஔச் - ஹயவரட் - லண் - ஞமஙணனம் - ஝பஞ் - கடதஷ் - ஜபகடதஶ் - கபசடதசடதவ் - கபய் - ஶஷஸர் - ஹல் - இச்சூத்ரங்களையே பாணினி முனிவர் தம் வியாகரண சாஸ்திரங்களுக்கு மூல சூத்ரங்களாகவும் வைத்துக்கொண் டிருக்கிறார்.

நூல்கள் அத்வைத ஞானத்தையே போதிக்கின்றன. இவ்வொலிகளே சுவடி வடிவில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் இடது திருக்கரத்தில் துலங்குகின்றன. இவ்வொலிகளின் உரையே திருமுகத்தில் துலங்கும் மோனமுத்திரையும் வலது திருக்கரத்தில் துலங்கும் ஞானமுத்திரையுமாம். இவ்விதம் தக்ஷிணாமூர்த்தி உருவம்தாங்கிய சிவபிரான் சனகாதியர்க்கு உபதேசித்த தத்வத்தை அறமென்னும் சொல்லால் நாயன்மாராதியோர் வழங்கி யிருக்கிறார்கள்.

> ஆலின் கீழறமோர் நால்வர்க் கருளியவன்—சம்பந்தர்
> ஆலதன் கீழற நால்வர்க் கருள்செய்தானை—அப்பர்
> ஆலக்கோயில் கல்லாநிழற் கீழறங் களுரைத்த—சுந்தரர்
> கல்லாலினீழறனி லொருநால்வர்க்கு கடவுணீ—யுணர்த்துவது. [தாயுமானவர்.]

இதைக்கொண்டு நோக்குமிடத்து "அற" மென்னும் சொல் ஆசாரா னுஷ்டானங்களையும், தான தருமங்களையும், ஒழுக்கங்களையும் மாத்திர மல்லாது அத்வைதாத்மதத்வமாம் மோக்ஷநிலையையும் குறிப்பதாக வழங்கப்பட்டிருக்கிற தென்பது தெளிவாகிறது. ஸ்ரீ ஆதிசங்கராசார்ய சுவாமிகளும் பகவத்கீதா பாஷ்யத்தின் தொடக்கத்தில், "ஆதியில் பகவான் மரீசிமுதலிய முனிவர்களுக்கு ப்ரவிருத்தி தர்மத்தையும், சனகாதி முனிவர்களுக்கு நிவிருத்தி தர்மத்தையும் உபதேசித்தார்" என திருவாய்மலர்ந்திருக்கிறார்கள். இங்கு வழங்கப்பட்டிருக்கும், "நிவிருத்தி தர்ம" மென்னும் சொல்லும், திருக்குறள் பாகுபாட்டில் வழங்கப்படும் "துற - அறம்" என்னும் சொல்லும் ஒரே பொருள் உடையன, ஆதலால் அறத்துப்பாலிலேயே மோக்ஷசுவரூபத்தைப் பற்றி திருவள்ளுவர் விரித்திருப்பதால் அவர் நான்கு புருஷார்த்தங்களையும் விரிவாகக் கூறினவராகிறார்.

" எப்பொருளெத்தன் மைத்தாயினு மப்பொருண்
மெய்ப் பொருள் காண்பதறிவு (66)"

என்ற குறளில் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளின் உண்மையான தன்மை மாந்தர்க்குப் புலப்படவொட்டாமல் ஏதோ மறைத்துக்கொண்டிருப்பதாகப் பெறப்படுகிறது. இதையே அத்வைத தத்வ சாஸ்திரங்களில் அவித்தையின் ஆவரண சக்தி என்பர்.

" இருணீங்கியின்பம்பயக்கு மருணீங்கி
மாசறு காட்சியவர்க்கு (65)"

என்ற குறளில் இருள் எனப்படும் அவ்வாவரண சக்தியால் ஒருபொருளின் உண்மைத்தன்மை மறைக்கப்படுவது மாத்திரமல்லாமல் மருள் அல்லது மயக்கம் எனப்படும் அவித்யையின் விக்ஷேபசக்தியால் அப்பொருள் வேறொரு பொருளாகத் தோன்றும் மாசும் உண்டாக, அம்மாசு அறும்படியான காக்ஷியே எப்பொருளிலும் மெய்ப்பொருளாம் பரம்பொருளைக்காண்பது. இந்நிலையையே ஜீவன் முக்தியென்று அத்வைத சாஸ்திரங்கள் கூறும். மெய்ப்பொருள் காண்பதே மானிடப்பிறவியின் பயன், மெய்ப்பொருள் காக்ஷியினாலேயே உலகமெனும் மயக்கந்தெளிந்து பிறவி மாசு அறும் என்னும் தத்வம் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு பெரியோர்களால் வழங்கப்பட்ட தத்வம்.

இன்று நமக்குக் கிடைக்கும் தமிழ்நூல்களுள் தொல்காப்பியமே பழையது என்பது தமிழ் மரபு.

" நிலந்தீநீர் வெளிவிசும் போடைந்துங்
கலந்த மயக்க மூலமாதலின்

என்ற தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் '89' வது சூத்திரவரிகளால் 'உலகத்தோற்றம் மயக்கம், அதாவது, திருவள்ளுவர் சொல்லியபடி, மெய்ப்பொருள் காணுமருள்' என்பது பெறப்படுகிறது.

மற்றொரு பண்டைய சித்தநூலாகிய திருமந்திரமும்,

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார் முதல் பூதம்"

என்று கூறுகிறது. உலகமெல்லாம் பரம்பொருளே யானால், பரம்பொருளாகத் தெரியவில்லையே? மண், நீர், தீ, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களே இவ்வுலகம் என்ற மயக்கத்தினால் பரம்பொருள் மறைக்கப்பட்டிருக்கிறது. ஞானிகளுடைய மறைமொழி உபதேசங்களினால் உலகமெலாம் பரம்பொருளே என்னும் அனுபவ சாக்ஷாத்காரம் உண்டாகும்போது அப்பரத்தில் மண்முதலிய பூதங்கள் மறைந்தே போம்.

பிற்காலத்தவராகிய கம்பநாட்டாழ்வாரும், பூதமைந்தும் கயிற்றில் தோன்றும் பாம்பென வேறுபாடற்ற வீக்கம், மறைகளுக்கிறுதியாம் பரம்பொருளான ஸ்ரீ ராமனுடைய தத்வஸ்வரூபத்தைக் கண்டமாத்திரத்தில் இந்த பஞ்சபூத வீக்கம் கலங்குமென்கிறார்.

"அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவென பூதமைந்து
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்
கலங்குவதெவரைக் கண்டால் அவரென்பர் கைவிலேந்தி
இலங்கையில் பொருதாரன்றே மறைகளுக்கிறுதி யாவார்"

சுந்தரகாண்டம், கடவுள்வாழ்த்துப்படலம்—1.

சைவநாயன்மார்களும், "பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பாநின்ற" என்றும், "இம்மாயப் பிறப்பெனுங் கடலாந் துன்பத்திடைச் சுழிப்பட்டிளைப்பேனை" என்றும், "பொய்த்தன்மைத் தாயமாயப் போர்வையை மெய்யென்றெண்ணும் வித்தகத்தாய வாழ்வு வேண்டிநான் விரும்பகில்லேன்" என்றும், இக்கருத்தையேகொண்டு உலகத்தின்

மயக்கத்தன்மையைப் பறைசாற்றுகிறார்கள். இறுதியாக, நம்நாட்டில் தாயுமானவரும்,

"ஐந்து பூதமொரு கானலீரென" (சிச்சுகோதயவிலாஸம்-3)
"ஜகம் பொய்யென தம்பட்ட மடியே" (நினைவொன்று-6)

என்று உலகோரைப்பார்த்துக் கதறுகிறார். திருவள்ளுவரால் திருக்குறளில் ப்ரகாசிப்பிக்கப்பட்ட தத்வம், சைவம் வைஷ்ணவம் முதலிய மதபேதமில்லாத, நம் தமிழ் நாட்டில் போற்றி அனுபவிக்கப்படும் அழியாப் பொக்கிஷம் என்பது தெளிவாகிறது. ஸ்ரீ ஆதிசங்கரா சாரிய சுவாமிகளுடைய பூர்வாசிரியர்களாக, பாஷ்யத்திலும் இதர நூல்களிலும் மேற்கோள் எடுத்துக் காட்டப்பட்டவர்களின் பெயர்களுள் ஆசாரிய சுந்தர பாண்டியர், த்ரவிடாசாரியர் என்று இருபெயர்கள் காணப்படுகின்றன. இவ்விரு பெயர்களையுடைய அத்வைத ஞானாசார்யர்களும் தென்னாட்டவரே - தென்னாட்டுப் பெரும் நூல்களெல்லாம் மறை முடிகளாம் வேதாந்த உபநிஷத்தின் தத்வத்தையே கூறுகின்றன வென்று ஔவையாரின் வசனமும் நிலைநாட்டுகிறது.

" தேவர் குறளும் திருநான் மறைமுடியும்
மூவர்மொழியும் முனிவர்மொழியும்
கோவை திருவாசகமும் திருமந்திரமும்
ஒரு வாசக மென்றுணர் "

(முனிமொழி = நம்மாழ்வார் திருவாய்மொழி)

தொல்காப்பியம் தமிழ்நாட்டிற்குச் சமணம், பௌத்தம் முதலிய புறமதங்கள் வருமுன்பே இயற்றப்பட்டதென்று தோன்றுகிறது. அதில் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கொள்கைகளையுடைய சைவம் வைணவம் இம்மதங்களின்

நறிப்புகளும் காணப்படவில்லை. வைதிகசமயத்தை ஒட்டிய *குறிப்புகளே ஆங்காங்கு காணப்படுகின்றன.

"நூலே கரகம் முக்கோல் மணையே யாயுங்காலை
யந்தணர்க்குரிய." (தொல்-பொருள்-மரபியல். 70)

அந்தணருக்குரிய இலக்கணம் கூறவந்த இந்த சூத்திரத்திற்கு, "முந்நூலும், குண்டிகையும், முக்கோலும் ஆமை மணையும் (கூர்மாசனம்) போல்வன அந்தணர்க்கு உரிய" எனப் பொருள் சொல்லப்படுகிறது. இவற்றில் முக்கோல் என்பது அரி, அயன், அரன் என்னும் மூவரும் ஒன்றே என்ற தத்வத்தைக் குறிப்பிடுவதாகக் கலித்தொகையில் நச்சினார்க்கினியர் விளக்கியிருக்கிறார். "உறியிலே தங்கிய கமண்டலத்தையும். அரி, அயன், அரன்

---

*" எல்லா வெழுத்தும் வெளிப்படக்கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடு வழி யுண்ர்ச்சி வாரத்
தகழ்தெழுவளி யிசையரி றபநாடி
யளபிற் கோடலந்தணர் மறைத்தே
யஃதி வணு வலாதெழுந்து புறத்திசைக்கு
மெய் தெரிவளியிசையளவு நுவன்றசினே"

[தொல்காப்பியம் எழுத்ததிகாரம் முதலாவது பிறப்பியல்] இதன் பொருளாவது— "தமிழ் எழுத்துக்கள் உந்தியினின்றெழும் காற்றாற்பிறப்பன, வடமொழி யெழுத்துக்கள் உந்தியினின்றும் மூலாதாரத்தினின்றும் எழும் ஓசையாற் பிறப்பன, அவற்றின் ஓசையையும் மாத்திரைகளையும் அந்தணர்களது மறையிற்காணலாம். அதையிந்நூலில் சொல்ல இயலாது, உந்தியினின்று பிறக்கும் எழுத்துக்களின் மாத்திரைகளையே கூறினேன்."

" ஐம்பதெழுத்தே அனைத்தும் வேதங்களும்
ஐம்பதெழுத்தே அனைத்தாகமங் களும்
ஐம்பதெழுத்தேயு மாவதறிந்த பின்
ஐம்பதெழுத்தும் போய் அஞ்செழுத்தாமே."

என்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோலையும், முறைமைப் படத் தோளிலே வைத்து" என்பது அவ்வுரைப்பகுதி, அந்தணர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் துறவறமானது பகூதகம், குபீசகம், ஹம்சம், பரமஹம்சமெனை நால்வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது, அவற்றுள் முதலிரண்டு சன்யாச முறைகளுக்குச் சிகையும், முக்கோலும், மணியும், கரகமும் உண்டு. இக்காலம் நான்காவதான பரமஹம்ச மொன்றே வழக்கத்திலிருக்கிறது. நான்கு முறைகளும் வழக்கத்திலிருந்த அக்காலத்துத் துறவிகளில் முதலிரண்டு ஆச்ரமிகளே அதிகமாக யிருந்திருப்பா ராகையாலும், அவர்கள் இல்லறத்தாரைக் காட்டிலும் மதிப்பு மிகுந்தவராயிருந்திருப்பார்க ளாகையாலும் பொதுவாக அந்தணச் சின்னங்களைக் கூறும்பொழுது அவ்வாச்ரமிகளுடைய சின்னங்களே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இக்குறிப்பைக்கொண்டும் மும்மூர்த்திகளுக்கும் அபேதத்தையே காணும் அத்வைதக் கொள்கையே பண்டைய தமிழ் நாட்டுக் கொள்கை என்பதும் பெறப்படுகிறது,

இத்தகைய உயர்ந்த ஞானமார்க்கத்திற்கு அடுத்தபடியாகக் கடவுளை உருவத்துடன் தியானிப்பவர்கள், கடவுள் உருவத்துடன் வீற்றிருக்கும் வைகுண்டம் போன்ற உலகையெய்தி அங்கு நீடு வாழ்வார் என்பதையும் திருவள்ளுவர் விளக்கி யிருக்கிறார்.

"மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார் (3)."

வைகுண்டலோகத்தை மற்றோரிடத்தில், "தாமரைக் கண்ணனுலகு" (107) என்பதால் குறிக்கிறார். "அடியளந்தான், தாமரைக்கண்ணன்" என்னும் சொற்களை அவர் வழங்குதலால் உபாசனை மார்க்கத்தில் அவர் வழிபட்ட கடவுள் ஸ்ரீமந்நாராயணன் என்று தோன்றுகிறது.

ஸ்ரீ பாகவதத்தை உபதேசித்த சுக முனிவரைப்போலவும், ஹிந்தி ராமாயண மியற்றிய துளசிதாசரைப் போலவும், சிவாஜியின் குருவான சமர்த்த ராமதாசரைப் போலவும், திருவள்ளுவரும் ஒரு வைஷ்ணவ அத்வைதியான ஜீவன் முக்தராயிருந்திருக்க வேண்டும்.

பார்ப்பான் வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். அதை மறக்கலாகாது, இது அவனுக்கு ஒரு பெரியகடமை, இதைவிட பெரியகடமை அவர் பிறப்பிற்குரிய ஒழுக்கத்தில் தவறுதிருப்பது என்பது வள்ளுவருள்ளம்.

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக் கங்குன்றக் கெடும். (41)"

பசுக்களுக்கு எவ்வித குறைவு மேற்படாமலும், அந்தணர்கள், வேதாத்யயனம், அதைச் சொல்லிவைத்தல், யக்ஞம் செய்தல், செய்வித்தல், தானம் (கொடுத்தல்), வாங்கிக்கொள்ளல் இவ்வறு தொழில்களையும் சரிவர நடத்திக்கொண்டும், கற்ற சாஸ்திரங்களை மறக்காமல் வைத்துக் கொள்ளும் படியாகவும் அரசன் ரக்ஷிக்க வேண்டுமென்பதும் நாயனுர் கருத்து.

"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவானெனின் (87)"

[ஶஸ்த்ரேண ரக்ஷிதே க்ஷேமே ஶாஸ்த்ரா ஹியாஸ: ப்ரவர்த்ததே.]

அந்தணர்களுடைய அறுதொழில்களில் வேள்வி செய்வதொன்று, ஆயிரம் வேள்வி செய்தால் பெறும் பயனை துறவறத்தார் மாமிசம் தின்னுமையினுலேயே பெறுவர் என்று துறவியலில்—

"அவிசொரிந் தாயிரம் வேட்டலினொன்ற
னுயிர் செகுத்துண்ணுமை நன்று (52)"

என்னும் குறளில் கூறியிருக்கிறார்.

சன்னியாசிகளையும் வானப்ரஸ்தர்களையும்,

"மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்"

என்னும் குறளில் மழித்தலும் நீட்டலும் என்னும் சொற்களால் கூறியிருக்கிறார். மழித்தல்—மொட்டையடித்துக் கொள்ளல், நீட்டல்—தீக்ஷைவளர்த்தல்.

வானோர்க்குப் பூஜனை சிறப்போடு செய்யவேண்டியது உயர்ந்த தர்மமென்பதை—

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு (8)"

என்னும் குறளில் கூறுகிறார். ஸ்திரீகளுக்குப் பதிவ்ரதா தர்மத்தைத் தெய்வத்திற்குச் செய்யும் பூசனையை விட உயர்ந்ததாகக் கொள்ளுகிறார்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை (21)"

தெய்வ வழி பாட்டைவிட பித்ருதேவதைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை முதலில் வைத்து உயர்த்துகிறார்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்பறலை (18)"

இன்று நமது வீடுகளில் சிராத்த தினங்களில் சிராத்தத்தை முடித்து விட்டே தேவபூஜை செய்கிறோம்.

திருவள்ளுவர் காணும் வைசிய தர்மத்தை ஒவ்வொருவரும் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டால் இக்காலத்தில்

மலிந்து கிடக்கும் கள்ளமார்க்கட்டும் லஞ்சத்தொழிலும் ஒழிவதோடு, பஞ்சமும், கொடுமையும், பிணியும் நம் நாட்டை விட்டகலும். மங்களம் பொங்கும்.

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந்தம போற் செயின் (36)"

"சமன்செய்து சீர்தூக்குங் கோல் போலமைந்தொ
ருபாற் கோடாமை சான்றோர்க்கணி (35)".

# திருக்குறள் நாற்றெட்டு

1\. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்தெல்லாம் = எல்லா எழுத்துக்களும், அகர முதல = அகரத்தை முதலெழுத்தாக உடையன: (அது போல), உலகு = உலகம், ஆதிபகவன் முதற்று = கடவுளை முதலாக உடையது, ஏ = அசை.

எல்லா எழுத்துக்களுக்கும் எப்படி அகரம் முதலெழுத்தோ, அப்படியே உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் கடவுள் முதற்பொருள் என்பது கருத்து. அதிலிருந்து கடவுள் எனப்படும் பரம்பொருள் ஒன்று உண்டு என்பது பெறப்பட்டது, காரணமின்றிக் காரியமில்லாமையின்.

அகரமுதல—அகரமாகிய முதல் என்பது அகரமுதல் எனத் தொகையாகும். தொகை என்பதை வடமொழியில் ஸமாஸம் என்பர். அகரமுதல் என்பதற்குப் பலவின் பால்விகுதி ஆகிய அ சேர்க்கப்பட, அகரமுதல எனக் குறிப்புவினைமுற்று ஆயிற்று. எழுத்து என்பது ஈண்டுப் பன்மை. ஆதிபகவன் என்பது ஆதியாகிய

பகவன் என விரியும். ஆதி என்பதும் பகவன் என்பதும் வடமொழிச்சொற்களின் தற்பவம். பகம் என்ற சொல் ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, திரு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறினையுங் குறிக்கும்; பகத்தை யுடையவன் பகவான். பகவான் என்பதன் இடைக்குறை பகவன் என்பது. பகவர் பலர் ஆதலாலும், அவருள் முதல்வர் கடவுள் ஆதலாலும் கடவுளைக் குறிக்க ஆதி பகவன் என ஆசிரியர் வழங்கினர். "ஆதிபகவன் ஆகிய முதல்" என்பது ஆதிபகவன்முதல் என ஆயிற்று; அதற்கு து விகுதி சேர்க்க, ஆதிபகவன்முதற்று என்ற குறிப்புவினை வந்தது. உலகு என்பது "உலகம்" என்பதின் கடைக்குறை; அச்சொல் பல பொருள்களைக் குறிப்பினும், சொல்வகையான் ஒருமையாகலான் ஒருமை வினையைக் கொண்டது.

"அகரத்திற்குத் தலைமை....நாதமாத்திரையாகிய இயல்பால் பிறத்தலானும்" எனப் பரிமேலழகர் கூறுவர். ருக்வேதம் ஐதரேயஆரண்யகம் மூன்றாவது அத்தியாயம் ஆறாவது கண்டம் அகரமே 'சர்வவாக்கும். அந்த அகரமே ஸ்பர்சங்களாலும் (வாய்க்குள்ளிருக்கும் பல உறுப்புகள் ஒன்றோடொன்று தொட்டு சேர்வதினாலும்), ஊஷ்மங்களினாலும் (அவ்வுறுப்புகள் நேரே சேராமல் சற்று விலகி இருந்து கொண்டு இடையில் கொஞ்சம் காற்று விட்டு ஊதுவதினாலும்), வெளியாக்கப்பட்டு ககரம், மகரம், ஸகரம் முதலிய பல்வேறு எழுத்துருவங்களை அடைகின்றது' எனப்பொருள் படும்படி கூறுகிறது. "ஏக - ஏவ - ஆகாரோ - யஶா - ஸ-ஸி ஷித்ரம் - க்ருஹச் ஷித்ரம் இதி * * * ஏவம்-ஏகம் - ஏவ- அகார :—க, வ, ம - இத்யாதிஷி :—உபாயிஷி:—அனே

கத்வம் - ப்ராப்ய - * * *" என்பது ஸாயணர் இயற்றிய வேதபாஷ்யம். ஆகாயத்தின் குணமாகிய நாதம் ஒன்றே நாகஸ்வரம், புல்லான்குழல், வீணை, தம்பட்டை முதலிய கருவிகளுக்கு ஏற்றவாறு ஒலிப்பது போலவும், பஞ்ச லோகங்கள் உருக்குக்குழாய்களின் தன்மைக் கேற்ப நடராஜவிக்ரஹம், விஷ்ணுவிக்ரஹம் முதலிய பல வேறுவடிவங்களை அடைவதைப் போலவும் இயல்பாகிய நாதமாத்திரையாம் அகரமும் உதடு, நா, பல், அண்ணம் இவற்றின் தொழிலிற்கு ஏற்பப பல வேறு எழுத்துக்களாய் வருகின்றது.

அதற்கு மற்றொரு காரணம் "அக்ஷரங்களுள் அகரம் ஆகின்றேன் யான் (அக்ஷராணும் - அகாரோ - அஸ்மி - பகவத் கீதை - 10 வது அத்தியாயம் 33 வது சுலோகம்)" எனப் பகவத் கீதையில் கண்ணன் கூறியது மாகுமென்பர்; அப்பகவத் கீதைத்தொடரின் கருத்து "எழுத்துக்களுள் தன்னை அகரமாகஉபாஸிக்கவேண்டும்" என ஆதிசங்கராசாரியசுவாமிகள் கூறி இருத்தலின் அவர்கூற்று ஆராய்தற்பாலது.

உலகில் உண்டாக்கப்படும் காரியப்பொருள்களுக் கெல்லாம் பொதுவாக முதற்காரணம் எனப்படும் உபாதானகாரணமொன்றும், நிமித்தகாரணம் எனப்படும் மற்றொரு காரணமும் இருப்பதைக் காண்கிறோம். "ஒரு மூலமில்லாமல் இவ்வுலகமிராது" எனச் சாந்தோக்கிய உபநிஷத்திற் சொல்லப்படிருக்கிறது (சா - உப - அத்யா 6 கண்டம் 8, மந்த்ரம் 3). உதாரணமாக மட்கலத்திற்கு மண் முதல்காரணம் (அதாவது உபாதானகாரணம்), குயவன் நிமித்தகாரணம். ஆனால் பகவான் உலகத்தைச் சிருஷ்டிக்கும்போது அவர் இரண்டற்ற பரம்

பொருளாகையால் தானே முதற்காரணமு மாகினார் என்பது திருநான்மறைமுடியான வேதாந்தசாஸ்திரத்தின் கருத்து. இக்கருத்தையே "ஆதிபகவன் முதற்றே வுலகு" என்னு மிடத்தில் முதற்காரணத்தைக் குறிக்கும் முதற்றே என்றும் சொல்லால் உணர்த்துகிறார்போலும். இதனால் "தேவர் குறளும் திருநான்மறைமுடியும் * * * ஒரு வாசகமென்றுணர்" என்னும் ஔவையாரின் வாக்கின் உண்மை வெளியாகிறது. எல்லா உலகும் ஆவாய் நீயே என்னும் தத்துவத்தையே இக்குறள் உவமை வாயிலாகப் போதிக்கிறது. "கடவுள் எல்லா சராசரப் பொருளிலும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறுபோல் அகரம் எல்லா எழுத்துக்களிலும் கலந்து தனியாய் நிற்கும்" என்று தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் மெய்யினியக்கம் அகரமொடு சிவணும் என்னும் சூத்திரத்திற்கு உரை எழுதும் சமயத்தில் சொல்லியிருக்கிறார் நச்சினார்க்கினியர். அதற்குப் பலமாக முன்னரே கூறிய படி அக்ஷரங்களுக்குள் அகரமாகின்றேன் யான் என்று கண்ணன் சொல்வதை எடுத்துக் காட்டியிருக்கிறார். அதே 10 வது அத்தியாயத்தில் 20 வது சுலோகத்தில் "ஸமஸ்த பூதங்களின் ஹிருதயத்தில் இருக்கிற ஆத்மா நானே. பூதங்களுக்கு ஆதியும் ஸ்திதியும் அந்தமும் நானே (அஹம் - ஆத்மா - குடாகேச - ஸர்வ பூத ஆசயஸ்தித: | அஹம்-ஆதிஃச - மத்யம் ச - பூதானாம்- அந்த - ஏவ - ச)" என்று கண்ணன் கூறி 39 வது சுலோகத்தில் "சகலபூதங்களுக்கும் காரணம் அல்லது விதை எதுவோ அது நான். ஜங்கமம், ஸ்தாவரம், ஆகிய எந்த பூதமிருக்கிறதோ அது என்னையன்றி வேறில்லை; யச்சாபி- ஸர்வ - பூதானாம் - பீஜம் - தத்- அஹம் - அர்ஜுன |

ஈ-தத் - அஸ்தி - வினா -யத் - ஸ்யாத்-மயா- ஹ-ஏ தம் - சரா சரம்" என்று சொல்லி முடிக்கிறார். ஆகையினால் கண்ணன் அதிஷ்டானம்பற்றித் தன்னைச் சராசரப்பொருள்களுக்கு முதற்காரணமாகக் கூறினார் என்பது உறுதியாகிறது. ஆகையால் நச்சினார்க்கினியர் அகரம் மற்ற எழுத்துக்களில் கலந்து நிற்றலுக்குக் கடவுள் மற்றசராசரங்களில் கலந்து நிற்பதை உவமையாக எடுத்தது முதற்காரணம்பற்றியே.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

(உலகு) = உலகத்தார், வாலறிவனற்றாள் = சுத்தமான அறிவினையுடைய கடவுளின் திருவடிகளை, தொழார் எனின் = வணங்காம லிருந்தால், (அவர்) (எழுத்து = நூல்களை) கற்றதனால் = படித்ததால், ஆய = ஆகிய, பயன் = பலன், என் கொல் = என்னமோ? (ஒன்றுமில்லை என்பது கருத்து).

உலகு, எழுத்து என்பன முதற்குறளிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன. வடமொழி நூலாசிரியர் அனுவர்த்தித்தன என்ற சொல்லை வழங்குமிடத்து தமிழுரைகாரர்கள் அதிகரித்தன என்ற சொல்லை வழங்குகின்றனர். சுருங்கச்சொல்லலே திருக்குறளாசிரியரது கருத்தாதலின், கூறிய சொற்களைப் பின்னரும் கூறாது குறட்களை அவ்வாறு அமைத்தனர். வடமொழியில் சூத்திரக்காரர்கள் கொண்ட முறையும் இதுவே ஆகும்.

கற்றதனால் என்னுமிடத்து ஆல் உருபு வழங்கப்பட்டது. அது தொல்காப்பியத்திற் கூறப்பட்ட ஆன் உருபின் விகாரம். ஆய என்பது ஆகிய என்பதின் இடைக்

குறை. பயன் என்பது வடமொழிச்சொல்லின் தற்பவம். தாள் என்பது ஈண்டுப் பன்மை. தொழார் என்பது செய்யுளோசைக்காக தொழாஅர் என ஆயிற்று. எழுத்து என்பது எழுத்துக்களால் ஆகிய நூல்களைக் குறித்தலான் ஆகுபெயர். ஆகுபெயர் என்பதை வடமொழியில் லக்ஷணம் என்ற சொல்லால் வழங்குவர்.

மறைமுடியான தைத்திரிய உபனிஷத்து ஆகாயம் முதலான உலகத்தின் படைப்பைக் கூறுமிடத்து, அப்படைப்பிற்குக் காரணமான ஆன்மாவை ஸத்யக்ஞான வடிவமாகக் கூறுகிறது. இவ்வுண்மையை ஆதிபகவன் முதற்றே யுலகு என்னும் வாக்கியத்திற்கு அடுத்த குறளிற் காணப்படும் வாலறிவன் என்னும் சொல்லும் உணர்த்துகிறது. சாஸ்திரங்களைக் கற்றதின் பயன் கடவுளின் சரணங்களைத் தொழுது மறுஜன்ம மில்லாமல் செய்துகொள்வதுதான் எனப் பொருள் படும்படி இக்குறளின் கருத்தைப் பரிமேலழகர் வெளியிட்டிருக்கிறார். இக்கருத்தையே ஸ்ரீபாகவதத்தில் 3 வது ஸ்கந்தத்தில் விதுரமைத்ரேயஸம்வாதத்தில்

"ஶ்ருதஸ்ய-பும்ஸாம்-ஸுசிரஶ்ரவஸ்ய - நநு - அஞ்ஜஸா ஸூரிபி:—ஈடிதோ - ர்த்த: | யத் - தத் - குணாநுச்ரவணம் - முகுந்த - பாதாரவிந்தம் - ஹ்ருதயேஷு - யேஷாம்" என்னும் (3-13-4) ஶ்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

மலர்மிசை = (உள்ளமாகிய) தாமரைமலரின் கண், ஏகினான் = (அன்பால் நினைப்பவர் நினைத்த வடிவோடு

விரைந்து) சென்றடைந்தவனுடைய, மாண் அடி = மாட்சிமைப்பட்ட அடிகளை, சேர்ந்தார் = இடைவிடாது தியாணிப்பவர், நிலமிசை = (பரமாத்மாவுடைய) உலகத்தில் நீடு = வெகுகாலம், வாழ்வார் = இருப்பார்.

காரியபிரம்மம் எனப்படும் ஸகுணபரமாத்மாவை உபாஸனை செய்வோர் அக்காரியப்பிரம்மலோகத்தில் மகாப்பிரளயபர்யந்தம் இருப்பர் என்ற வேதாந்தக் கொள்கையை இக்குறள் கூறுகிறது.

மலர்மிசை என்னும் சொல் காரியப்பிரம்மமாகும் த்ரிமூர்த்திகளில் சேர்ந்த திருமாலைத் துதிக்கும் "மனனக - மலமற - மலர் மிசை யெழுதரு - மனனுணர் - வளவிலன்" என்னும் நம்மாழ்வார் (திருவாய்மொழி 1-1-2) பாசுரத்தில் காணப்படுகிறது. இதை அனுசரித்து மலர் மிசையேகினன் என்னும் பதத்திற்குத் திருமாலெனப் பொருள் கொள்ளலாம். அவ்விதம் கொள்ளின் இந் நூலாசிரியர் மேலே கடவுளைக் குறிக்குமிடத்து, "தாமரைக்கண்ணன், உலகளந்தான்" என்னும் பதங்களை ப்ரயோகிப்பதும் பொருந்தும். ஸ்ரீ பாகவதத்திலும் முதல் ஸ்கந்தத்தில் நாரதர் தன்வரலாற்றைக் கூறுமிடத்து,

"ஆஹூத-இவ-மே-சீக்ரம்-தர்ஶனம்-யாதி-சேதஸி"

(1-6-34) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பொருள் :-விளிக்கப்படும் ஒருவன் விரைந்து செல்வது போல் பகவான் உள்ளத்தின்கண் (உள்ளத்தாமரையின் கண்) தர்ஶனம் கொடுக்க விரைந்துசெல்லுகிறான்-என்றவாறு. இக்குறளிலுள்ள மலர் மிசை யேகினன் என்னும் சொற்றொடருக்கு "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைத்த வடிவோடு விரைந்து

சென்றவன்'' என்று பரிமேலழகர் உரைசெய்தது மேற் கூறப்பட்ட பாகவதஸ்லோகத்தின் கருத்தை அனு சரித்திருக்கிறது.

மலர் என்பதற்குத் தாமரைபோன்ற ஹிருதயம்' என்றும் பொருள் கூறுவர்.

"மலர்மிசை என்பதை பூமேல் நடந்தான் என் பதோர் பெயர்பற்றிப் பிறிதொரு கடவுட்கு ஏற்றுவா ரும் உளர்'' என்று பரிமேலழகர் கூறியிருக்கிறார். 'பிறி தொரு கடவுள்' என்பதால் ஜைனக்கடவுளாம் அரு கனையே அவர் குறிப்பிடுகிறார். ஆனால் திருவள்ளுவர் திருக்குறள்நூல் முழுவதுமே வேதக்கொள்கையையே தழுவிவருவதாலும், அருகன் என்னும்சொல் ருக்வேதத் தில் பஞ்சருத்ரத்தில் (2-வது அஷ்டகம், 7 வது அத்தி யாயம், 17 வது வர்க்கம்) மூன்று இடங்களில் ஈசனைக் குறித்து ப்ரயோகிக்கப்பட்டிருப்பதாலும், அச்சொல் வேதக்கடவுளாம் சிவனையே குறிப்பதாகக்கொள்ளலாம். மற்றும் அக்காலத்தில் அனாதியாய் உள்ள வேதத்தி லுள்ள சிவனையே ஜைனர்கள் அருகக்கடவுளாகத் தொழுது வந்தார்கள் என்பதற்கு ஜைனநூலிலுமாதார முளது. ஜைனசமயத்தினராகிய முனைப்பாடியார் என்பவ ரால் இயற்றப்பட அறநெறிச்சாரம் என்னும் நூலில் "அவன்கொல்-இவன் கொல்-என்றையப்படாதே-சிவன் கண்ணே செய்ம்மின்கன் - சிந்தை சிவன்றானும் - நின்று கால்சீக்கும்-நிழறிகழும் - பிண்டிக்கீழ் - வென்றிச் சீர்முக் குடையான் வேந்து''என்னும்219-வது செய்யுளில்''சிவன் பாலே சிந்தையை நிறுத்துங்கள், அச்சிவனும் அசோக மரத்தின் கீழ் நின்று குடைகளுடையவனான அருகனே யாவான்'' என்று சொல்லியிருக்கிறார்.

சிவனையும் திருமாலையும் ஒன்றாகப் பாவித்து வழிபடுவது மகாபாரதம் திருவாய்மொழி முதலிய வைதிக நூல்களில் ப்ரசித்தமாயிருக்கிறது. மேற்காட்டியபடி ஜைன நூலில் சிவனையும் அருகனையும் ஒன்றாக வழிபடுவதையும் காண்கிறோம். மகாநாடகம் என்னும் பண்டைய நூலிலும் "யம்-சைவாஃ - ஸமுபாஸதே- சிவ - இதி * * * அருகன் - இதி - அத - ஜைனசாஸந - ரதாஃ * * ஸோயம் - வோ - வியயாது - வாஞ்சித - பலம் - த்ரை - லோக்கிய நாத : ஹரி :-" என்று எல்லாமதக்கடவுளையும் ஒன்றாக வழிபட்ட முறை காணப்பட்டிருக்கிறது. 1300 வருஷங்களுக்கு முன் சக்கரவர்த்தியாயிருந்த "ஸ்ரீ ஹர்ஷர்" என்ற மகாகவி மூன்று நாடகங்களியற்றியிருக்கிறார். அவற்றுள் ரத்னாவளி என்னும் நாடகத்தில் ஆரம்பத்தில் நாந்திச்லோகங்களில் சிவனையும், பார்வதியையும், விஷ்ணுவையும், நாகாநந்தம் என்னும் நாடகத்தில் ஜைனக் கடவுளையும் துதித்திருக்கிறார்.

திருவள்ளுவரும் அக்காலத்தவராதலால் வேதக் கொள்கையை அனுசரித்தே கடவுளை இம்மூன்று முறைகளிலும் துதித்திருக்கக் கூடும்.

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
 கியாண்டு மிடும்பை யில.

வேண்டுதல் வேண்டாமையிலரன் அடிசேர்ந்தார்க்கு = விருப்பம், வெறுப்பு அற்ற கடவுளின் அடிகளை இடைவிடாது தியானிப்பவர்க்கு, யாண்டும் = ஒருபொழுதும், இடும்பை = பிறவித்துன்பங்கள், இல = இல்லை.

இல என்பது பன்மையாதலின் இடும்பை என்பது பன்மைப்பெயராகும். "சரீரமற்றவரை ப்ரியம், அப்ரியம் இவ்விரண்டும் அணுகா" என்னும் சாந்தோக்கிய உபநிஷத் (8-12-1) தொடரும், "என்னையடைந்த மகாத்மாக்கள் துக்கத்திற்கு இருப்பிடமாயும் சாசுவத மற்றதாயும் உள்ள மறுபிறப்பை யடையார்கள்" (மாம் - உபேத்ய - புனர் - ஜன்ம - து:கா³லயம் - அஶாஶ்வதம் - ந - ஆப்நுவந்தி - மஹாத்மான:- ஸம்ஸித்³தி⁴ம் - பரமாம் - க³தா:) என்றும் அர்த்தமுள்ள பகவத்கீதை (8-15) தொடரும் இங்கு குறிக்கத்தக்கன.

5. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

பொறி - வாயில் - ஐந்து - அவித்தான் - பொய் தீர் - ஒழுக்கநெறி - நின்றார் = இந்திரியங்களின் மூலம் நேரும் ஐவகைப்பொருள்களின் நுகர்ச்சியைப் போக்கிய கடவுளின் உண்மையான தர்மமார்க்கத்தில் அசைவற்று நிற்பவர், நீடுவாழ்வார் = முக்தியடைவர்.

மூன்றாம் குறளில் நிலமிசை என ஆசிரியர் கூறியிருத்தலானும், இக்குறளில் அச்சொல்லைக் கூறாமையாலும், அக்குறள் காரியப்பிரம்மலோகத்தைக் குறிக்கின்றது என்றும், இக்குறள் முக்தியையே குறிக்கின்றது என்றும் கொள்ளவேண்டும். ஆசிரியர் ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் பிருஹதாரண்யகோபனிஷத் 4 வது அத்தியாய பாஷ்யத்தில் "ப்ரஹ்மலோக:" என்பதற்கு "ப்ரம்மணோ லோக: (ப்ரம்மாவினுடையலோகம்)" என்றும் "ப்ரஹ்மைவ லோக: (ப்ரம்மமாகிய லோகம்)" என்றும் இருவகையாக விரி கூறியிருத்தல் நோக்கத்தக்கது. "ப்ரஹ்மைவ

லோக:" என்பதை ஒட்டியே சிறப்பென்னும் செம்பொருள் என இவ்வாசிரியர் பின்னர் (69 ம் குறள்) கூறுகின்றார்: ப்ரஹ்மைவ லோக: என்பது அத்வைதக்கொள்கையேயாகும். "ஆராவியற்கையவா நீப்பின்" என்ற (71 வது) குறளில் கூறப்பட்ட ஜீவன்முக்தியும் அத்வைதக்கொள்கையே. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும்" என (66 வது) குறளில் கூறப்படும் அபியாஸமும்" அத்வைதக்கொள்கையே. "ஶப்தம், ஸ்பர்ஶம், ரூபம், மாறுபாடு, ரஸம், கந்தம் இவை எப்போதும் இல்லாதவனும், ஆதி, அந்தம் இவை அற்றவனுமான கடவுளைத் தியானிப்பவர் யமனிடமிருந்து விடப்படுகின்றனர்" என்ற கடோபனிஷத் (1-3-15) தொடரும் "அஶப்தம்-அரஸஸ்பர்ஶம்-அஶப்தம்-அபரிக்ரஹம்.! அரூபம்-அரஸி ஜ்ஞேயம்-த்ருஷ்ட்வா - ஆத்மானம் - விமுச்யதே" என்னும் மகாபாரதம் அசுவமேதபர்வம் 20 வது அத்யாயம் 10 வது ச்லோகமும் ஒப்பிடத்தக்கன.

> 6. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
> ரிறைவ னடிசேரா தார்.

இறைவனடி = கடவுளின் திருவடிகளை, (சேர்ந்தார் = இடைவிடாது தியானிப்பவர்), பிறவிப்பெருங்கடல் = பிறவியாகிய பெருங்கடலை, நீந்துவர் = தாண்டுவர்; சேராதார் = தியானிக்காதவர், (அதனை) நீந்தார் = தாண்ட மாட்டார்.

சேர்ந்தார் என்பது ப்ரகரணத்தால் கிடைக்கின்றது. "யாரைக்கண்டு யதிகள் பிறப்பு இறப்பு இவற்றால் விடுபட்டவர்களாகி ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டுகிறார்களோ" என்கிற பொருளுள்ள, "யம் - த்ருஷ்ட்வா - யதய:- தாத - ந - ஶோசந்தி - கத - ஜ்வரா: ஜன்ம

ம்ருத்யு - ஹயாத்-முக்தா- தீர்ணா :—ஸம்ஸார - ஸாகரம்" என்னும் மஹாபாரதம் அனுஶாஸனபர்வம் 167 அத்யாயம் 42 வது சுலோகம் கூறும். அதனையே "ஸம்ஸார - ஸாகரம் - கோரம் - தரிஷ்யந்தி - ஸுதுஸ்தரம்" என்னும் மகாபாரதம் அச்வமேதபர்வம் 19 வது அத்யாயம் 33 வது சுலோகமும் கூறும்.

7. வானின் றுலகம் வழங்கி வருதலான்
தானமிழ்த மென்றுணற் பாற்று.

வானின்று = மழை காரணமாக, உலகம் = உலகத்துள்ள பொருள்கள், வழங்கி வருதலான்தான் = ஜீவித்து வருதலாலேயே, அமிழ்தம் = அம்ருதம், என்று, உணரற்பாற்று = உணரத்தகுந்தது.

நீரை வடமொழியில் அம்ருதம் என்ற சொல்லால் வழங்குகின்றனர். அச்சொல்லிற்கு மரணமற்றது என்பது காரணப்பொருள். மழை உலகத்துப்பொருளின் மரணமின்மைக்குக் காரணமாய் இருத்தலின், அதனை அச்சொல்லால் குறித்தனர் என இவ்வாசிரியர் கருதுகின்றனர். வடமொழி அம்ர்தம் என்ற சொல் தமிழில் அமிழ்தம், அமிழ்து, அமிர்தம், அமிர்து, அமுதம் அமுது என வழங்குகிறது.

வானின்று என்றவிடத்து நின்று என்பது ஏதுப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைச்சொல்லுருபு எனக் கொள்ளல் தகும்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

வானம் = மழை, வறக்குமேல் = பெய்யாவிடின் ஈண்டு = இப்பூவுலகிலிருந்து, வானோர்க்கு = தேவர்க்கு,

சிறப்பொடு = சிறப்பாக, பூசனை = பூசனம், செல்லாது = நடவாது.

வானோர்க்குப் பூசனையாவது யாகம், ஹோமம் முதலியன. வானோர் என்பதிலுள்ள, "வான்" என்பது ஸ்வர்க்கத்தைக் குறிக்கும்.

ஸ்ரீபகவத்கீதை 3 வது அத்தியாயத்தில் "தேவான்-ஹ ரீ வய த - அனேன - தே - தேவா - ஹாவயந்து-வ:—பரஸ்பரம் - ஹாவயந்த:—ஸ்ரேய:—பரம்-அவாப்ஸ்யது - இஷ்டான் - ஹோமான் - ஹி - வ:—தேவா:—தாஸ்யந்தே-யஜ்ஞ - ஹ ாவிதா: அன்னாதி-ஹவந்தி - ஹூதானி - பர்ஜன்யாத் - அன்ன ஸம்ஹவ:—யஜ்ஞாத் - ஹவதி - பர்ஜன்ய:—யஜ்ஞ:— கர்ம - ஸமுத்ஹவ: ॥" என்னும் 11, 12, 14 வது ச்லோகங்களில் வானவர் மானிடரை மழையாலும், மானிடர் வானவரை யஜ்ஞத்தாலும் பரஸ்பரம் உபசரித்துக் கொள்ளுவதால் இருவரும் நிரந்தரமான நன்மையை அடைவார்கள் எனப் பொருள்பட கூறியிருக்கிறது.

9. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

வானம் = மழை, வழங்காது எனின் = பெய்யாவிடின், வியனுலகம் = அகன்ற உலகத்தின் கண், தானம், தவம் = தபஸ், இரண்டும், தங்கா = உண்டாகா.

இக்குறளினின்று வெளியாகும் நாயனார்கருத்தாவது:—வானின்று பெய்யும் மழையின் உத்தேசம் மக்கள் உயிர் பிழைத்திருப்பது முக்கியமல்ல என்பதே; மக்கள் அவரவர்கள் அதிகாரத்திற்குத் தகுந்தபடி தானமோ, தவமோ செய்யாரெனின் அவர்கள் உயிர் பிழைத்திருப்

பது வீணே. இக்கருத்தையே "த்வா-வம்ஹஸி-நிவேஷ்டவ்யெள-கண்டே-வெத்ய:வா-த்ருஷாம்-ஷிலாம்-யுனவந்தம் அஹாதாரம்-ஹிரித்ரம்ச அதபஸ்வினம்" என்னும் மஹாபாரதம், உத்யோகபர்வம்-33 வது அத்யாயம் 67 - வது சுலோகம் கூறுகிறது. அந்த சுலோகத்தில் இப்பொருள் சற்று கடுமையாகவே கூறப்பட்டிருக்கிறது. தானம் செய்யாத பணக்காரனையும் தவம் செய்யாத தரித்திரனையும் கழுத்தில் கல்லைக்கட்டி சமுத்திரத்தில் விட்டு விடலாம் என்று கூறுகிறது. இதனால் ஈகை இல்லாத பணக்காரனும் தவம் செய்யாத ஏழையும் பூதேவிக்கு பாரமே என்னும் தத்துவம் குறிப்பிடப்படுகிறது. அவ்விதம் பாரமாயிருப்பவர்கள் உலகில் அதிகமாகும் பொழுதுதான் யுத்தங்கள், கலஹங்கள், கொள்ளைநோய்கள் முதலியவைகளின் மூலம் பூபாரம் குறைக்கப்படுகிறது. ஆகையால் அவைகளுக்கெல்லாம் மருந்து தானமும் தவமுமே.

10· இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

இருமைவகை = இம்மை, மறுமை இவ்விரண்டின் தன்மையை, தெரிந்து = ஆராய்ந்து பார்த்து, ஈண்டு = இவ்வுலகத்தில், அறம் பூண்டார் பெருமை = துறவறத்தைக் கொண்டவரின் பெருமை, உலகு = உலகத்தில், பிறங்கிற்று = சிறப்புள்ளது ஆகும்.

இவ்வதிகாரம் நீத்தாரைப்பற்றிக் கூறுதலான் ஈண்டு அறம் என்பது துறவறத்தைக் குறிக்கும். இருமை வகை என்பதற்கு "பிறப்பு வீடு என்னும் இரண்டினது கூறுபாடுகளை" என்று பொருள் கூறுகிறார் பரிமேலழகர்.

11. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங்-காப்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. [பான்

உரன் = மனத்திண்மை, என்னும் = என்ற, தோட்டியால் = சம்மட்டியால், ஓர் ஐந்தும் = ஒப்பற்ற ஐந்து இந்திரியங்களையும், காப்பான் = கெட்ட வழியிற் செல்லாது காப்பவன், வரன் = எல்லாவற்றிற்கும் மிகுந்தது,* என்னும் = எனச்சொல்லப்படும், வைப்பிற்கு = நிலைக்கு, ஓர் வித்தாம் = ஒரு விதை ஆவான்.

இந்திரியங்கள் எவரையும் இழுத்துவிட ஆற்றல் உள்ளமையால் அவை ஒப்பற்றன எனக் கூறப்பட்டது.

"ஐந்து என்பது ஐந்து ஞானேந்திரியங்களை குறிக்கும். உரனைத் தோட்டிக்கு உவமித்தலான், இந்திரியங்களை ஐந்து யானைகளுக்கு உவமிக்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும்". "ப்ரம்மவித் பரத்தை அடைகிறான்" என்ற தைத்திரீய உபனிஷத் (2, 1) தொடரில் பரம் என்பது மோக்ஷத்தைக் குறிந்தலின் "வரன்" என்பதற்கு மோக்ஷம் என்ற பொருள் கூறப்பட்டது.

மனமானது இந்திரியங்களின் வழியாய் எப்போதும் வெளிமுகமாவே சென்று கொண்டிருப்பதினால் தான் தன்னுள்ளே ஜ்வலிக்கும் அகண்ட ஆனந்த ஆத்மப்ரகாசத்தைக் காணாது வீணாகின்றது. இப்பொருள் கடோபனிஷத்தில் (2-1-1) கூறப்பட்டிருக்கிறது.

இக்குறளில் இந்திரியங்களை அடக்குவது வித்து என்று கூறப்படுவதால் இதற்கு அடுத்தபடியான ஸகுண

---

* எல்லாவற்றிற்கும் மிகுந்தது என்பது மோக்ஷத்தைக் குறிக்கும்.

ஈச்வரத்யானம் முளை எனவும், அவர் அருளால் ஏற்படும் ஆத்மஜ்ஞானம் புஷ்பம் எனவும், வரன் என்னும் மோக்ஷமானது பிறவி என்னும் விருக்ஷத்தின் பலனும் பழமாகவும் பெறப்படுகிறது.

*"இந்திரியங்களைத் தத்தம் விஷயத்திலிருந்து மனத்தால் ஒருவன் திருப்பினால் ஆத்மாவில் ஜ்வலிக்கும் ப்ரம்மத்தைப் பார்க்கிறான்

"இந்த்ரியாணி-இந்த்ரியார்த்தேப்ய:—மனஸா-விநிவர்தயேத் ** தத: பஸ்யதி - தத் - ப்ரஹ்ம - ஜ்வலத்-ஆத்மனி - ஸம்ஸ்திதம்" என்னும் மகாபாரதம் அனுசாசன பர்வம் 167 வது அத்தியாயம் 31, 37-ம் சுலோகங்கள் கூறும்.

12\. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

ஐந்தவித்தான் = ஐந்து இந்திரியங்களையும் அடக்கிய துறவியின், ஆற்றல் = சக்திக்கு, அகல்விசும்பு புளார் கோமான் = அகன்ற சுவர்க்கத்தில் உள்ளோர்க்கு அரசனாகிய, இந்திரனே, கரி = சாக்ஷி, சாலும் = பொருந்தும்.

ஈண்டு ஐந்தவித்தான் என்பது இந்திரனை ஆயிரங்கண்ணன் ஆக்கிய கௌதமரையும், இந்திரப் பட்டம் எய்திய நகுஷனைப் பாம்பாக்கிய அகஸ்தியரையும், ஸோமயாகத்தில் ஸோமத்தில் ஒருபாகத்தை அச்வினிதேவதைகளுக்கு இந்திரனைக் கொடுக்கச் செய்த ச்யவனரையும், மருத்தன் யாகத்தில் இந்திரனை வரச் செய்த சம்வர்த்தரையும், பன்னிரு ஆண்டுகளில்

தான் யாகம் செய்ய அப்போது மழைபெய்யாமல் தடுத்த இந்திரனை மழை பெய்யும்படி செய்வித்த அகஸ்தியரையும் குறிக்கும். இக்கதைகளை மகாபாரதம் அநுஶாஸனபர்வம், அச்வமேதபர்வம் முதலியவற்றில் காண்க.

மூவுலகையும் ஆளும் ஐசுவரிய முடையோனுடைய ஆற்றலைவிட பஞ்சேந்திரியங்களையும் அடக்கிய தவசியின் ஆற்றல் பெரிது என்னும் உண்மை இக்குறளினின்றும் பெறப்படுகிறது.

13. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூங்கு
ஆக்க மெவனோ வுயிர்க்கு

உயிர்க்கு = மனிதர்க்கு, சிறப்பு = மோக்ஷத்தை, ஈனும் = தருவதும், செல்வமும் = இம்மைச் செல்வம் மறுமைச்செல்வமாம் சுவர்க்காதி இன்பங்களையும், ஈனும் = தருவதுமான, அறத்தின் = தருமத்தைக் காட்டிலும், ஊங்கு = மேலான, ஆக்கம் = மேன்மையைத் தருவது, எவன் = யாது?

சிறப்பு, செல்வம் என்பன கடோபனிஷத்தில் கூறப்படும் ச்ரேயஸ், ப்ரேயஸ் (1 - 2 - 2) என்பவற்றைக் குறிக்கும்.

சுவர்க்காதிசுகத்தைத் தரும் ப்ரவ்ருத்திதர்மமும் மோக்ஷசுகத்தைக் கொடுக்கும் நிவ்ருத்திதர்மமும் ஆக தர்மமார்க்கம் இரண்டுவிதமென்று சொல்லப்படும் எனப் பொருள்கொண்ட "ஸுகாப்யுதயிகம் சைவ நைஶ்ரேயஸிகமேவ - ச - ப்ரவ்ருத்தம் - ச - நிவ்ருத்தம் - ச - த்விவிதம் - கர்மவைதிகம்" என்னும் மனுஸம்

ருதி 12வது அத்யாயம் 88-வது சுலோகமும் ஈண்டு குறிப்பிடத் தகுந்தது.

14. அன்றறிவா மென்னாதறஞ் செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

(உயிர் = மனிதர்), அன்று = கிழத்தனத்தில், அறம் = தர்மத்தை, அறிவாம் = செய்வோம், என்னாது = என்று நினையாமல், (தருமத்தை), செய்க = (இப்போதே) செய்தல் வேண்டும். அது = அத்தருமத்தின் பயன், பொன்றுங் கால் = சாகும்பொழுது, (அவர்க்கு) பொன்றாத்துணை = அழிவில்லாத துணை, (ஆகும்). மற்று என்பது அசைநிலை.

பரலோகத்தில் மனிதர்க்குச் சகாயமாயிருப்பது தர்மமே என "தர்ம - ஏகோ - மனுஷ்யாணும்-ஸஹாய:-பாரலௌகிக:"—என்னும் மகாபாரதம் அனுசாஸநிகபர்வம் 173-வது அத்யாயம் 16-வது சுலோகம் கூறும். ஸ்தூல சரீரத்தை விட்டு ஜீவன் செல்லும் போது அவனுடைய நற்செயல் தீச்செயல் இவற்றின் பயனே அவனுடன் செல்லுமாகையாலும், எப்போது தனக்கு மரணம் நேரிடும் என்று அறியப்படாமையாலும் அப்போதைக்கப்போதே ஒவ்வொருவரும் தர்மச்செயல்களைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

கல்வியையும் பொருளையும் சம்பாதிக்கும் விஷயத்தில் தான் சிரஞ்ஜீவி என்ற எண்ணத்தைக் கொண்டே அவ்விரண்டையும் சம்பாதித்துக் கொள்ளவேண்டும், தர்மம் செய்யும்போதோ யமன் தன்னைப் பிடித்துவிட்டான் என்று நினைத்துக்கொண்டு உடனே செய்யவேண்டும் எனக் கூறும் "அஜராமரவத் - ப்ராஜ்ஞ: - வித்யாம் - அர்த்தம் - ச - ஸாதயேத் - க்ருஹீத-இவ - கேசேஷு

ஷு - ம்ருத்யுஞ - யர்மம் - ஆசரேத்" என்னும் ச்லோகம் இதன் பொருளேயே கூறுகிறது.

ச்வ: கார்யம் - அத்ய-குர்வீத-பூர்வ-அஹ்நே-ச-அபராஹ்நிகம்
ந-ஹி-ப்ரதீக்ஷதே - ம்ருத்யு:-க்ருதம்-வா-அஸ்ய-ந-வா-அக்ருதம்.
அத்ய-ஏவ-குரு-யத்-ச்ரேய: மா-த்வாம் -கால:-அத்யகா-மஹான்
க:-ஹி-ஜாநாதி-கஸ்ய-அத்ய-ம்ருத்யு:-காலே:-பவிஷ்யதி,
அக்ருதேஷு-ஏவ-கார்யேஷு-ம்ருத்யு:-வை-சம்ப்ரகர்ஷதி.
யுவா-ஏவ-யர்மசீல:-ஸ்யாத்-அநிமித்தம்-ஹி-ஜீவிதம்!

சாந்தி 283—14 16.

கௌமாரே-ஆசரேத் ப்ராஜ்ஞ:-யர்மான்-ஸா ஹவதான்-இஹ
துர்லபம்-மானுஷம் - ஜன்ம-தத்-அபி-அயுருவம்-அர்தயம்

ஸ்ரீமத் பாகவதம் - 7-வது ஸ்கந்தம்.

15. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானெ டூர்ந்தா னிடை.

அறத்தாறு = தர்மத்தின் ப்ரயோஜனம், இதுவென வேண்டா = இது என்று கூறவேண்டாம், அது, சிவிகை = பல்லக்கை, பொறுத்தானேடு = தூக்குகின்றவனேடு ஊர்ந்தானிடை = தூக்கப்படுகின்றவனிடத்தில் (காணப்படும்).

பல்லக்குக்குள் இருக்கின்றவன் தர்மத்தைச் செய்தவன் என்பதும் அதனைத் தூக்குகின்றவர்கள் தர்மத்தைச் செய்யாதவர் என்பதும் வெளிப்படையாக அறியப்படும். "சிலர் சிபிகையைத் தூக்குகின்றனர், சிலர் அதனுள் இருக்கின்றனர்" என "வஹந்தி - சிபிகாம் - அன்யே-யாந்தி அன்யே-சிபிகா ஹதா:" என்று மகாபாரதம் சாந்தி பர்வம் 331-வது அத்யாயம் 42-வது சுலோகம் கூறும்: உலகத்தில் நல்வினை தீவினை இருக்கும்வரை, அதாவது, உலகம் இருக்கும்வரை, மேல்கண்ட வினை

களின் பயனாக மேல் கீழ் நிலைகள் எம்முறையிலாவது இருந்தே தீரும். ஞானிக்கு இருவினைகளும் அழிந்த ஞான்று பொய்யான இவ்வுலகமும் அழியும். உண்மையான ஆன்மா வெளிப்படும்.

16. அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
 புறத்த புகழு மில.

அறத்தான் = தர்மத்தால், வருவதே = பெறப்படுவதே, இன்பம் — இன்பம் (ஆகும்). மற்றெல்லாம் = வேறெல்லாம்,(அதன்)புறத்த = இன்பத்தைத் தருவனவல்ல, புகழும் = கீர்த்தியையும், இல = உடையன வல்ல. இன்பத்தையும் புகழையும் கொடுப்பது தர்மச்செயலேயன்றி வேறில்லை என்பது கருத்து.

"பாவத்தான் வரும் பிறனில்விழைவு முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலின் 'புறத்த' என்றார்" என்கிறார் பரிமேலழகர். பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவானும் "நான் மக்களிடை தர்மத்திற்கு விரோதமில்லாத இன்பமாக அமர்ந்திருக்கிறேன் (த⁴ர்ம-அ விருத்³தோ⁴ — பூ⁴தேஷு - காமோ - அஸ்மி ப⁴ரதர்ஷப⁴ 7-11)" என்றும், "யே-ஹி-ஸம்ஸ்பர்சஜா - போ⁴கா :—து³:க²யோனய:— ஏவ - தே" என்றும் சொல்லியிருக்கிறார்.

17. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்
 நல்லாற்றி னின்ற துணை. [கும்

இல்வாழ்வான் = கிருஹஸ்தன் (இல்லறத்திலிருப்பவன்), என்பான் = என்று சொல்லப்படுவன், இயல்பு = சாஸ்திரமுறையை, உடைய = அனுசரிக்கிற, மூவர்க்

கும் = பிரம்மசாரி, வானப்ரஸ்தன் சன்னியாசி என்கிற மூவர்க்கும், நல்லாற்றின் = தரும ஒழுக்கத்தின் கண், நின்ற = இருக்கின்ற, துணை = துணை (ஆவன்).

கிருஹஸ்தன் மற்ற மூவர்க்கும் உணவு, உடை, வசிக்குமிடம் இவற்றைக் கொடுக்கவேண்டுமென்பது கருத்து.

"கிருஹஸ்தாச்ரமத்தை அண்டி ஏனைய ஆசிரமங்களெல்லா மிருக்கின்றன" என்ற பொருளுள்ள "ஏவம் - மார்ஹஸ்ய்ய - யம் ஆஸ்ரித்ய - வர்தந்தே-இதராஸ்ரமா:" என்னும் மகாபாரதம்சாந்திபர்வம் 269-வது அத்யாயம், 6-வது சுலோகமும், 'தாயை அண்டி எல்லா ஜந்துக்களும் ஜீவிக்கின்றன போல கிருஹஸ்தாச்ரமத்தை அண்டி ஏனைய ஆச்ரமங்கள் ஜீவிக்கின்றன" என்னும் பொருளுள்ள "யதா - மாதரம்-ஆஸ்ரித்ய- ஸர்வே - ஜீவந்தி - ஜந்தவ:, ததா-க்ருஹாஸ்ரமம் - ப்ராப்ய ஸர்வே - ஜீவந்தி - சாஸ்ரமா:" என்னும் மகாபாரதம் - அனுஸாஸநிகபர்வம் 211-வது அத்யாயம் 49 - வது சுலோகமும கூறும். இக்கருத்தையே "தயைவ ஆஸ்ரமிண:—ஸர்வே-க்ருஹஸ்தே-யாந்தி ஸம்ஸ்திதிம்." என்னும் மநுஸ்ம்ருதி 6-ஆவது அத்யாயம் 90-வது சுலோகமும் கூறுகிறது. இக்கருத்தைக் கொண்டே சாந்தோக்யோபனிஷத் கிருஹஸ்தனைக் கூறி முடிக்கின்றது என வ்யாஸருடைய ப்ரம்மசூத்ரம் 3-வது அத்யாயம், 4-வது பாதம் 48-வது சூத்ரம் கூறும்.

18. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்
ஐம்புலத்தா றோம்ப றலை. [றாங்கு

தென்புலத்தார் = பித்ருதேவதைகள், தெய்வம் = தேவதைகள், விருந்து = விருந்தினர், ஒக்கல் = சுற்றத்

தார்கள், தான் = தான், என்ற ஆங்கு = என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து = ஐந்து இடத்திலும், ஆறு = தர்மத்தை, ஓம்பல் = தவறாமல் செய்தல், தலை = (இல் வாழ்வானுக்கு) சிறந்தது ஆகும்.

தேவதை, அதிதி, ப்ருத்யர், பிதிரர், தான் இவ்வைவர்க்கும் செலுத்தவேண்டிய கடனுடன் ஜீவன் பிறக்கிறான் என "தேவதாதிதிப்ருத்யாநாம் - பித்ரூணாம் ஆத்மனஸ்து - ய:—ந-நிர்வபதி-பஞ்சாநாம் - உச்ச்வஸன் ந-ஸ-ஜீவதி" என்னும் மகாபாரதம் வனபர்வம் 314வது அத்யயாயம் 60-வது சுலோகமும் "தேவதா-அதிதிப்ருத்யேப்ய: பித்ருப்ய:—ச - ஆத்மனஸ்-தயா ருணவான் - ஜாயதே - மர்த்ய:—தஸ்மாத் - அன்ருணதாம் - வ்ரஜேத்" என்னும் மகாபாரதம் சாந்திபர்வம் 292-வது அத்யாயம் 9-வது ச்லோகமும் கூறும்.

பித்ருதேவதைகள் தெற்கு திக்கில் இருக்கின்றனர் என்பதை தைத்திரீயஸம்ஹிதை 6-வது காண்டம் முதல் ப்ரச்னம் - முதல் பஞ்சாதி கூறும். பித்ருதேவதைகளும் தேவதைகளுள் அடங்குவரேனும் ப்ராம்மணவஷிஷ்டந்யாயப்படி சிறப்பு நோக்கித் தனிமையாகக் கூறப்பட்டார்கள். யாது சிறப்பெனில் அவர்கள் எப்போதும் ப்ரஹ்மசாரிகளாகவும், சுத்தராகவும் கோபமற்றவர்களாகவும் இருக்கின்றனர்: அக்ரோதநா: - சௌசபரா:—ஸததம்-ப்ரஹ்ம சாரிண:- ந்யஸ்த ஶஸ்த்ரா:- மஹா பாகா:—பிதர:—பூர்வ தேவதா:—என்று மனுஸ்ம்ருதி 33-வது அத்யாயம், 192-வது சுலோகம் கூறும்.

பித்ருலோகத்திற்குச் செல்லும் மார்க்கத்திற்கு தக்ஷிணமார்க்கம் (தெற்குவழி) என்றும், தேவலோகத்திற்குச் செல்லும் மார்க்கத்திற்கு உத்தரமார்க்கம்

(வடக்குவழி) என்றும் உபனிட்தமும் கீதையும் கூறும். பித்ருகர்மங்கள் செய்யும் போது தென்தோளில் (வலது தோளில்) பூணூலையும், தேவகார்யம் செய்யும்போது வடதோளில் (இடதுதோளில்) பூணூலையும் தரிக்கவேண்டுமென்று வேதமும் தர்ம சாஸ்த்ரங்களும் கூறுகின்றன. ஒருவன் கிழக்குதிக்கை நோக்கி நிற்கும்போது வலது தோள் தென்தோளாகவும் இடதுதோள் வடதோளாகவும் ஆகிறது. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்ற நியாயப்படி ஒவ்வொரு உடலினும் வலது பாகம் தென்புறமாகையால் பித்ருக்ருத்யம் செய்யும்போது பூணூலை வலமாகத் தரிப்பது பித்ருக்களைத் தென்புலத்தார் என்று நாயனர் அழைப்பதற்குச் சான்றாகும். மூவர்ணத்தவர் அல்லாமல் நான்காம் வர்ணத்தவராகிய வேளாளரும் கூட பித்ருகார்யங்களில் வலது தோளில் பூணூல் தரிப்பது இன்றும் காணலாம். பித்ருகார்யங்களினின்றும் தெய்வகார்யங்களினின்றும் சாஸ்த்ர முறையில் விடுபட்ட துறவிக்கு இருவகைப் பூணூலும் இல்லை. உலகமானிடரிடமிருந்து மாத்திரமல்லாமல் பித்ருக்கள், தேவர்கள், இவர்களிடமிருந்துகூட கிடைக்கும் பயன்களிலும் ஆசையற்றவனே உண்மைத்துறவியாவான்.

இக்குறளின்படி ஒருவன் நடந்து, தன் வருவாயில் ஆறில் ஒருபங்கைப் பகிர்ந்து தன்னை அண்டி வருவோருக்காக ஒதுக்கிவைத்து ஒவ்வோருநாளும் ஒருவருக்காவது விருந்தளித்துக்கொண்டுவந்தால் உலகில் உணவில்லாத்திண்டாட்டம் அறும். நாயனர் கூறுகிறபடி ஒவ்வொருவரும் தெய்வகர்மம் செய்துவந்தால் கெட்ட கார்யங்களும், அவைகளுக்குக் காரணமான கெட்ட எண்ணமும் குறையும். அர

சாங்கத்திற்குக் கண்காணிப்புச்செலவும் சேனைச்செலவும் குறையும். அப்போது அரசாங்கத்திற்கு ஒவ்வொருவருடைய வருவாயிலும் ஆறில் ஒருபங்கு கொடுப்பதினாலேயே அரசாங்கச்செலவு கட்டிக்கொண்டுபோகும். அரசனுக்கு ஆறில் ஒருபங்கு கொடுப்பது என்பது ஆன்றோர் வழக்கு.

*'ஆததீக-வெலிஞ்ச-அபி-ப்ரஜாஹ்ய:-குருநந்தந,*
*ஷட் ஹாகம்-அநிதப்ரஜ்ஞு:- தாஸாம் ஏவ-அபிகுப்தயே'' என்னும் மகாபாரதம் சாந்திபர்வம் 26 வது அத்யாயம் 9 வது சுலோகமும், ''தபஷ்ஷட்ஹாகம்-அக்ஷய்யம்-ததி-ஆரண்யகா:-ஹி ந:'' என்னும் சாகுந்தளம் 2வது அங்கம் 13 வது ச்லோகமும், இவ்விடம் ஒப்பிடத்தக்கன.*
*''ஆததீத-அபு-ஷட்ஹாகம்த்ருமாம்ச-மது-ஸர்பிஷாம்'' என்னும் மனுஸ்ம்ருதி 7வது அத்யாயம் 130வது ச்லோகமும் இந்த கருத்தைத்தான் கூறுகிறது.*

மற்ற ஐந்துபங்குகளுக்கும் வினியோகத்தை இக்குறளில் நாயனார் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

*விருந்தோம்பல் என்பது நம்மை அண்டிவந்தவர்களை ஓம்பல். சுற்றத்தாரில் உபகாரத்திற்குத் தகுதியானவர்களை நாமே தேடி உபகரிக்கவேண்டுமென்பது கருத்து. ''செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'' என்பது ஔவையார்வாக்கு. ''ரக்ஷிதா ஜீவலோகஸ்ய-ஸ்வஜனஸ்ய-ச-ரக்ஷிதா'' என்பது வால்மீகியினுடைய வாக்கு. (ராமாயணம் பாலகாண்டம் 1 வது சர்க்கம் 13-14 வது ச்லோகங்கள்). இவ்வாக்கின்படி பொதுவாக உலகத்திலுள்ள ஜீவர்களை யெல்லாம் ரக்ஷிக்கும் பொறுப்போடுகூட தன் சுற்றத்தாரையும் ரக்ஷிக்கும் பொறுப்பு விசேஷித்து கூறப்படுகிறது. இவ்வெல்லா தர்மங்களையும் செய்வதற்கு தான் கேடில்லாமல் வாழவேண்டியது இன்றியமையாததாலால் தன்னையும் ரக்ஷித்துக்கொள்ள வேண்*

டும் என்னும் கருத்தை நாயனார் தான் என்னும் பதத்தால் குறிப்பிடுகிறார். இதையே தைத்தரீய உபனிடதம், "குசலமாக இருக்கும் விஷயத்தில் (அதாவது தன் யோக க்ஷேமத்தில்) அலக்ஷியமாய் இராதே" என்று ஶிக்ஷாவல்லி 11 வது அனுவாகம் முதலாவது மந்த்ரத்தில் கூறுகிறது. இக்குறளின் தொடக்கத்திலுள்ள "தென்புலத்தார்" என்னும் சொல்லைக்கொண்டே வைதிக நூல்களில் நாயனாருக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கின்றது என்பது நன்றாகப் புலப்படுகிறது. இவ்வைந்திலும் தென்புலத்தாரை முதலில் சொன்னதால் மற்ற இதர கடமைகளைவிடப் பித்ருகார்யத்தை முதலில் வைத்து செய்ய வேண்டுமென்றேற்படுகிறது. "தேவ - கார்யாத் - அபி - முனே - பித்ரு - கார்யம் - விசிஷ்யதே"- சாந்தி 347-59 339-58. எல்லா கர்மங்களையும் சிரத்தையுடன் செய்ய வேண்டியது விதியாயினும் தென்புலத்தாருக்குச் செய்யும் கடமையே "சிராத்தம்" அதாவது சிரத்தை பூர்வகமான கர்மம் என்று வழங்கப்படுகிறது. 'அப்யர்ஹிதம் பூர்வம்" என்பது பாணினியின் இலக்கணசூத்ரம். விசேஷமாக ஆராதிக்கப்படுவதை முதலில் சொல்ல வேண்டுமென்பது இச்சூத்திரத்தின் கருத்து. இதை அனுசரித்தே நாயனார் தென்புலத்தாரை முதலில் கூறினார் போலும். நாயனாருக்கு ஆழ்ந்த சாஸ்த்ர நுட்பங்களிலுள்ள ஆர்வமும் ஆற்றலும் இக்குறளைக் கொண்டே அறிந்து கொள்ளலாம்.

19. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறை
தெய்வத்துள் வைக்கப் படும். [யுந்

வையத்துள் = பூமியில், வாழ்வாங்கு = வாழவேண்டிய முறைப்படி, வாழ்பவன், வான் = வானின்கண், உறை

யும் = தங்கும், தெய்வத்துள் = தேவதைகளுள், வைக்கப்படும் = வைக்கப்படுவான்.

"தனக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்பவன் தேவர்களோடு ஒப்பாவான்" என "ப்ரவ்ருத்தம் - கர்ம-ஸம்ஸேவ்ய - தேவானும் - ஏதி - ஸாம்யதாம்" என்னும் மனுஸ்ம்ருதி 12 வது அத்யாயம் 90 வது சுலோகம் கூறுகிறது.

20. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

கற்பு = பாதிவ்ரத்யம், என்னும் = என்ற, திண்மை = கலங்காத நிலைமை, உண்டாகப்பெறின் = இருந்தால், பெண்ணின் = மனைவியைக் காட்டிலும், பெருந்தக்க = மேம்பட்ட பொருள்கள், யா = எவை, உள = இருக்கின்றன? "பெண்டிர்க்குப் பழமையான தர்மம் பாதிவ்ரத்யம்" என "பதிவ்ரதாத்வம் - நாரீணும் - ஏதத் - ஏவ - ஸநாதனம்" எனும் மகாபாரதம் அனுசாஸனிகபர்வம் 249 வது அத்யாயம் 12 வது சுலோகம் கூறுகிறது. இன்னும் நம் நாட்டில் புருஷர்களைவிட ஸ்த்ரீகளிடையே தர்மசிரத்தை அதிகமாய்க் காணப்படுகிறது. நம்நாட்டில் இதர நாடுகளைவிடவும் இதர தர்மங்களைவிடவும் சாஸ்திரங்களில் பாதிவ்ரத்யம் வற்புறுத்தப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். புருஷர்கள் உத்தமகதியடைய வேண்டுமானால் ஊன்கண்ணுக்குத் தெரியாத கடவுளை மனதால் உருவாக்கி வழிபடவேண்டும். ஸ்த்ரீகளுக்கோவென்றால் கண்ணுக்குப் ப்ரத்தியக்ஷமாய்ப் புலப்படும் கணவனையே தெய்வமாக்கி வழிபட்டு உத்தமகதியை அடையுமாறு கடவுளின் ஆணையான சாஸ்திரம் விதித்திருப்பதால், அக்கணவனிடம்

குணமிருப்பினும் குற்றமிருப்பினும் கடவுளே அக்கணவனிடம் உட்புகுந்து பெண்டிர்க்கு உத்தமகதியை அளிக்கின்றான். பசு கோணலான கொம்புடையதாயிருப்பினும் அதைப் பூஜிப்பவர்களுக்கு அதனுள் நின்று கடவுளே நன்மை பயக்குவது போல.

21. தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழு
பெய்யெனப் பெய்யு மழை. [வாள்

தெய்வம் = (வேறு) தெய்வத்தை, தொழாள் = வணங்காமல், கொழுநன் = கணவனையே, தொழுது = வணங்கி, எழுவாள் = (படுக்கையைவிட்டு) எழுந்திருப்பவள், பெய் என = பெய் என்று கூற, மழை, பெய்யும்.

"கொழுநன்" என்பது பழந்தமிழில் கணவனைக் குறிக்கும். "பெண்டிர்க்குப் பதியே தெய்வம்; வேறு புகலிடம் இல்லை" என "பதி :- ஹி - தைவதம் - ஸ்த்ரீணும்-பதி :-பந்து :- பதி:- கதி : ந - அன்யாம் - கதிம்-அஹம் - பஸ்யே - ப்ரமதாயா :- யதா - பதி :" என்னும் மகாபாரதம் அனுசாஸனிகபர்வம் 250 வது அத்யாயம் 25 வது சுலோகமும் "அதிகமாய் காயக்லேசம் முதலியவைகள் செய்து அதனல் புருஷன் அடையும் பலத்தைப் பதியை பூஜை செய்வதினலேயே ஸ்த்ரீயானவள் வெகு சுலபமாய் அடைந்து விடுகிறாள்" என "காய - க்லேஸேன - மஹதா - புருஷ: - ப்ராப்னுயாத் - ஃபலம் - தத் - ஸர்வம் - லபதே - நாரீ - ஸுகேந - பதி - பூஜயா" என்னும் மேற்கண்ட மகாபாரத அனுசாசனிக பர்வம் 250 வது அத்யாயம் 26 வது சுலோகமும் கூறும்.

"வேதமோதிய வேதியர்க்கோர்மழை,
நீதிதவறு நெறியினர்க் கோர்மழை,

காதல்கற்புடை மங்கையர்க்கோர் மழை,
மாதம் மும்மழை பெய்யெனப் பெய்யுமே"

என்பது ஆன்றோர்வாக்கு. பொதுவாய் ஒரு ஜீவன் கடைத்தேறவேண்டுமானால் பகவானிடத்தில் எல்லைகடந்த அன்பு ஏகாக்கிரசித்தத்துடன் நிலைத்திருக்கவேண்டும். ஆனால் இவ்விதம் அன்புசெய்யும் ஜீவன் ப்ரத்யக்ஷமான கண்களால் பகவானைப் பார்த்திராதுகையால் சாஸ்திரங்களைக் கொண்டும், அனுபவிகளின் வார்த்தையைக்கொண்டும் பகவானுடைய ஸ்வரூபத்தைத் தன்மனதால் ஊகித்துக்கொண்டு அந்த ஊகித்தஸ்வரூபத்தில் அன்பையும் ஏகாக்ரதையையும் செலுத்தியாகவேண்டும். ஆனால் பதிவ்ரதைகளான ஸ்த்ரீகளுக்கோ இந்த ச்ரமம் இல்லை. ஏனெனில் நமது சாஸ்திரமுறைப்படி ஸ்த்ரீகள் இவ்வூனக்கண்ணிற்கே புலப்படும் தங்கள் பதிகளிடத்தே பேரன்பும் ஏகாக்ரசித்தமும் வைக்கும்போது அந்த ஸ்த்ரீகள் விஷயத்தில் மாத்திரம் பகவானே அந்த கணவனுடைய சரீரத்தில் ஆவிர்பவித்து அவர்கள் ஜன்மத்தைக் கடைத்தேற்றி வைக்கிறான். ஏனையோருக்குப் பகவானுடைய ஸ்வரூபத்தை மனதால் கற்பனை செய்ய வேண்டிய சிரமமும், அவ்விதம் மனதில் உருவாக்கப்பட்ட பகவானுக்கென்று நினைத்து செய்யப்படவேண்டிய யக்ஞம், தானம் முதலிய கர்மானுஷ்டான சிரமமும் இல்லாமல் ப்ரத்தியக்ஷமாய்ப் புலப்படும் பதியை வழிபட்டு அவனுக்குச் செய்யும் பணிவிடையே யக்ஞதான முதலிய எல்லா ஸத்கர்மானுஷ்டானமாக நிற்பதால் மற்றவர்களைவிட பதிவ்ரதாஸ்த்ரீகள் சுலபமாய் கடைத்தேறும் பாக்கியம் பெற்றவராகி யிருக்கிறவர்கள். நமது சாஸ்திர முறைப்படி பெண்கள் கன்னிப் பருவத்தில் பரமேசுவரனையே பதியாக பாவித்து அனுஷ்டிக்கவேண்டிய சில நோன்புகள் ஏற்பட்டிருக்

கின்றன. இந்நோன்புகள் தெலுங்கு கன்னட நாடுக ளில் இன்னமும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. கல் யாணமான பின்னர் பதியையே பரமேசுவரனுகை பாவித் தொழுகவேண்டும். இதுவே பதிவ்ரதம் அல்லது கொழுனன் நோன்பு. ஒவ்வொரு உள்ளத்திலும் ஈசன் அந்தர்யாமியாயிருக்கிருன் என்பது வேதத்தின் துணிபு. அம்முறையில் நமது உள்ளத்திலேயே எல்லாம் அறியும் படியான சர்வஜ்ஞத்வமும், எல்லாவற்றையும் ஆக்கும் வல்லமையாம் சர்வசக்தியும் உறைந்திருக்கிறது. இந்த சக்தி நமக்குப் புலப்பட்டு வெளியாகாம லிருப்பதற்குக் காரணம் நம்மனம் ஐம்புலன்களின் வழியாய் வெளிமுக மாய்த் திரிந்துகொண்டிருப்பதே. அத்திரிதலை நிறுத்தி அது ஒருமுகப்படும்பொழுது அது உள்நோக்கும் ஆற் றலை அடைகிறது. அவ்விதம் உள் நோக்க ஆரம்பிக் கும்பொழுது உள்ளிருக்கும் ஈசத்தன்மை சிறிது சிறி தாக வெளியாகிறது. வெளியிலிருக்கு முலகெலாம் நம்முள்ளத்தில் உறைந்திருக்கும் ஈசனிடம் அடங்கி யிருக்கிறது. அவ்வீசத்தன்மை வெளிப்படும்போது உல கத்தில் எக்காரியத்தையும் ஆக்கும் ஆற்றலும் ப்ரகா சிக்கிறது. மழை பெய்யென்ருல் பெய்கிறது. வெளி முகமாகத் திரியும் ஐம்புலன்களைத் திரியாமல் தடுக்க உபாயமென்னவென்ருல் வெளிப்பொருள்களில் மாறி மாறி வரும் அன்பைவிட ஒரே இடத்தில் அசையாத ப்ரேமை அல்லது பேரன்பு ஏற்படுவதே. முறுக்கு தின்று கொண்டிருக்கும் ஒரு குழந்தையிடம் மிட்டாயைக் காட்டினல் முறுக்கைக் கீழே போட்டுவிடுகிறது. அது போல் அதிக அன்பிற்குப் பாத்திரமான ஒரு பொருளை மனம் கவரும்போது அற்பசுகப்பொருளைத்தானுகவே விட்டுவிடுகிறது. அவ்வித அன்பை என்றும் அழியாத

கடவுளிடம் வளர்ப்பதே அடியாரின் பக்தியோகம். கண்ணுக்கெதிரே புலப்படும் கடவுளாம் கணவனிடம் அப்பேரன்பை வளர்ப்பதே பதிவ்ரதம். அப்பிரேமை வளர்ச்சி முதிரும்போது மனம் ஒருமைப் படுகிறது. மனம் ஒருமைப்பட்டபோதே உள் நோக்க இடந்தருகிறது. உள்நோக்கும்போது ஈசத்தன்மை வெளியாகின்றது. அப்போது பெய்யெனப் பெய்யும் மழை. பெரிய யோகிக்கு அதிக சிரமத்தின்பேரில் கிடைக்கும் சக்தி பதிவ்ரதைக்கு மிகவும் சுலபமாய்க் கிடைக்கிறது.

"கொக்கென்று நினைத்தாயோ-கொங்கணவா"-என்னும் கதையில் சொல்லியிருக்கிறபடி, ஒரு பதிவ்ரதை தன்னுடைய பாதிவ்ரத்யத்தாலே தூரத்தில் நடந்ததைத் தெரிந்துகொண்ட கதை ஸ்ரீ மகாபாரதம் வன பர்வம் 209 அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "என்னுடைய பதிசேவையின் ப்ரபாவத்தினாலேயே கொக்குக் கதையை நான் அறிந்துகொண்டேன் "எனப் பொருள்படும்" சுஶ்ரூஷயா :—ஹலம்—பஶ்ய- பத்யு:- ப்ராஹ்மண - யாத்ருஶம் -வலாகா :—ஹி- த்வயா - ஊஷ்யா:— ரோஷாத் - தத் - விஜ்ஞாதம்—மயா" என்னும் மகாபாரதம் வனபர்வம் 209-வது அத்யாயம் 32, 33 சுலோகங்கள் குறிப்பிடத் தக்கன.

அதையே நாயனார், 'தெய்வம் தொழா அள்' என்றார். காணாத தெய்வத்தைக் கற்பனையால் உருவாக்கித் தொழும் சிரமமின்றி என்பது பொருள்.

22. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

மகளிர் = மனைவிகளை, சிறை = காவல்களால், காக்கும் காப்பு, எவன் = என்ன, செய்யும்? நிறை = (தம்)

மனத்திண்மையால், காக்கும் காப்பே, தலை—சிறந்தது. "நன்மையைச் செய்யும் புருஷர்களால் காக்கப்பட்ட மகளிர் காக்கப்பட்டவர் ஆகார்; தம்மைத்தாமே காப்பவரே காக்கப்பட்டவர்" என "அரக்ஷிதா க்ருஹே ருத்₃யா:—புருஷை:—ஆப்தகாரிபி:—ஆத்மானம்- ஆத்மனா - யா:—து - ரக்ஷேயு:—தா:-ஸுரக்ஷிதா:" என்னும் மனுஸ்ம்ருதி 9-வது அத்யாயம் 12-வது சுலோகமும் "துன்பம் வரும்காலத்திலும் தம்மைத் தாமே காத்துக்கொள்ளும் மகளிர் ஸ்வர்க்கமடைவது திண்ணம்" என "வைஷம்யம் அபி-ஸம்ப்ராப்தா — கோபாயந்தி-குலஸ்த்ரிய:—ஆத்மானம்- ஆத்மனா - ஸத்ய:—ஜித:—ஸ்வர்கோ-ந-ஸம்சய: ||" என்னும் மகாபாரதம் வனபர்வம் 68-வது அத்யாயம் 8-வது சுலோகமும் கூறுகிறது. ஸ்ரீராமாயணத்திலும் ராவணவதத்திற்குப் பிறகு விபீஷணர் சீதாதேவியை ஸ்ரீராமனிடம் மூடுபல்லக்கில் அழைத்துக்கொண்டு வரும் சமயத்தில் வானரங்கள் தேவியைப் பார்க்கவேண்டுமென்று ஆவலுடனருகில் குழுமிவர, விபீஷணர் அவைகளைத் துரத்தியடித்தார். அதைப்பார்த்த ஸ்ரீராமன் விபீஷணரைப் பார்த்து "இந்த வானரங்கள் என்னுடைய ஸ்வஜனங்கள், இவர்களை வெருட்டவேண்டாம்" என்று விபீஷணரை நிறுத்திவிட்டு மேலும் சொல்லுகிறார் "வீடுகளோ, படுதாக்களோ, கோட்டை மதில்களோ, முகமூடிகளோ, ஸ்த்ரீகளை ரக்ஷிப்பதில்லை. மற்றும் இவைகளைப் போன்ற கட்டுப்பாடான அரண்மனை ஏற்பாடுகள் ஸ்த்ரீகளை ரக்ஷியா; நற்சீலம் ஒன்றே பெண்களுக்கு உண்மையான வேலி." "நிவர்தய - ஏவம் - உத்₃யோகம் ஜனோயம் - ஸ்வஜனோ-மம | ந - க்₃ருஹாணி-ந - வஸ்த்ராணி -ந - ப்ராகாரா:- திரஸ்க்ரியா: | ந - ஈத்₃ருசா - ராஜஸத்காரா: வ்ருத்தம் ஆவரணம் - ஸ்த்ரிய:"

(யுத்தகாண்டம் 117-வது சர்க்கம் 25, 26-வது சுலோகங்கள்) என்று சொல்லிவிட்டு சீதாதேவியைப்பல்லக்கைவிட்டு இறங்கச் செய்து எல்லோரும் பார்க்கும்படியாக காலாலேயே நடந்து வரும்படி கட்டளையிட்டார். "விஸ்ருஜ்ய-சிபிகாம்-தஸ்மாத்-பத்ப்யாமேவ - அபஸர்பது | ஸமீபே - மம - வைதேஹீம் - பச்யந்து - இமே - வனௌகஸ: ||" [ஸ்ரீமத் ராமாயணம் யுத்தகாண்டம் 117 ஸர்க்கம் 30 வது ச்லோகம்.] சீதாதேவியின் சீலம் ராக்ஷஸர்களும், வானரங்களும், க்ஷத்திரியர்களும் ஒரு மனப்பட்டு மனமுருகி அன்புக்கடலில் முழுகும்படி செய்தது. வகுப்பு வேற்றுமை, நாட்டு வேற்றுமை முதலியவைகளால் ஏற்படும் மனவேற்றுமை ஒழிந்து உண்மையான ஒற்றுமைக்குக் காரணமான அன்பைப் பெருக்க உண்மையான சீலம் அழியாத சக்தி வாய்ந்தது என்பதற்கு இது சாச்வதமான அத்தாக்ஷி.

23. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிற் பெருஞ்
புத்தேளிர் வாழு முலகு. [சிறப்புப்

பெண்டிர் = மனைவியர், பெற்றான் = (தம்மை எய்திய) கணவனை, பெறின் = கற்போடு அடைவார்களாயின், புத்தேளிர் = தேவர்கள் வாழும், உலகு = உலகின்கண், பெருஞ்சிறப்பு = மேலானசிறப்பை, பெறுவர் = அடைவர்.

---

"நாஸ்தி-யஜ்ஞ:-ஸ்த்ரியா:- கச்சித்-ந-ச்ராத்தம்-ந-அபி-உபோஷணம் - யா - து - ஹர்தரி - சுச்ரூஷா- ஸா-ஸ்வர்காய-அபிஜாயதே" என்னும் மகாபாரதம் விராட பர்வம் 20வது அத்யாயம் 47 வது ச்லோகம் இக்கருத்தையே கூறுகிறது.

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீராமன் வனத்தில் அத்ரி மகரிஷியின் ஆச்ரமத்தையடைந்தபொழுது அங்கு அந்த ரிஷியின் பத்தினியான அநஸூயாதேவி சீதாதேவியைப்

பார்த்து காட்டில் கஷ்டப்படும் ஸ்ரீராமனைப் பதிவ்ரதை யான சீதை பின் தொடர்ந்து வந்திருக்கும் விஷயத்தில் தன்னுடைய ஆனந்தத்தைத் தெரிவிக்கும்போது, "கொழுநன் நகரத்திலிருப்பினும் வனத்திலிருப்பினும், பாவியாயிருந்தாலும், அவலக்ஷணமாயிருப்பினும் எந்த ஸ்த்ரீகளுக்கவன் ப்ரியமான வஸ்துவோ அவர்களுக்கு உத்தம லோகங்கள் கிடைக்கும் [நகரஸ்யோ - வனஸ்யோ - வா - ஶுபோவா - யதி - வா - அஶுப:- யாஸாம் - ஸ்த்ரீணாம் - ப்ரியோ - பர்தா - தாஸாம் - லோகா:- மஹோதயா:-அயோத்யா-117-22-23] என்று பொருள்படும்படி கூறுகிறாள். அனசூயாதேவிக்குச் சீதை மறுமொழி கூறுமிடத்தும் "அக்னி சாக்ஷியாக நான் ஸ்ரீராமனை மணந்த காலத்தில் என் தாயார் எனக்குபதேசித்த வாக்கியங்களையே தாங்களும் எனக்கு இன்று ஞாபகப்படுத்துகிறீர்கள். கணவனைக்கற்புடன் அடைவதைக்காட்டிலும் பெண்டிருக்கு வேறு தவமில்லை. சத்தியவானை அடைந்த சாவித்திரி இன்று சுவர்க்கத்தில் ப்ரகாசிக்கிறாள். தாங்கள் பதிசுச்ரூஷையினாலேயே தேவர்கள் வாழும் உலகை அடையப் போகிறீர்கள். இவ்விதமே எத்தனையோ உத்தமஸ்திரீகள் த்ருடமான பதிவ்ரதா தர்மத்தினால் தேவர்கள் வாழும் உலகத்தில் பெருவாழ்வு வாழ்கின்றனர். (சாவித்ரீ - பதி - ஶுஶ்ரூஷாம் - க்ருத்வா - ஸ்வர்கே - மஹீயதே - தயா வ்ருத்திஶ்ச - யாதா - த்வம் - பதி சுச்ரூஷயா - திவம் + + ஏவம் - வியாஶ்ச ப்ரவரா :-ஸ்த்ரிய :- பர்த்ரு - த்ருடவ்ரதா:- தேவலோகே - மஹீயந்தே - புண்யேந-ஸ்வேந - கர்மணா' (அயோத்யா, 118 வது சர்க்கம்-10, 12 சுலோகங்கள்) என்று சொல்லுகிறாள். இக்கருத்தையே ஸ்ரீபாகவதம் ப்ருது சரித்ரத்தில் 4 வது ஸ்கந்தம் 24 வது அத்யாயம் "அஹோ-இயம்

வது: - தன்யா - யா - ச-ஏவம் - ஹூஹூஜாம் - பதிம் - ஸர்வாத்மனு-பதிம்-ஹேஜே - யஜ்ஞேநம் - ஸ்ரீ :- வயுரிவ - ஸைஷா - நூநம் - வ்ரஜதீ - ஊர்த்வம் - அமும் - வைன்யம் - பதிம் - ஸதீ - பர்யத - அஸ்மான்-அதீத்ய - துர்சி :- துர்விஜ்ஞாவ்யேன - கர்மணு" என்னும் 25, 26 வது ச்லோகங்கள் கூறுகின்றன.

24. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

தம்மக்கள் = தம்முடையமக்களை, தம் = தம்முடைய பொருள் என்ப = பொருள் என்றுகூறுவர், (பெரியோர்); அவர்பொருள் = அவர்செய்தபொருளின்பயன், தம்தம் வினையால் = தம்மாற்செய்யப்பட்டவினைப்பயனோடு,வரும்.

இறந்தபின்னர் அவரவர் செய்தநல்வினை தீவினைகள் பயன்களும், மக்கள் செய்த ஈமச்சடங்கு அதாவது, சிராத்தம், தானம் முதலியவற்றின் பயனும் வரும் என்பதை இக்குறள் உணர்த்திற்று.

"இம்மையிலும் மறுமையிலும் பெரிய ஆபத்திவிருந்து மனிதரை மக்கள் காக்கின்றமையான், அவர் மக்கட் பேற்றினை விரும்புகின்றனர்" என " யஉர்மம் புருஷவ்யாவ்ர - புத்ரம் - இச்ஹந்தி - மானவா :- ப்ரேத்ய - இஹ - ச - சம்ப்ராப்தா: - த்ராயந்தே-மஹதோ - ஸயாத் ||" என்னும் மகாபாரதம் த்ரோணபர்வம் 196 வது அத்யாயம் 17 வது சுலோகம் கூறும். " இவ்வுலகிவிருந்து வேற்றுலகத்திற்கு மனிதர் செல்ல மக்கள் துணைபுரிதலான் சுயநலத்தைக் கருதியே அவர் மக்கட்பேற்றினை விரும்புகின்றனர்" என "இச்ஹந்தி - பிதர :- புத்ரான் - ஸ்வார்யஹேதோ :- யடோத்கச - இஹ - லோகாத் - பரே - லோகே - தாரயிஷ்யந்தி - மானவா:"

என்னும் மகாபாரதம் த்ரோணபர்வம் 174 வது அத்யாயம் 54 வது சுலோகம் கூறும்.

25. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

மக்கள் = தம்மக்கள், மெய் = (தம்முடைய) உடலை, தீண்டல் = தொடுதல், உடற்கு = உடலுக்கு, இன்பம் = சுகத்திற்குக் காரணம் (ஆகும்). அவர் சொல் கேட்டல் = அவர்களுடைய சொல்லை கேட்குதல், செவிக்கு = காதுக்கு, இன்பம் = இன்பத்திற்குக்காரணம், ஆகும்.

ஈண்டு மக்கள் என்பது தம்மக்களையே குறிக்கும். இன்பம் என்ற சொல் இரண்டிடத்திலும் இன்பத்திற்குக் காரணம் என பொருள்படுதலின் ஆகுபெயர்.

அவர் என்ற சொல் தம்மக்களையே குறிக்கும். "குழந்தையால் ஆலிங்கனஞ் செய்யப்பட்டபோது உண்டாம் சுகத்திற்கு ஈடின்மையால், குழந்தையின் ஸ்பர்சத்தைக் காட்டிலும் இனிமையானது வேறொன்றுமில்லை" என "ஶிஶூனாம்-ஆலிங்ஙயமானஸ்ய-ஸ்பர்ஶ:-ஸ்நோ:-யதா - ஸூவ:- புத்ரஸ்பர்ஶாத் - ப்ரியதர :- ஸ்பர்ஶோ லோகே - ந வித்யதே" என்னும் மகாபாரதம் ஆதிபர்வம் 98 வது அத்யாயம் 51 வது சுலோகமும், "புத்ரஸ்பர்ஶாத் - து - லோகேஷு - ந - அன்யத் - ஸுகம் - அதி - இவ - ஹி" என்னும் மேற்சொன்ன ஆதிபர்வம் 64 வது அத்யாயம் 67 வது அதிக சுலோகமும், "குழந்தையின் மழலைச்சொற்போல் இனிமையாயுள்ளது" என "வாக்யம் - காந்தம்-ஹவிஷ்யதி - பாலஸ்ய - இவ - ப்ரவ்ருத்தஸ்ய - கலம் - அவ்யக்தம் - அதீஹூதம்" என்னும மகாபாரதம் அனுசாஸனபர்வம் 131 வது அத்யாயம் 41 வது சுலோகமும் கூறும்.

"குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்"
"அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கட்
சிறுகை யளாவிய கூழ்"
என்னும் குறள்கள் இங்கு குறிப்பிடத்தக்கன.

செவி, கண், தோள், போன்ற பெயர்களைப் பன்மை சுட்டிய சினைநிலைக்கிளவி என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார்.

26. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

அன்பு = அன்பினை, உடையார், என்பும் = எலும்பினாலும், பிறர்க்கு, உரியர்; அன்பு = அன்பினை, இலார் = உடைத்தாயிராதவர், எல்லாம் — எல்லாப்பொருளாலும், தமக்கு = தமக்கே, உரியர்.

இந்திரன் வ்ருத்தாசுரனை வெல்ல வஜ்ராயுதம் செய்வதற்குத் ததிசி முனிவரின் முதுகெலும்பு வேண்டும் என அவரை இந்திரன் வேண்ட, அம்முனிவர் யோகசக்தியால் ஸ்தூலசரீரத்தை விட்டு நீங்க, அதன் முதுகெலும்பால் வஜ்ராயுதம் செய்யப்பட்டதை ஈண்டு இவ்வாசிரியர் குறிக்கின்றனர். இந்த வ்ருத்தாந்தம் ஸ்ரீபாகவதம் 6வது ஸ்கந்தம் 9, 10 வது அத்யாயங்களில் பார்க்க. சிபிசக்ரவர்த்தி தன் உடலைப் புறுவுக்கு கொடுத்ததையும், கர்ணன் தன் உடலோடு பிறந்த கர்ணகுண்டலங்களை இந்த்ரனுக்குக் கொடுத்ததையும் மகாபாரதம் வனபர்வம் 132,133 வது அத்யாயங்களும் வனபர்வம் 311 வது அத்யாயமும் கூறுகின்றன.

27. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.

என்பிலதனை = எலும்பில்லாத உடம்பை, வெயில் காயும் போல = தகிக்குமாறு, அறம் = தர்மக்கடவுள், அன்பிலதனை = அன்போடு கூடாத மக்களை, காயும் = துன்பப்படுத்தும்.

அன்பு இருத்தலும் இல்லாமையும் மக்களிடமே நிகழுமாதலால், அன்பில்லாத மக்கள் அஃறிணைப் பொருட்கட்குச் சமம் என்பதைக் குறிக்க "அன்பிலரை" "என்ற சொல்லை ஆசிரியர் வழங்காது "அன்பிலதனை" என்ற சொல்லை வழங்கியது நோக்கத்தக்கது.

அறம் என்பது ஈண்டு அறத்திற்கு அதிதேவதையாய் இருக்கும் தர்மாராஜனைக் குறிக்கும்.

28. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

விருந்து = விருந்தினர், புறத்தது ஆ = வீட்டின் வெளிப்புறத்தில் இருக்க, தான் = தான் (மாத்திரம்), உண்டல் = சாப்பிடுதல், சாவாமருந்து = அம்ருதம், எனினும் = என்றாலும், வேண்டற் பாற்று அன்று = விரும்பத்தக்கது அல்ல.

ஆ என்பது ஆக என்பதின் கடைக்குறை. விருந்து என்பது சொல்வகையான் அஃறிணை யாயினமையின் புறத்தது என்ற அஃறிணைச்சொல் அதன் பின்னர் வழங்கப்பட்டது.

சாவாமருந்து என்பதும் "அமிர்தம்" என்பதும் ஒரு பொருட் கிளவி.

தான் சிரமப்பட்டு அடைந்த அருமைப்பொருளையும் விருந்தினருக்குக் கொடாது தான் உண்ணுதல் தகாது என்பது கருத்து.

"அருமைப் பொருளை எவன் தானே உண்ணுகிறானோ அவனது ஜீவிதம் வீணேயாகும்" என "ம்ருஷ்டம் அச்னாதி - யஸ்து - ஏக:— வ்ருதா - ஜீவதி - ஸோபிவ" என்னும் மகாபாரதம் அசுவமேத பர்வம் 98 அத்யாயம் 39 வது சுலோகம் கூறுவதும், "விருந்தினர்க்கு அளிக்காது தான் ஒன்றனையும் உண்ணத்தகாது" என "ந - வை - ஸ்வயம் - ததச்னீயாத் - அதிதிம் - யத் - ந - போஜயேத்" என்று கூறும் மநுஸம்ருதி 3 வது அத்யாயம் 106 வது சுலோகம் நோக்கற்பாலது.

29. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு.

(இல் = வீட்டிலிருந்து), செல்விருந்து = செல்லுகின்ற விருந்தினரை, ஓம்பி = உபசரித்த பின்னர், (இல் = வீட்டிற்கு) வருவிருந்து = வருகின்ற விருந்தினரை, பார்த்திருப்பான் = எதிர்பார்த்துக் கொண்டிருப்பான், வானத்தவர்க்கு = தேவர்களுக்கு, நல் விருந்து = நல்ல விருந்தினன் (ஆவான்).

விருந்தினரை மனமார உபசரிப்பவனைத் தேவர்கள் மனமார உபசரிப்பார் என்பது கருத்து.

வானத்தார் என்பதும் "திவௌகஸ:" என்பதும் ஒரு பொருட்கிளவி.

"தன்யம் - யசஸ்யம் - ஆயுஷ்யம் - ஸ்வர்க்யம் - வா - அதிதிபூஜனம்" என மனுஸ்மருதி 3 வது அத்யாயம் 106 வது ஸ்லோகம் கூறுகிறது.

இது விஷயத்தில் மகாபாரதம் அசுவமேதபர்வம் 90 வது அத்தியாயம் நகுலோபாக்யானம் இங்கு குறிப்பிடத்தக்கது. அதன் கதை பின்வருமாறு:—தர்மபுத்திரர் அசுவமேதயாகம் செய்தபிறகு அன்னதானம் ஏராளமாய்ச் செய்தார். அந்த அன்னதானத்தைச் சபையிலுள்ளோர் அனைவரும் புகழ்ந்தனர். அந்த சமயம் ஒரு பக்கம் தங்கமாய்ப் பிரகாசித்த சரீரத்துடன் கூடிய ஒரு கீரிப்பிள்ளை அங்குவந்து "குருக்ஷேத்திரத்தில் மாவைக் கொடுத்த உஞ்சவ்ருத்தி பிராம்மணனுடைய தானத்திற்கு இந்த யாகம் ஈடாகாது" எனச் சொல்லிற்று. இதைக் கேட்ட சபையோர்கள் ஆச்சரியமடைந்து அந்தக் கீரிப்பிள்ளையைப் பார்த்து, "நீ யார்? நீ ஏன் இப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார்கள். கீரிப்பிள்ளை அடியில் வருமாறு சொல்லிற்று:—

"குருக்ஷேத்திரத்தில் உஞ்சவ்ருத்தி செய்து பிழைக்கும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவனுடைய குடும்பத்தில் அவன் மனைவி, புத்ரன், நாட்டுப்பெண் ஆகிய மூவர் இருந்தனர். இந்த பிராமணன் கொண்டு வருவதிலிருந்தே அவர்கள் ஜீவித்துவந்தனர். ஒரு சமயம் தேசத்தில் துர்பிக்ஷம் ஏற்படவே அவருக்கு கோதுமை மாவுதான் கொஞ்சம் கிடைத்தது. அதை 4 பாகமாய்ச் செய்து சாப்பிட ஆரம்பித்தார்கள். அந்த சமயத்தில் ஒரு அதிதி வந்துசேர்ந்தார். உஞ்சவ்ருத்தி பிராமணன் வந்தவரை உபசரித்து தன்னிடம் இருந்த மாவைக் கொடுத்து அதைச் சாப்பிடச்சொன்னார். அதிதிக்கு அதைச்சாப்பிட்டும் பசி தீரவில்லை. அவருடைய ஸ்திதியைப் பார்த்த பிராமணர் வருத்தமடைந்தார் இதைப்பார்த்த அவருடைய பத்னி தன் பாகத்தையும்

கொடுத்தாள். அதைச்சாப்பிட்டும் அவருடைய பசி தணி யவில்லை. பிறகு பிராமணனுடைய புத்ரனும், நாட்டுப் பெண்ணும் தங்களுடைய பாகத்தைக் கொடுத்தார்கள். உடனே தேவலோகத்திலிருந்து புஷ்பவர்ஷம் பெய்தது. வந்த அதிதி உஞ்சவ்ருத்தி பிராமணனைப் பார்த்து "உங்கள் குடும்பத்தாரைப் போல் நான் கண்டதில்லை. தங்களுக்கென்று கொஞ்சங்கூட வைத்துக்கொள்ளா மல் எல்லாவற்றையும் எனக்காகக் கொடுத்துவிட்டீர் களே. உங்களுடைய தானமே தானம். "ஸர்வமேதத்ஹி யஸ்மாத் தே ஊத்தம் ஶுத்தயேன சேதஸா | க்ருஹஸ்த காலே தத: ஸ்வர்கோ விஜித: கர்மணா த்வயா | ஸத்துப் ரஸ்தேன விஜித: ப்ரஹ்மலோக ஸ்த்வயாக்ஷய: |" உங் களை ஸ்வர்க்கத்திற்கு அழைத்துச் செல்ல தேவதைகள் விமானத்துடன் காத்துக்கொண்டிருக்கின்றனர். நீ, உன்னுடைய பத்னி, மகன், நாட்டுப்பெண் இவர்களுடன் ஸ்வர்க்கத்தை அடைவாயாக. நான் தர்மதேவதை." என்று சொல்லி மறைந்தார். அவர்கள் நான்குபேரும் விமானத்தில் ஏறி ஸ்வர்க்கத்தை அடைந்தனர். அந்த மாவைச் சாப்பிட்ட சமயத்தில் கீழே உதிர்ந்த மாவும் ஜலமும் பட்டு என் சரீரத்தின் ஒருபாகம் தங்கமயமாய் ஆகிவிட்டது. மற்றொரு பாகம் அம்மாதிரியாகும் என நினைத்து அநேக யாகங்களுக்குப் போனேன். இந்த யாகத்திற்கும் ஆசையுடன் வந்தேன்; ஆனால் என் சரீ ரத்தின் மற்ற பாகம் தங்கமயமாக ஆகவில்லை. அதனால் தான் இந்த யாகம் அந்த ப்ராம்மணனுடைய தானத் திற்கு ஈடில்லை என்று சொன்னேன்" என்று சொல் லிற்று. இதிலிருந்து அதிதி ஸத்காரத்தின் விசேஷம் வெளியாகிறது.

அடியிற்குறிப்பிட்டிருக்கும் ச்லோகங்களும் அதிதி ஸத்காரத்தின் மகிமையையே கூறுகின்றன :—

அதிதி :— பூஜித :—யத் - ஹி - யஜ்ஞாயதே - மனஸா க்ருஹம் |
ந - தத் - க்ரது - சதேந - அபி - துல்யம் - ஆஹு :— மநீஷிண : ||
அதிதி :—பூஜீத :—யஸ்ய - க்ருஹஸ்தஸ்ய - து - கச்சதி |
ந - அன்யத் - தஸ்மாத் - பர :-தர்ம :—இதி - ப்ராஹு :-மநீஷிண : ||
தஸ்மாத் - க்ருஹஸ்தாச்ரமஸ்ய - ந - அன்யத் - தைவதம் -
அஸ்தி - ஏவ - ருதே - அதிதிம் - நரவ்யாக்ர - மனஸா - ஏதத் - விசாரய "- மகாபாரதம் - அனுசாசனிகபர்வம் - 2 வது அத்தியாயம் 107, 86, 106 வது ச்லோகங்கள்.

30. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்
 துணைத்துணை வேள்விப் பயன் [தின்

வேள்விப்பயன் = (விருந்தினரை) உபசரித்தலாகிய வேள்வியின் பயன், இனைத்துணைத்து = இவ்வளவுக்குட்பட்டது, என்பது, ஒன்று = ஒன்றும், இல்லை; விருந்தின் = விருந்தினருடைய, துணைத்துணை = யோக்யதைக்குத் தகுந்தது ஆகும்.

அதிதி பூஜனத்தை மனுஷ்யயஜ்ஞம் (ந்ருயஜ்ஞோதிதிபூஜனம்) என்று மனுதர்ம சாஸ்த்ரம் கூறும்.

"ஐம்பெரும் வேள்விகளுள் ஒன்றாதலின் வேள்வி என்றும், பொருளளவு தான் சிறியதாயினும் தக்கார் கைப்பட்டால் வான் சிறிதாப் போர்த்து விடுமாதலின், இனைத்துணைத்தென்ப தொன்றில்லை என்று கூறினார். இதனால் இருமையும் பயத்தற்கு காரணம் கூறப்பட்டது" என்கிறார் பரிமேலழகர்.

தானம் செய்யப்படும் பொருள் சிறிதாயினும் அது தகுதியான சத்பாத்திரத்தின் கையில் சேர்ந்தால் மிகவும் பெரிய ஆகாயத்தையும் சிறிதென்னும்படி தர்மத்தின் மேலான பயனைத் தந்துவிடும் என்பதுபோல் நாம் செய்

யும் விருந்தின் பயனும் விருந்தினரின் யோக்யதைக்குத் தக்கபடி பயனளிக்கும் என்பது கருத்து.

"யதி-ஹஸ்தே-ஜலம்-தத்வா-பைக்ஷம்-தத்யாத்-புனர்ஜலம் |
தத்அன்னம்-மேருணா-துல்யம்-தஜ்ஜலம்-ஸாகரோபமம்' ||"

என்பது பராசருடைய வசனம் (பராசரசம்ஹிதை ஆசாரகாண்டம் அத்யாயம் 1 - ஸ்லோகம் 53).

"பாத்ரஸ்ய-ஹி-விசேஷேண-ச்ரத்ததாநதயைவ-ச |
அல்பம்-வா-பஹு-வா-ப்ரேத்ய-
தாநஸ்ய-பலம்-அச்நுதே="

என்று மனுஸ்ம்ருதி 7-வது அத்யாயம் 86-வது சுலோகம் கூறுகிறது.

31. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

நல்லவை = புண்ணியங்களை, நாடி = கருதி, இனிய = இனியசொற்களை, சொல்லின் = கூறினால், அல்லவை = பாபங்கள், தேய = குறைய, அறம் = தர்மம், பெருகும். முதன் முதலில் பாபச்செயல்களின் பயனைப் போக்க முயலவேண்டும். அது அழிந்தால் புண்ணியச் செயல்களின் பயன் தானே பெருகும் என்பது கருத்து.

"ஜிஹ்வாக்ரே-வர்ததே-லக்ஷ்மீ :",
நீதிசாஸ்த்ரம்.

32. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(பயன் தெரிவார் = உபகாரத்தின் பயனை ஆராய்வார்) தங்கள் = தம்மிடத்தில், விழுமம் = துன்பத்தை, துடைத்தவர் நட்பு = போக்கியவருடைய சினேகத்தை எழுமை எழுபிறப்பும் = புண்யபாபங்கள் தொடரும் ஏழுவகைப்பட்ட பிறப்புக்களிலும், உள்ளுவர் = நினைப்பர்.

தனது எழுஜன்மங்களிலும், தன் சந்ததியில் எழு தலைமுறைகளிலும், மறக்க முடியாதது தனக்கொருவர் ஆபத்து காலத்தில் உதவியது என்றும் கருத்துக் கொள்ளலாம். தனது மறுஜன்மங்களில் அனேகமாய் எல்லோர்க்கும் பூர்வஜன்ம நினைவு மறந்துபோயினும் பேருதவி செய்தவரை மறுஜன்மத்தில் காண நேர்ந்தால் நம்மை யறியாமலேயே அவரிடம் பூர்வஜன்ம வாசனையினால் பேரவா ஏற்படலாம் என்பது கருத்து.

33. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

கொன்றன்ன=(நமக்கு முன் நன்மைசெய்தவர்) கொல்லுதலை ஒத்த, இன்னா=தீச்செயலை, செயினும் செய்தாலும், அவர் செய்த, ஒன்று நன்று=ஒரு உபகாரத்தை, உள்ள=நினைக்க, (அது) கெடும்=போக்கப்படும்.

முன் உபகாரம்செய்தவன் பின்னர்ப் பெரிய அபகாரத்தைச் செய்யினும், அவன் செய்த உபகாரத்தை நினைத்து அபகாரத்தை மறப்பது கடனாகும் என, "பூர்வோபகாரீ - ய:- தே - ஸ்யாத் - அபராயே - ஹரீயஸி - உபகாரேண - தத் - தஸ்ய - க்ஷந்தவ்யம் - அபராயின:" என்று மகாபாரதம் வனபர்வம் 28 வது அத்யாயம் 27 வது சுலோகம் கூறும்.

34. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. [வில்லை

எந்நன்றி=எவ்வகைப்பட்ட அறத்தையும், கொன்றார்க்கும்=சிதைத்தவர்க்கும், உய்வு=பிராயச்சித்தம், உண்டாம்=இருக்கிறது; செய்ந்நன்றி=செய்யப்பட்ட

உபகாரத்தை, கொன்ற மகற்கு = மறந்தவனுக்கு, உய்வு = பிராயச்சித்தம், இல்லை.

"ப்ரம்மஹத்தி செய்தவனுக்கும், கள்ளினைக் குடித்தோனுக்கும், திருடனுக்கும், வ்ரதமிழந்தவனுக்கும், பெரியோர்களால் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டது. செய்ந்நன்றி கொன்றோனுக்கு விதிக்கப்படவில்லை" என

"ப்ரஹ்மவு௲ நே - ச - ஸுராபே - ச - சோரே - ஹநீ நவ்ரதே தயூா | நிஷ்க்ருதி:- விஹிதா - ஸத்ஹி :- க்ருதவு௲ நே - நாஸ்தி நிஷ்க்ருதி :" || என்று

ஸ்ரீமத் ராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் 34-வது சர்க்கம் 12-வது சுலோகமும், மகாபாரதம் சாந்திபர்வம் 277-வது அத்யாயம் 11-ம் சுலோகமும் கூறும்.

" ஆன்முலை யறுத்த அறனில் லோர்க்கும்,
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்,
பார்ப்பார் தப்பிய கொடுமை யோர்க்கும்,
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென,
நிலம்புடை பெயர்வ த்தாயினு மொருவன்,
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ"

என்னும் புறநானூற்று (34-வது) செய்யுளும் இக்கருத்தையே கூறும்.

35. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்
கோடாமை சான்றோர்க் கணி. [தொருபால்

கோல் = தூக்குங்கோல், சமன்செய்து = (இருபுறமும்) சமனாகச் செய்யப்பட்டு, சீர் = சமமான நிறையை, தூக்கும்போல் = தூக்கிக் காட்டுகிறது போல், அமைந்து = (வாதிகள் இருவரிடமும்) சமமான எண்ணத்

தோடு இருந்து, ஒருபால்=ஒரு பக்கத்தில், கோடா மை=நடுநிலை தவறுமை, சான்றோர்க்கு=மேலோருக்கு அணி=ஆபரணம் (ஆகும்).

இக்கருத்தையே பின்னர்க் கூறப்பட்ட புறநானூறு, மதுரைக் காஞ்சி, கலித்தொகை இவற்றிலுள்ள அடிகள் குறிக்கும்.—

விரிசீர்த்

தெரிகோல் ஞமன்ன போல வொருதிறம்
பற்றலிலியரோ (புறநானூறு, 6, 8—9)
ஞெமன் கோலன்ன செம்மைத்தாகி (மதுரைக்கா 4-1)
ஓர்வுற்றொருதிற மொல்காத நேர்கோல்
அறன்புரி நெஞ்சத்தவன், (கலித். 42, 14-15).

ஸம:- அஹம் - ஸர்வஹ்ருதேஷு பச்ய - மே - ஜாஜலே - வ்ரதம் | துலா-மே - ஸர்வஹ்ருதேஷு - ஸமா - திஷ்டதி - ஜாஜலே ||

என்ற மகாபாரதம் சாந்திபர்வம் 238-வது அத்யாயம் 10-வது சுலோகம் இங்கு குறிப்பிடத்தகும்.

36. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

பிறவும்=பிறருடைய பொருள்களையும், தமபோல் =தம்முடைய பொருள்கள்போல, பேணி=போற்றி, செயின்=செய்தால், அஃதே, வாணிகஞ்செய்வார்க்கு= வணிகர்க்கு, வாணிகம்=உயர்ந்த வணிகத் தன்மை (ஆகும்).

இக்குறள் வைசியரின் சிறப்புத்தன்மையைக் கூறுகின்றது.

37. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும்.

அடக்கம் = இந்திரியங்களை அடக்குதல், அமரருள் = தேவர்களுள், உய்க்கும் = செலுத்தும்; அடங்காமை = அவற்றை அடக்காமை, ஆரிருள் = நெருங்கிய இருளோடுகூடிய நரகத்தில், உய்த்துவிடும் = திண்ணமாய்ச் செலுத்தும்.

இந்திரியங்களின் இயற்கை தாம் எவ்விஷயத்தைக் கொள்ளக்கூடாதோ அவற்றைக் கொள்ளுதலே ஆகும். அவற்றைத் துஷ்டக்குதிரைகட்கு ஒப்பிடும் கடோபனிஷத்து (1-3-5). அவ்வாறு அவைகளைப் போகவிட்டால் அதன் பயன் நரகத்தை அடைவதே யாகும்; அவ்வாறு போகவிடாது அவற்றை இழுத்து, கொள்ளவேண்டிய விஷயங்களிற் செலுத்தினால் அதன்பயன் ஸ்வர்க்கத்தை அடைதல் ஆகும். ஆரிருள் என்பதும் ஈசாவாஸ்ய உபநிஷத்தில் உள்ள "அந்தம் தம:" என்பதும் ஒரு பொருட்கிளவி ஆகும்.

38. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து.

ஆமைபோல், (உயிர் = மனிதன்), ஒருமையுள் = ஒரு பிறப்பில், ஐந்து = ஐந்து ஞானேந்த்ரியங்களையும், அடக்கல் ஆற்றின் = அடக்கினால், அஃது, எழுமையும் = ஏழு பிறப்புக்களிலும், ஏமாப்பு உடைத்து = க்ஷேமம் தருதலை உடைத்தது.

"ஆமை எவ்வாறு எல்லா அங்கங்களையும் குறுக்கிக் கொள்ளுமோ, அவ்வாறு இந்திரியங்களை அவ்வவற்றின் விஷயத்தில் செல்லாது அடக்குபவன் நிலைபெற்ற பிரக்

ஞையை அடைவான்” என "யதா - ஸம்ஹரதே - ச - அயம் - கூர்ம :-அங்கானி - இவ - ஸர்வஶ: இந்திரியாணி - இந்த்ரியார்த்தேப்ய : - தஸ்ய - ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா” என்னும் பகவத்கீதை 2வது அத்யாயம் 58 வது சுலோகம் கூறும்.

"யதா.ஸம்ஹரதே - காமான் - கூர்ம: - அங்ஙானி - இவ ஸர்வஶ: | ததா - ஆத்மஜ்யோதி:- ஆத்மா - அயம் - ஆத்மன்யேவ - ப்ரபஶ்யதி" என்னும் மகாபாரதம் சாந்தி பர்வம் 173 வது அத்யாயம் 51 வது சுலோகமும் இந்த கருத்தையே கூறும்.

39. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

கதம் = கோபத்தை, காத்து = போக்கி, கற்று = (நூல்களை) ஆராய்ந்து, அடங்கலாற்றுவான் செவ்வி = இந்திரியங்களை அடக்குவானுடைய நன்மைக்குரிய பக்குவகாலத்தை, அறம் = தாமக்கடவுள், ஆற்றன் = அவன் வழியே சென்று, பார்க்கும் = நோக்கி நிற்கும்.

இந்திரியநிக்ரஹம் செய்வோனை அனுக்ரகிக்க அறக்கடவுள் காத்துக்கொண்டிருக்குமென்பது கருத்து. இந்திரியங்களை அடக்குவதற்குத் தர்மசாஸ்திரங்களின் அறிவும், தூய்மையான செயலைச் செய்தலும், அக்காரணம் பற்றிவரும் மனத்தூய்மையும் காரணமாகும் என்பது கடோபனிஷத்தால் (1.3.6,8) விளங்கும்.

40. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் = தர்மசாஸ்திரங்களில் தத்தம் வர்ணங்களுக்கேற்ற முறைப்படியும், பெரியோரால் நடக்கப்

பட்ட முறைப்படியும் நடத்தலை, உடைமை, குடிமை = நற்பிறப்பிற்குக் காரணம், (ஆகும்); இழுக்கம் = சதாசாரத்திலிருந்து தவறுகை, இழிந்த பிறப்பு = இழிந்த பிறப்பிற்குக் காரணம், ஆய்விடும் = ஆகும்.

குடிமை, பிறப்பு, இவை அவற்றின் காரணம் எனப் பொருள் தருதலின் ஆகுபெயராகும்.

" தர்மநூல்கள் தன் வர்ணத்திற்கு விதித்த அனுஷ்டானங்களைச் செய்தால் அதுவே உயர்வு என்றும் பிறருக்கேற்பட்ட தர்மத்தை அனுஷ்டித்தால் தன் பிறப்பினின்று நழுவிவிடுகிறான்" என்ற கருத்துள்ள "வரம் - ஸ்வயுர்ம :- விகுண :- ந - பாரக்ய: - ஸ்வனுஷ்டித :- பரயுர்மேண - ஜீவன் - ஹி - ஸத்ய :- பததி - ஜாதித:" என்னும் மனுஸ்ம்ருதி 10 வது அத்யாயாம் 97 வது சுலோகம் கூறுவது இங்கு நோக்கத்தகுந்தது. " ஸ்வஹாவ - விஹிதம் - கர்ம - குர்வன் - ந - ஆப்னோதி - கில்஬ிஷம்," "பரயுர்மோ - ஹயாவஹ:" என்னும் பகவத்கீதை 18 வது அத்யாயம் 35 வது சுலோகத்திலுள்ள வாக்கியமும் இக்கருத்தையே சொல்லும்.

41. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். [பான்

ஓத்து = (கற்ற) வேதத்தினை, மறப்பின் உம் = மறந்தானாயினும், கொளல் ஆகும் = (வருணம் கெடாமையின் பின்னும் அஃது) ஓதிக்கொள்ளலாம். பார்ப்பான் = அந்தணனது, பிறப்பு = (உயர்ந்த) வருணம், ஒழுக்கம் குன்ற = தன் ஒழுக்கம் குன்ற, கெடும்.

'மறந்தவழி இழிகுலத்தனு மாகலின் "மறக்கலாகாது" என்னும் கருத்தான் "மறப்பினும்" என்றார்.

சிறப்புடைவருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்களுக்கும் கொள்ளப்படும் என்று கூறுகிறார் பரிமேலழகர்.

ஒவ்வொரு பிராம்மணனும் வேதாத்யயனம் செய்து வேதங்களை மறவாது இருக்கவேண்டும் என்றும், மறப்பின் மறுபடியும் அத்யயனம் செய்யவேண்டும் என்றும், பிராம்மணனாய்ப் பிறந்தது முதல் பிராம்மணதர்மங்களிலிருந்து ஒருபோதும் தவறக்கூடாதென்றும், தவறினால் அதனாலுண்டாகும் கேட்டை அனுபவித்தே தீரவேண்டும் என்றும் இக்குறள் கூறும்.

[பார்ப்பான் தன் பிறப்பிற்குரிய ஒழுக்கங் குன்றின் கேடு அவனுக்கு மாத்திரமன்றி, நாட்டில் உள்ளோர் அனைவர்க்கும் கேடு நிகழும் என்பதை உணர்த்துவதற்கே பார்ப்பானின் பிறப்பொழுக்கம் ஒருக்காலும் தவறக்கூடாது என்று உரை கூறுவாருமுளர்].

சூர்யகிரஹணம் முதலிய புண்யகாலங்களில் சொல்லப்படும் மகாசங்கல்பத்தில்வரும் "ஜாதி-ப்ரம்ஶ-கராணம்" என்ற பதத்தினால் குறிக்கப்படும் பாபத்தையே இங்கு "ஒழுக்கம் குன்ற" என்ற தொடரினால் ஆசிரியர் குறிக்கிறார்.

42. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்
அறனொன்றோ வான்ற வொழுக்கு [றோர்க்கு

பிறன்மனை = பிறன்மனைவியை, நோக்காத = பாராத, பேராண்மை = பெருந்தன்மை, சான்றோர்க்கு = மேலான கிருஹஸ்தர்களுக்கு, ஒன்று = ஒப்பற்ற, அறனோ = தர்மமும், ஆன்ற = மேலான, ஒழுக்கு = ஒழுக்கமும், (ஆகும்).

“புறப்பகைகளை யடக்கும் ஆண்மையுடையவர்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின் அதனை அடக்கிய ஆண்மையைப் பேராண்மை என்றார்” என்று கூறுகிறார் பரிமேலழகர்.

43. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

தன் = தனக்கு, பிறர், திறனல்ல = செய்யத்தகாத காரியங்களை, செய்யினும் = செய்தாலும், (அதனால் அவர்கட்கு வரும்) நோ = வருத்தத்திற்கு, நொந்து = வருத்தப்பட்டு, அறனல்ல = தர்மமல்லாத காரியங்களை, செய்யாமை, நன்று = நல்லது.

தமக்குத் தீங்குசெய்தோர்க்குத் தாமும் தீங்கிழைக்க வேண்டும் என நினைத்தல் இயற்கையாயினும், அதனைத் தடுத்தலே மேலானது என்பது கருத்து.

ஸ்ரீமத் ராமாயணத்தில் அயோத்யாகாண்டம் 1வது சர்க்கம் 11 வது சுலோகத்தில் “ந - ஸ்மரதி - அபகாராணாம் - ஶதம் - அபி - ஆத்மவத்தயா” என்று ஸ்ரீராமனுடைய குணங்களை வர்ணிக்குமிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கவும். ஒருவன் தனக்கு நூற்றுக்கணக்கான இன்னல்கள் செய்யினும் தனது பெருந்தன்மையினால் அவைகளை நினைக்கக்கூடமாட்டான் ஸ்ரீ ராமபிரான் என்பது இதன் பொருள்.

44. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்
ஏதம் படுபாக் கறிந்து. [றின்

(நினைப்பவர் = ஆராய்வோர்) இழுக்காற்றின் = கெட்டவழி காரணமாக, ஏதம் = தீமை, படுபாக்கு = வரு

தலை, அறிந்து, அழுக்காற்றின் = பொறாமையால், அல்லவை = தீச்செயல்களை, செய்யார் = செய்யமாட்டார்கள்.

45. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

மற்றின்பம் = பேரின்பத்தை (மோக்ஷத்தை), வேண்டுபவர், சிற்றின்பம் = சிற்றின்பத்தை, வெஃகி = விரும்பி, அறனல்ல = தீச்செயல்களை, செய்யார் = செய்யமாட்டார்.

இம்மையின்பம், மறுமையின்பம், இரண்டும் சிற்றின்பம் எனப்படும், இரண்டிற்கும் எல்லையிருத்தலின்.

46. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும்.

(ஒருவன்) புறங்கூறி = ஒருவர் இல்லாத இடத்து அவரைப்பற்றிக் குற்றம் கூறி, பொய்த்து = எதிரில் பொய்யாக நடித்து, உயிர்வாழ்தலின் — உயிரோடு இருத்தலைக்காட்டிலும், சாதல், அறம் = தர்மநூல்கள், கூறும் = சொல்லும், ஆக்கம் = நன்மையை, தரும் = கொண்டுவரும். புறங்கூறுதலால் வரும் பாவத்தைச் சாதல் தடுக்கும் என்பது கருத்து.

47. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(ஒருவன்) மறந்தும், பிறன்கேடு = பிறனுக்குக் கேட்டினை, சூழற்க = செய்யநினைக்கக் கூடாது; சூழின் = நினைத்தால், சூழ்ந்தவன் = நினைத்தவனுக்கு, கேடு = கேட்டினை, அறம் = அறக்கடவுள், சூழும் = நினைக்கும். "கெடுவான் கேடுநினைப்பான், விநாசகாலே விபரீத புத்தி:," என்பன ஆன்றோர்வாக்கியங்கள்.

48. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
ஒப்புரவி னல்ல பிற.

ஒப்புரவின் = உபகாரத்தைக் காட்டிலும், பிற = வேறான, நல்ல = நற்செயல்களை, புத்தேளுலகத்தும் = சுவர்க்கத்திலும், ஈண்டும் = இவ்வுலகத்திலும், பெறல் = பெறுதல், அரிது = இல்லை, ஏ — அசை.

இம்மையிலும் மறுமையிலும் பரோபகாரமே சிறந்தது என்பது கருத்து.

இந்த கருத்தையே பின் குறிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பாகவத ச்லோகங்களும் வெளியிடுகின்றன :—

பஶ்யத-ஏதான்-மஹாபாகான்-பர-அர்த்த-ஏகாந்த-ஜீவிதான்-
வாத-வர்ஷ- ஆதப-ஹிமான்-ஸஹந்த:-வாரயந்தி ந:-
அஹோ-ஏஷாம்-வரம்-ஜன்ம-ஸர்வ-ப்ராணி-உபஜீவனம்-
ஸுஜனஸ்ய-இவ-யேஷாம்-வை-விமுகா-யாந்தி-ந-அர்த்தின:-
பத்ர-புஷ்ப-ஃபல-ச்சாயா-மூல-வல்கல-தாருபி:-
கந்த-நிர்யாஸ-பஸ்ம-அஸ்தி-தோக்மை:—காமான்-விதன்வதே-
ஏதாவத்-ஜன்ம-ஸாஃபல்யம்-தேஹினாம்-இஹ-தேஹிஷு-
ப்ராணை: அர்த்தை:-தியா-வாசா-ஶ்ரேய-ஏவ-ஆசரேத்-ஸதா
ஸ்ரீ பாவதம் 10 வதுஸ்கந்தம் 23 வது அத்யாயம் 32-35.

49. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்.

அருள் = தயையோடு, சேர்ந்த = கூடிய, நெஞ்சினார்க்கு = மனமுடையவர்க்கு, இருள் சேர்ந்த இன்னா உலகம் = இருளோடு கூடிய நரகத்தை, புகல் = புகுதல், இல்லை.

"எல்லா பூதங்களிடத்தும் அபயத்தைக் கொடுப்போன் சிறந்த விஷ்ணுவின் பரமபதத்தை யடைவான்"

என, "அபயம்-ஸர்வ-பூதேப்ய:-ய:-ததாதி-மஹீபதே ஸ - மச்சதி - பரம் - ஸ்தானம் - விஷ்ணோ:- பதம் - அநமயம்" என்னும்-மகாபாரதம் ஸ்திரீபர்வம் 7 வது அத்யாயம் 25 வது சுலோகம் கூறும். அருளுடையார்க்கு நரகவேதனை இல்லை என்பது கருத்து.

50. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளி
 இவ்வுலக மில்லாகி யாங்கு. [லார்க்

பொருள் இல்லார்க்கு, இவ்வுலகம் = இவ்வுலகத்தின்பம், இல்லாகியாங்கு = இல்லாதது போல, அருளில்லார்க்கு, அவ்வுலகம் = காரியப்ரம்மலோகத்தின் இன்பம், இல்லை.

துறவறத்தைப் பூண்டமையால் அவர் ப்ரம்மலோகத்தை யடைந்தபோதிலும் அருளில்லாத காரணம் பற்றி அவர் ஆங்கு இன்பத்துடன் இரார் என்பதே இக்குறளுக்குக் கருத்து என்று கூறலாம்.

51. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்
 எங்ஙன மாளு மருள். [பான்

தன் = தன்னுடைய, ஊன்பெருக்கற்கு = உடம்பை வளர்த்ததற்கு, தான், பிறிதூன் = வேறொன்றின் ஊனை உண்பான், அருள் = அருளை, எங்ஙனம் = எப்படி, ஆளும் = தன்வசப்படுத்துவான்?

"மற்றொன்றன் மாமிசத்தால் தன் மாமிசத்தை வளர்க்க விரும்புகின்றவனைக் காட்டிலும் கொடியன் இல்லை" எனப் பொருள்பட "ஸ்வ - மாம்ஸம் - பர மாம்ஸேந - யோ - வர்த்தயிதும் - இச்சதி - நாஸ்தி - க்ஷுத்ரதர:—தஸ்மாத் - ந - ந்ருசம்ஸதரோ - நர:"

என்னும் மகாபாரதம் அனுசாசனபர்வம் 178 வது அத்தியாயம் 13 வது சுலோகமும், "ஸ்வ - மாம்ஸம் - பர - மாம்ஸேன - யோ - வர்யயிதும்- இச்ஹதி - உத்விக்ன வாஸம் லஹதே-யத்ர-யத்ரஉபஜாயதே" என்னும் ஸஹா பர்வம் 233 வது அத்யாயம் 6 வது சுலோகமும், "ஸ்வ-மாம்ஸம் - பரமாம்ஸேன -யோ - வர்யயிதும்-இச் ஹதி - அவிச்வாஸ்யோ- அவஸீதேத் - ஸ - இதி - ஹோவாச - நாரத:" என்று மேற்படி பர்வம் 177 வது அத்தியாயம். 14 வது சுலோகமும், "ஸ்வமாம்ஸம் - பரமாம்ஸேன - யோ - வயயிதும் - இச்ஹதி - அனஹீயர்ச்ய - பித்ரூன் - தேவான் - ததோ - நாஸ்தி அபுண்யக்ருத்" என்று மனுஸ்ம்ருதி 5 வது அத்யாயம் 52 வது சுலோகமும் கூறும்.

52. அவி சொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

அவி = ஹவிஸ்ஸுக்களை, சொரிந்து = மிகுதியாகக் கொடுத்து, (இல்லறத்தான்), ஆயிரம் வேட்டலின் = ஆயிரம் யாகங்கள் செய்வதைக்காட்டிலும், ஒன்றன் = ஒன்றினுடைய, உயிர் = பிராணனை, செகுத்து = போக்கி, (துறவறத்தான்), ஊன் = மாமிசத்தை உண்ணாமை, நன்று = நல்ல பயனைத் தரும்.

இந்த குறளுக்குப் பரிமேலழகர் அடியில் கண்டவாறு உரைசெய்திருக்கிறார்:-

அவிசொரிந்து = (தீயின் கண் நெய் முதலிய) அவிகளைச் சொரிந்து, ஆயிரம் வேட்டலின் = ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை = ஒருவிலங்கின் உயிரைப்போக்கி (அது நின்றஊனை) உண்ணாமை, நன்று.

அவ்வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தால் வரும் பயனே பெரிதென்பதாம்.

- "மாதம் ஒரு அச்வமேதமாக நூறு வருஷம் செய்பவனும், மாமிசம் தின்னாதவனும் சமம்" என "மாஸி-மாஸி - அஸ்வமேயேன - யோ-யஜேத - மதம் - ஸமா: - ந - வாஷதி - ச - யோ - மாம்ஸம் - ஸமம் - ஏதத் - மதம் - மம." என்னும் மகாபாரதம் அனுசாசன பர்வம் 177 வது அத்யாயம் 16 வது சுலோகமும், "தவத்தோர் மாம்சம் உண்ணுவதில்லை" என் "ந- பக்ஷயந்தி - அதோ - மாம்ஸம் தபோயுக்தா :-மனீஷிண:-" என்னும் 176 வது அத்யாயம் 11 வது சுலோகமும் கூறும். "வர்ஷே - வர்ஷே - அஸ்வமேயேன - யோ - யஜேத - ஶதம் - ஸமா :- மாம்ஸானி ச - ந - வாதேத் - ய :- தயோ :- புண்யஃபலம் - ஸமம்" என்னும் மனுஸ்மிருதி 5 வது அத்யாயம் 53 வது சுலோகமும் இந்த கருத்தையே கூறும்.

இக்குறளால் வேள்விகளுக்குப் பயனுண்டென்பதே ஆசிரியர் கருத்து. வேள்வி ஒரு பாபச்செயல் என்பது ஆசிரியர்கருத்து அன்று. ஆயிரம் ஏகாதசி உபவாசங்களைக் காட்டிலும் ஒரு சிவராத்திரி உபவாசம் உயர்ந்தது என்று சொல்லுமிடத்து ஏகாதசி உபவாசமும் ஒரு புண்ணியவ்ரதம்தான் என்றே சொல்லப்பட்டதாகும். அங்ஙனமில்லாது ஏகாதசிஉபவாசம் ஒரு பாபகாரியமாயிருந்தால் சிவராத்திரிவ்ரதமும் அதைவிட ஆயிரம் மடங்கு பாபத்தைக்கொடுக்கக் கூடியதென்ற விபரீதார்த்தமே ஏற்படும். ஆதலால் வேள்வி என்பது ஒரு புண்ணிய காரியமென்ற கருத்தையே இங்கு நாயனார் தெரிவிக்கிறார்.

இக்குறளைப்பற்றிச் சிலர் கீழ்வருமாறு அபிப்பிராயப்படுகிறார்கள் :—

தமிழ்நாட்டில் பண்டை சங்கநூல்களில் புலால் உண்ணுவது ஆக்ஷேபிக்கப்படாதது மாத்திரமேயன்றி அது போற்றப்பட்டு மிருக்கிறது. பழைய தமிழ்மக்கள் புலாலருந்துவதைச் சிறப்பாகத்தான் கொண்டிருந்தார்கள். வேதங்களிலும் யாகம் முதலியவைகளில் மாம்சம் உபயோகப்படுத்தப்பட்டதென்பது தெளிவாகத் தெரிகிறது. ஆதலால் திருவள்ளுவர் வைதிகக்கொள்கையினராயிருந்தாலும் முதன் முதலாக புலால் மறுத்தலைப் பிரசாரம் செய்ததற்குக் காரணம் என்னவெனின், அவர்காலத்தில் வடநாட்டிலிருந்து புத்த சமண மதப்ரசாரங்கள் தென்னாட்டில் ஆரம்பிக்கப்பட்டன. அப்போதிருந்த வைதிகமகான்கள் பௌத்தர்களுடைய அஹிம்ஸைக்கொள்கையைத் தங்களுடைய மதத்தில் சேர்த்துக்கொண்டார்கள். அதனால்தான் இக்காலத்து பிராமணர்கள் புலால் தவிர்த்திருக்கிறார்கள் போலும்.

ஆனால் இவ்விதம் அபிப்பிராயப்படுவது சரியாகத் தோன்றவில்லை. இங்கு அஹிம்ஸாதர்மத்தை உபதேசித்திருப்பது பௌத்தசமயக்கொள்கைகளை அனுசரித்து அன்று, வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் உபதேசிக்கப்பட்டிருக்கிற அஹிம்ஸாதர்மத்தை யனுசரித்தே ஆகும். அதெப்படியென்றால், வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் ஒருவன் கிரகஸ்தாச்ரமத்தை விட்டு ஸன்யாஸாச்ரமத்தை யடையும் போது உலகிலுள்ள எல்லாப்ராணிகளுக்கும் அபயப்ரதான ப்ரதிக்ஞை செய்து அஹிம்ஸாவிரதத்தைக் கைகொள்ளும்

படி உபதேசிக்கின்றன. பௌத்தமதமோ அம்மதத்தில் சேர்ந்தோர் எல்லாருக்குமே கொல்லாமையை உபதேசிக்கிறது. ஆனால் அந்த உபதேசம் அனுஷ்டானத்தில் விபரீதமாகவே முடிந்திருக்கிறது. தற்காலம் பௌத்த மதம் பெருவாரியாக வழங்கும் தேசங்கள் பர்மா, சீனா, ஜப்பான், முதலியன. பொதுவாய் மக்கள் எல்லோரும் அஹிம்ஸாதர்மத்தை யனுஷ்டிக்கவேண்டும் என்கிற இயற்கைக்கு மாறான உபதேசத்தை அந்த மதம் செய்ததின் பயனாக அந்நாடுகளில் மாமிசம் சாப்பிடாதவர்களே இல்லை என்கிற விபரீத அனுஷ்டானம் ஏற்பட்டுப் போய்விட்டது. பௌத்தநாடுகளில் பௌத்தமக்கள் பாம்பு, தவளைகளைக் கூட தின்று விடுவதாகச் சொல்லப் படுகிறது. ஆனால் பர்மா முதலிய நாடுகளிலுள்ள பௌத்தர்கள் "பௌத்தர்கள் நேராகவே கொல்லுவதில்லை. துலுக்கர் முதலிய இதரமதஸ்தர்கள் கொல்வதை நாங்கள் தின்கிறோம். அதிலென்ன தோஷம்" என வாதிக்கிறார்கள் என்று கேள்வி. ஆதி புத்த பகவான் மரணமடைந்ததே ஒரு சிஷ்யனுடைய வீட்டில் அவனால் பரமாரப்பட்ட பன்றிமாம்சத்தை அதிகமாகத் தின்றுவிட்டதால் ஏற்பட்ட அதிசாரம் காரணமாகத்தான் என்று புத்தருடைய சரித்திரங்கள் கூறுகின்றன. (Vide Sacred Books of the East Vol XI page 71-73) பிறர் கொன்றதைத் தாம் சாப்பிட்டால் தவறில்லை என்ற கொள்கையை நம் நாயனார் கீழ்வரும் குறளில் பரிஹஸித்திருக்கிறார் :—

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின்
யாரும் விலைப்பொருட்டா லூன்றருவாரில்."

இக்குறளுக்குப் பரிமேலழகர் கீழ்வருமாறு உரை செய்திருக்கிறார்.

தினல் பொருட்டால் = (பேதைமை காரணமாக வல்லது) ஊன்தின்கை காரணமாக, உலகு = உலகம், கொல்லாது எனின் = கொல்லாதாயின், விலைபொருட்டான் ஊன்தருவார் = பொருள் காரணமாக ஊன்விற்பார், யாரும் = யாவரும், இல் = இல்லை.

"பின் நிகழும் தின்கை முன் நிகழும் கொலைக்குக் காரணமாகாமையின், தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவம் இல்லை" என்ற வாதியை நோக்கி அருத்தாபத்தியளவையால் காரணமாதல் சாதித்தலின் இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது. [இவன் வாங்குவான் என்ற நம்பிக்கையே கொலைஞன் கொல்லுவதற்கு காரணமாகையால்]. "கொன்று தின்ஹூது விலைக்குக் கொள்ளுவர்க்குக் குற்றமென்னை யென்பார்க்கு அதனுனும் கொலைப்பாவம் வருமென்பர் மணக்குடவர்." இந்த கருத்தையே "யதி - சேத் - வாதகோ - ந - ஸ்யாத் - ந. தஷா - வாதகோ -ஐவேத்-வாதக:-வாதகார்யாய - தத் வாதயதி - வை-நர:" என்னும் மகாபாரதம் அனுசாசன பர்வம் 177 வது அத்யாயம் 30-வது சுலோகமும் கூறுகிறது.

நமது வேதசாஸ்திரங்களோ பொதுவாக எல்லா மக்களுக்கும் பூர்ண அஹிம்ஸாதர்மத்தை உபதேசிக்கவில்லை. நாலாவது ஆச்ரமமாகிய ஸன்யாஸாச்ரமத்திற்கு மாத்திரம் உயிருள்ள ஒரு செடியினுள்ள இலையைக்கூடக் கிள்ளக்கூடாது என பூர்ணஅஹிம்ஸாதர்மம் உபதேசிக்கிறது. வர்ணச்ரமங்களின் படிகளையனுசரித்து அஹிம்ஸா தர்மமும் படிப்படியாக கடுமையாக்கப் பட்டிருக்கிறது. சாமவேதத்தில் சாந்தோக்ய உபனிடதத்தின் முடிவில் கிருஹஸ்தாச்ரமத்தைச் சொல்லிக் "குடும்பத்திலிருந்து

கொண்டே சுத்தமான தேசத்தில் யக்ஞங்களைத் தவிர மற்றைப்பொழுது எவ்விதஹிம்ஸையையும் செய்யாமல் இருப்பவன் ப்ரம்மலோகம் எனும் மோக்ஷத்தையடைகிறான்" என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வுலகத்தில் யுத்தம் முதலிய காரியங்களுக்கு நாம் அனேக மக்கள் தம்முயிரைப்பலியிடுதல் எப்படி அவசியமான தர்மமாக ஆகிறதோ அவ்விதம் நம் மனுஷ்யசக்தியைமீறி வானின்று நமக்குக் கிடைத்து நாம் அனுபவிக்கும், மழை, காற்று, ப்ரகாசம், மின்சாரசக்தி, முதலியவைகளுக்குக் கைம்மாருக இவ்வுலகத்திலுள்ள செடி, கொடி, தான்யம் முதல் மனிதன் ஈருக உள்ள உயிர்களை வானுலகின் தளர்ச்சியின்மையின்பொருட்டு நம் பகுத்தறிவிற்கெட்டாத வேத விதிப்படி அர்ப்பணம் செய்வதே யக்ஞம். மனிதர் ஊன் உண்பதற்காக யக்ஞம் ஏற்பட்டதல்ல. யக்ஞங்களில் சோமலதையோ, சீந்துக்கொடியோ, பாபரகிதமான ஒரு கசப்பு ரசத்தையுடையதேயன்றி மயக்கம்தரும் மதுப்பிரிவைச் சேர்ந்ததல்ல. இது வைத்தியநிகண்டுகளைப் பார்த்தாலே தெளிவாகத் தெரிகிறது. ஆதலாலே தான் நம் திருவள்ளுவநாயனுர் கோல்லாமை என்ற அறத்தை வேதசாஸ்திரங்களின் கோள்கையை யனுசரித்து துறவிகளுக்காகவே துறவறவியலில் சொல்லியிருக்கிருர். வேதியரை "அறுதொழிலோர்" என்று மற்ருெரு குறளில் சொல்லுவதினுலேயே வேதியர்க்கு, வேட்டல் (யாகங்களைச் செய்தல்), வேட்டுவித்தல் [யாகங்கள் செய்வித்தல்] இரண்டும் ஸ்வதர்ம்மெனக் கருதுகிருர்.

இதிலிருந்து தற்காலமுள்ள வேதியர்கள் யக்ஞத்தைத் தவிர இதரகாலங்களில் கொல்லாவிரதம் பூண்டிருப்பதும், திருவள்ளுவர் கொல்லாமையை உபதேசித்

திருப்பதும், பௌத்தம் முதலிய நாஸ்திகமதங்களின் வாசனையால் அல்ல என்பதும், ஆஸ்திகமதமான அனுதி வேதசாஸ்த்ரங்களை யனுசரித்தே யென்பதும் அறியப் படுகின்றன. தமிழ் நாட்டு சங்ககாலத்து நூல்களிலும் மாம்சத்தை உண்டு களிக்கும் பழக்கத்தைக் குறிக்கும் பாடல்கள் அறுதொழிலோராகிய வேதிய இல்லறத் தவரையோ அல்லது அந்தணரெனும் சொல்லாற் குறிக்கப்பட்ட "எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொ ழுகும்" ஸன்யாஸாச்ரமிகளையோ பற்றி எழுந்ததல்ல என்பது வெளிப்படை.

53. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்
மற்றை யவர்க டவம். [கொல்

துறந்தார்க்கு = துறவறம் பூண்டார்க்கு, துப்புரவு = உபசாரத்தை, வேண்டி = செய்யவேண்டி, மற்றையவர் கள் = இல்லறத்திலுள்ளார், தவம் = தவத்தை, மறந்தார் கொல் = மறந்தாரோ ?

மற்றையவர்கள் என்பது ப்ரம்மசாரி, கிருகஸ்தன், இருவரையும் குறிக்க ஆற்றலுடைத்தாயினும், துப்புரவு செய்தல் ப்ரம்மசாரியால் முடியாதாகையால் அச்சொல் கிரகஸ்தரையே குறிக்கும் என்க. "இல்வாழ்வா னென் பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணை (17 வது குறள்)" என்பது ஈண்டு ஒப்பிடத்தக்கது.

54. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்
ஈண்டு முயலப் படும். [தவம்

(ஒருவன்), வேண்டிய = விரும்பியவற்றை, வேண்டி யாங்கு = விரும்பியபடியே, எய்தலான் = அடைதலான், ஈண்டு = இவ்வுலகத்தில், செய்தவம் = செய்ய வேண்டிய

தவம், (ஒருவனால்), முயல=முயறல், படும்=பொருந்தும்.

எவை நினைத்தற்கும் அடைதற்கும் அரிதோ அவையெல்லாம் தவத்தால் அடையப்படும் என "யத் - தூஸ்தரம் - தூஸ்தராம்ஞயம்-தூஸ்தராயுர்ஷம் - தூஸ்தரன்வயம் - தத்ஸர்வம் - தபஸா - ஸாத்யம்-தபோ-ஹி - தூஸ்தர் அதிக்ரமம்" என்னும் மகாபாரதம் அசுவமேதபர்வம் 51வது அத்யாயம் 17 வது சுலோகம் கூறுகிறது.

"மாண்ட மனம்பெற்றார் மாசிலுறக்கத்து வேண்டிய வேண்டியாங் கெய்துதல் வாய்" என கலித்தொகை 143 வது செய்யுள் கூறும்.

55. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும்.

வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம்=வஞ்சகத்தோடு கூடிய மனத்தையுடையானின் குற்றமுள்ள நடத்தையை-(கண்டு), அகத்து=உடலில், (உள்ள) பூதங்கள் ஐந்தும்=ஐந்து பூதங்களும், நகும்=பரிகசிக்கும்.

"கர்மேந்த்ரியாணி - ஸம்யம்ய - ய - ஆஸ்தே - மனஸா - ஸ்மரன் - இந்த்ரியார்த்தான் - விமூடாத்மா - மித்யாசார :- ஸ - உச்யதே (கீதை-3-6.) என்னும் சுலோகம் இங்கு குறிப்பிடத் தகுந்தது.

மனம் கெட்டு, வெளிப்புறத்தில் நன்னடக்கையோடு கூட இருப்பதாக நடித்தல் துறவறத்தான் கொள்ளத் தகுந்தது அன்று என்பது கருத்து.

56. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

நூலோர் = சாஸ்திரங்கள் எழுதிய பெரியோர், தொகுத்தவற்றுள் எல்லாம் = தொகுத்துக்கூறிய தர்மங்கள் எல்லாவற்றுள்ளும், தலை = சிறந்தது, (துறவறத்தான்) பகுத்து = (உண்பதனை பல சிறு உயிர்கட்கும்) பிரித்துக்கொடுத்து, உண்டு = உண்பித்து, பல்லுயிர் = பலப்ராணிகளையும், ஓம்புதல் = காத்தல், ஆகும்.

வானப்ரஸ்தன் ஒருவருஷத்திற்கு வேண்டிய பொருளைச் சேகரித்து வைத்துக்கொள்ளலாமென்றும்- அதிதிகளை உபசரிக்கவேண்டும் என்றும் தர்மசாஸ்த்ரங்கள் கூறுவதை ஈண்டு இந்நூலாசிரியர் கூறியிருத்தல் நோக்கத்தக்கது. இக்குறளில் துறவறத்தான் என்பது வானப்ரஸ்தனை மாத்திரம் குறிக்கும்.

"ஸமா - நிசய - ஏவ-வா" என்கிறது மனுஸ்ம்ருதி, 6 வது அத்தியாயம் 18 வது சுலோகம்.

57. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

நில்லாதவற்றை = நிலையில்லாத பொருள்களை, நிலையின = நிலையுள்ளவை, என்று, உணரும், புல்லறிவாண்மை = சிற்றறிவைக் கொள்ளுதல், கடை = இழிந்தது, ஆகும்.

இப்பொருள் நித்தியம் இப்பொருள் அநித்தியம் என்ற விவேகம் சன்னியாசிக்கு வேண்டும் என்பது இக்குறளின் கருத்து.

58. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

இவ்வுலகு = இந்தஉலகம், ஒருவன், நெருநல் = நேற்று, உளன் = இருந்தான், இன்று = இப்பொழுது,

இல்லை = இறந்துவிட்டான், என்னும் = என்று கூறப் படும், பெருமை = பெருமையை, உடைத்து.

இங்குப் பெருமை என்பது அதற்கு மாறுபாடான இழிவு என்ற பொருளைக் கொண்டது.

ஸூக்ஷ்மசரீரத்தோடு கூடிய ஜீவன் ஸ்தூலசரீர மின்றி ஒரு செயலையுஞ் செய்யத்தகாதவனுகையாலும், ஸ்தூலசரீரம் எப்போது அழியும் எனத் திண்ணமாய்க் கூற இயலாமையாலும், அது நன்னிலையில் இருக்கிறது என எண்ணுங்காலத்தே அழியுமாகையாலும் அதனை நிலையுள்ளது என்று எண்ணுதல் சன்னியாசிக்குத்தகாது.

"நேற்று இருந்தான், இப்பொழுது இறந்தான்" என ருக்வேதம் 10 வது மண்டலம் 55 வது சூக்தமும், அதர்வவேதம் 9 வதுகாண்டம் 10 சூக்தமும், "இப் போதே நான்கண்ட அவன் எவ்வாறு இறந்தான்" என "இதானீம் - தாவத் - ஏவ - அஸௌ - மயா - த்ருஷ்ட:- கயம் - ம்ருத:" என்னும் மகாபாரதம் சாந்திபர்வம் 227 வது அத்யாயம் 99-100 வது சுலோகமும் கூறும்.

59. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

உடம்போடு = ஸ்தூலசரீரத்துடன், உயிரிடை = உயிர்க்கு, (உள்ள) நட்பு = சம்பந்தம், குடம்பை = முட்டை, தனித்து, ஒழிய = கிடப்ப, புள் = பறவை, பறந்தற்று = பறந்தது போன்றது.

பறவை குஞ்சாகப் பொறிக்கப்படும் வரை அதற்கு முட்டையோட்டுடன் சம்பந்தமும், குஞ்சாகப் பொறிக் கப்பட்ட பின்னர் அதற்கு அதனோடு சம்பந்தமின்மை யும், அது வெளியில் எறியப்படுவதும் நோக்கத்தக்கன.

60. யாதனின் யாதனின் னீங்கியா னோதல்
அதனி னதனி னிலன்.

யாதனின் யாதனின் = எவ்வெப்பொருள்களினின் றும், நீங்கியான் = பற்றைவிட்டவன், அதனின் அதனின் = அவ்வப்பொருள்களினின்றும், நோதல் இலன் = வருத் தத்தை அடையான்.

இக்கருத்தையே "யதோ - யதோ - நிவர்ததே - தத :- தத : விமுச்யதே - நிவர்தனுத் - ஹி - ஸர்வதோ - ந - வேத்தி - துக்கம் - அணு - அபி" என்னும் மகாபாரதம் உத்யோகபர்வம் 36 வது அத்யாயம் 14 வது சுலோக மும் " யதா - யதா - ச - பர்யேதி-லோக தந்த்ரம் - அஸாரவத் - ததா - ததா - விராக :—அத்ர - ஜாயதே - ந - அத்ர - ஸம்ஶய :" என்னும் மகாபாரதம் சாந்திபர் வம் 374 வது அத்யாயம் 4 வது சுலோகமும் கூறும்.

பொருளின்கண் உள்ள பற்றே அப்பொருள்பற்றி வரும் வருத்தத்திற்குக் காரணமே யன்றி, பொருள் தானே யில்லை என்பது இக்குறளின் கருத்து.

61. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்
வேண்டிய வெல்லா மொருங்கு. [வேண்டும்

ஐந்தன் = ஐந்து இந்திரியங்களின், புலத்தை = விஷ யங்களின் நுகர்ச்சியை, அடல் வேண்டும் = அழியும்படி செய்யவேண்டும்; வேண்டிய எல்லாம் = சேர்க்கப்பட்ட பொருள்கள் எல்லாவற்றையும், ஒருங்கு = ஒரே காலத் தில், விடல்வேண்டும்.

ஒருவன் துறவி ஆகும்போது பெண்ணாசை, மண் ணாசை, மக்களாசை விட்டேன், விட்டேன், விட்டேன் எனக் கூறுதல் யாவரும் அறிந்ததே. உண்மையாய்

அவற்றை விடுவதற்கு இன்றியமையாத காரணம் அவன் தனது இந்திரியங்களை முழுவதும் அடக்குதலேயாகும் என்பதை இக்குறள் அறிவிக்கின்றது.

62. யானென தென்னுஞ் செறுக்கறுப்பான்
உயர்ந்த வுலகம் புகும். [வானோர்க்கு

(உடல் = உடலையும்) (ஐந்து = ஐந்து இந்திரியங்களையும்), (வேண்டிய எல்லாம் = தேடிய பொருள்கள் எல்லாவற்றையும்), யான், எனது, என்னும், செறுக்கு அறுப்பான் = மயக்கத்தைப் போக்குபவன், வானோர்க்கு உயர்ந்த = தேவதைகளுக்கும் அடைதற்குச் சிறந்த, உலகம் = பிரம்மலோகத்தை, புகும் = அடைகின்றான்.

வானோர்க்கு உயர்ந்த உலகம் என்பதற்குத் தேவதைகள் இருக்கும் ஸ்வர்க்கத்திற்கும் மேற்பட்ட உலகம் எனப் பொருள் கூறினும் பொருந்தும்.

உலகம் என்பதற்கு ப்ரம்மாவின் உலகம் என்றும் பிரம்மம் ஆகிய உலகம் என்றும் பொருள்கொள்ளலாம்.

சுத்தமான தியானயோகத்தால் நிர்மமர்களாயும், நிரஹங்க்ருதர்களாயும் இருக்கும் மகாத்மாக்கள் மேலான லோகத்தை யடைகின்றனர் என "த்யான - யோகேந -ஸம்சுத்தேந - நிர்மமா:- நிரஹங்க்ருதா:- ஆப்னுவந்தி - மஹாத்மான :- மஹாந்தம் - லோகம் - உத்தமம்" என்னும் மகாபாரதம்அஸ்வமேத பர்வம் 51 வது அத்யாயம் 22வது சுலோகமும், "நிர்மமர்களாயும் நிரகங்க்ருதர்களாயும் இருப்பவர்கள் திண்ணமாய் முக்தியை அடைகின்றனர்" "நிர்மமோ - நிரஹங்காரோ - முச்யதே ந - அத்ர-ஸம்சய:" என்னும் மேற்சொன்ன பர்வம் 36 வது அத்யாயம் 19 வது சுலோகமும் கூறும். இந்த கருத்தையே, "த்வ்யக்ஷரஸ்து - ஃவேத் - ம்ருத்யு :-

த்ர்யக்ஷரம் - ப்ரஹ்ம - ஶாஶ்வதம் - மமேதி - ச - ஹவேத் ம்ருத்யு :- ந - மமேதி - ச - ஶாஶ்வதம்' என்னும் மேற் சொன்ன 51 வது அத்யாயம் 29 வது சுலோகமும் கூறு கிறது.

63. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

பற்று, அற்ற கண்ணே = முற்றிலும் நீங்கியபொழு தே, பிறப்பு = மறுஜன்மம், அறுக்கும் = நீங்கும்; மற்று = அல்லாதவிடத்து, நிலையாமை = நிலையில்லாத்தன்மை யாகிய பிறப்பும் இறப்பும், காணப்படும் = தோன்றும்.

ஜனனமரணங்களாகிய காரியத்திற்குப் பற்றே சிறந்த காரணம். ஆகையால் காரணமாகிய பற்று அழி யாத வரையில் காரியமாகிய ஜனனமரணங்கள் அழியா என்பது கருத்து. பற்று இல்லையேல் பஞ்சபூதங்களை வெல்லுகிறான் என "நிவ்ருத்தம் - ஸேவமானஸ்து - பூதான் - அத்யேதி - பஞ்ச - வை" என்னும் மநுஸ்ம்ருதி 12 வது அத்யாயம் 90 வது சுலோகம் கூறும்.

64. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணாப்பி றப்பு.

பொருளல்லவற்றை = மெய்ப்பொருளல்லாத வற்றை, பொருள் = மெய்ப்பொருள், என்று, உணரும் = அறியும், மருளான் = அக்ஞானத்தால், மாணாப்பிறப்பு = சிறக்காத பிறப்பு, ஆம் = உண்டாகும்.

பிறப்பு என்பது இறப்பிற்கும் உபலக்ஷணம் ஆகும். பிறப்பு துன்பமென்பதும் அப்பிறப்பிற்கு முதற்காரணம் (உபாதான காரணம்) அவிச்சை (அவித்யை) யென்பதுங்

கூறப்பட்டன. என இக்குறளின் உரையின் இறுதி, யில் கூறியிருக்கிறார் பரிமேலழகர்.

மருள் என்பது யாது? ஒரு கயிற்றை யிருளில் கண்டு பாம்பு எனத் தவறி எண்ணுகிறோம். ஆங்குள்ள பொருள்கள் இரண்டு ஆகும். ஒன்று கயிறு, மற்றொன்று பாம்பு. அவற்றுள் கயிறு என்பது மெய்ப்பொருள்; பாம்பு என்பது மெய்யல்பொருள். அவ்வாறே உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு பொருள்களிலும் கடவுளும் தோற்றப்பொருள்களும் உள; கடவுள் கயிறுபோன்றது. மரம் முதலிய எல்லாப்பொருள்களையும் கடவுளாக நினைத்தல் மருளின்மை; மரம் முதலியவாக நினைத்தல் மருள். மருள் என்பதையே அவித்யை என்பர்.

"யத் - அவித்யா - விலாஸேன - ஹ்ரு த - ஹௌதிக ஸ்ருஷ்டய:" என்று கூறுகிறது வேதாந்தபரிபாஷை.

கடோபனிஷத்தில் முதல் அத்யாயம் 3 வது வல்லி 7,8 மந்திரங்கள் அஞ்ஞானத்தால் பிறப்பையும் ஞானத்தினால் மறுபிறப்பற்ற பதவியையும் அடையலாமென்று கூறுகின்றன.

65. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

மருள் = அஞ்ஞானத்தை, நீங்கி = நீக்கி, மாசறுகாட்சியவர்க்கு = குற்றமற்ற அறிவுடையோருக்கு, இருள் = பிறப்பிற்குக் காரணமாகியது, நீங்கி = நீங்க, இன்பம் = பேரின்பமாகிய வீடு, பயக்கும் = விளைக்கும்.

இருள் என்பதும் தமஸ் என்பதும் ஒருபொருட்கிளவியாகும். தமஸ் என்பதற்கு ஸம்ஸாரநியாமகம் என ஆசிரியர் சங்கராசார்யசுவாமிகள் பிரஹதாரண்ய உப

நிஷத் (4-4-10) பாஷ்யத்தில் பொருள் கூறியிருத்தலை நோக்கத்தக்கது.

மருள் என்பதும் அவித்தை என்பதும் ஒருபொருட்கிளவியாகும். ஆனந்தஸ்வரூபமான பிரம்மமே மோக்ஷத்தின் ஸ்வரூபம் என்னும் உபநிஷத்கொள்கையை யனுசரித்தே இங்கு ஆசிரியர் மோக்ஷத்தை இன்பமெனக் கூறுகிறார்.

"வீடானது நிரதிசயஇன்பமென்பதூஉம் அதற்கு நிமித்தகாரணம் கேவலப்பொருளுணர்வே என்பதும் கூறப்பட்டன" என இக்குறளுரையில் பரிமேலழகர் கூறுகிறார்.

"அவித்யா - நிவ்ருத்தி - உபலக்ஷித - ஆனந்த - ஸ்வரூப அவாப்தி :- மோக்ஷ:" என்று கூறும் வேதாந்தநூல்கள்.

இங்கு கேவலப்பொருள் என்பது குணம் குறி இவற்றைக் கடந்த பரம்பொருளையே குறிக்கும். வீடு என்றும், மோக்ஷம் ஒரு காரணத்தால் உண்டாகின்றது என்றும் வேதாந்தசாஸ்தரம் கூறுவதில்லை. ஒரு நாள் உண்டான பொருளாயிருந்தால் அதற்கு என்றுவது ஒருநாள் நாசம் ஏற்பட்டேதிரும். நாசமற்ற நித்யமான வஸ்துவே மோக்ஷமென்பது எல்லாசமயங்களின் கொள்கையாகும். வேதாந்தக்கொள்கையின்படி ஒவ்வொரு ஆத்மாவும் உண்மையில் நித்யமுக்தமாகவே யுள்ளது. அது உண்மையில் மோக்ஷஸ்வரூபமே. ஆதலால் மோக்ஷம் புதிதாக உண்டாகும் பொருளன்று. ஆதலாலேயே அதற்கு முடிவுமில்லை. மூடிக்கொண்டிருந்த மேகம் விலகுங்கால் பூர்வமேயுள்ள சூர்யன் ப்ரகாசிப்பதுபோல் மெய்யறிவால் மருள் நீங்க, என்றும் வீடாகவே யுள்ள ஆத்மா

ப்ரகாசிக்கின்றது. ஆதலால் மோக்ஷம் ஞானத்தால் உண்டாகிறது என்ற உலகவழக்கு பெயரளவிலேயே ஒழிய உண்மையன்று. பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனைப் பார்த்து கூறுவதாவது :- துர்யோதனாதிகளையெல்லாம் நான் முன்னமேயே கொன்று விட்டேன் (மயா - ஏவ - ஏதே - நிஹதா :- பூர்வம் - ஏவ), நீ பெயரளவில் மாத்திரம் (அதாவது நிமித்தமாத்திரமாக) அவர்களைக் கொல்லுபவன் ஆகுக (நிமித்த - மாத்ரம் - பவ - ஸவ்யஸாசின்") 11 வது அத்யாயம் 33 வது சுலோகம். கீதையில் "நிமித்தமாத்ரம்" என்றுள்ள வாக்யத்தை யனுசரித்தே பரிமேலழகர் உரையிலும் ஞானத்தை மோக்ஷத்திற்கு நிமித்தகாரணமென வழங்கப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு வீடு என்னும் மோக்ஷம் ஞானமென்னும் மெய்யுணர்வால் ஆக்கப்பட்ட ஒரு பொருள் என்று கொள்வதற்கில்லை. அவ்வீடு சூரியனைப்போல் நித்யப்ரகாசமாய் விளங்கும் நித்யானந்த மயமான ஆத்ம ஸ்வரூபமே.

66. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. [பொருள்

எப்பொருள் = எந்தப்பொருளும், எத்தன்மைத்து ஆயினும் = எத்தன்மையை உடையதாகத் தோற்றினும் அப்பொருள் = அப்பொருளிடத்தில், (அதற்கு ஆதாரமாய் நிற்கும்) மெய்ப்பொருள் = மெய்ப்பொருளாகிற கடவுளை, காண்பது = காண்டல், அறிவு = அறிவு(ஆகும்).

"இவர் மறைந்து எப்பொருளிலும் விளங்குகிறார். இவர் சூக்ஷ்மதர்சிகளால் சூக்ஷ்மத்ருஷ்டியால் பார்க்கப்படுகின்றார்" என கடோபனிஷத் (1-3-12) கூறுகிறது.

ஒரு பொருளில்லாத விடத்து அப்பொருளிருப்பதாக நினைத்தலை ஆசிரியர் சங்கராசாரியசுவாமிகள் அத்யாஸம் என்பர்.

67. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

ஈண்டு = இம்மக்கட்பிறப்பின்கண், கற்று = ஆசிரியரிடத்தில் ச்ரவணம் செய்து, மெய்ப்பொருள் = பரம்பொருளாகிய கடவுளை, கண்டார் = அபரோக்ஷமாகக் கண்டவர், மற்று = மறுபடியும், ஈண்டு = இவ்வுலகத்திற்கு, வாராநெறி = வாராதமார்க்கத்தின் கண், தலைப்படுவர் = தோன்றுவர்.

மெய்ப்பொருளை அபரோக்ஷமாகக் காணும் வரையில் ச்ரவணம் செய்யவேண்டுமென்பது கருத்து. இதனையே ப்ருகதாரண்யகஉபநிஷத்தில் உள்ள கேள்வி என்பதற்கு அர்த்தமாக ஆசிரியர் சங்கராசார்யசுவாமிகள் கூறுதல் நோக்கத்தக்கது. அக்னிஹோத்ரத்திற்கு அரிசி வேண்டுபவன் அரிசி கிடைக்கும்வரை நெல்லுக்குத்துதலை அவர் உதாரணமாகக் காட்டியதும் நோக்கத்தக்கது.

இங்குப்பரிமேலழகர் கூறுவதாவது :- "கற்று" என்றதனால் பலர்பக்கலினும், பலகாலும் பயிறலும் "ஈண்டு" என்றதனால் வீடுபேற்றிற்கு உரிய மக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற்றாம். ஈண்டு வாராத நெறி = வீட்டு நெறி.

வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று ; அவை கேள்வி, விமரிசனம்

பாவனை, என்பன. அவற்றுள் கேள்வி இதனால் சொல்லப்பட்டது.

கடவுளைத்தவிர வேறு எப்பொருளும் கற்பனையே. கடம் என்பது சரீரத்தைக் குறிக்கும். ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம், என்னும் மூவகைச்சரீரங்களுள் உள்நின்ற பரம்பொருளே கடவுள். இதையே உபனிடதங்கள் 'சாரீராத்மா ஆத்மா' என்று கூறுகின்றன. ஆத்மசாஸ்த்ரத்திற்கும் "சாரீரக மீமாம்ஸை" எனப் பெயர் வழங்குகிறது. கடவுள் மெய்ப்பொருள் என்பதாலேயே மற்றைப்பொருள்கள் பொய்ப்பொருள்கள் எனப்பெறப்படுகிறது.

சாந்தோக்ய உபநிஷத்தில் பின்வரும் முறையில் தத்வவிசாரணைக்கு வழி காட்டப்பட்டிருக்கிறது :-

ப்ரம்மசத்யம், ஜகன்மித்யா (மித்யா = கற்பனை) என்பது வேதாந்தசித்தாந்தம். மட்குடத்திற்குக் காரணம் மண்; மண்ணிற்குக் காரியம் மட்குடம். மட்குடத்தை ஆராய்ந்து பார்த்தால் குடமென்பது கற்பனை என்றும் உண்மையில் மிஞ்சுவது மண்ணே என்றும் தெரிகிறது. அவ்விதமே மண்ணுக்குக் காரணமாயுள்ள ஒரு பொருளைக் கண்டுபிடித்துவிட்டால் அதுமெய்யாகவும் மண் கற்பனையாகவும் ஆகிவிடும். அதற்கொரு காரணம் அதற்கொரு காரணம் என்று தேடிக்கொண்டே போகுமளவில் எல்லாவற்றிற்கும் பரம காரணமாம் சிவம் என்ற ஒரு பரம்பொருளே மிஞ்சுகிறது. அதுவே உண்மைப்பொருள். அதற்கு வேறொரு காரணமில்லை. தத்வவிசாரத்தால் ஏற்படும் ஞானமானது தேஜோமயமான நெருப்பைப் போன்றது பொய்ப்பொருள்களையெல்லாம் எரித்துவிடுகிறது. நெருப்பு அவ்விதம் எரித்துவிட்டு வெண்மையான பஸ்

மத்தை மிஞ்சவைக்கிறது. நீற்றுப்போன திருநீறும் அந்த பஸ்மத்தை எரிக்க நெருப்புக்கு சக்தியில்லை. அவ் வெண்மைப்பொருளே உண்மைப்பொருள். தத்வஞானம் என்னும் நெருப்பு கற்பனைப்பொருள்கள் யாவற்றை யும் எரித்துவிட்டு சிவமெனும் பரம்பொருளை மிஞ்சவைக் கிறது. அதுவே வெண்மையாம் உண்மைப்பொருள். அதுவே வீடு. நான் எனும் அகங்காரத்தொகுதியில் உள்ள ஸ்தூலசூக்ஷ்மகாரணசரீரங்களை அத்தத்வவிசார ஞானக்னி எரிக்கும்போது மிஞ்சும் சுத்தநித்ய அறிவே அம்மெய்ப்பொருள். தன்னைத்தான் காணும் அறிவும் அதுவே. அதுபற்றி அதற்கு ஸ்வயம்ஜோதிஸ் என்ற பெயர் விளங்குகிறது. விஷ்ணுஸகஸ்ரநாமத்திலும் "தத் துவத்தை அறிவதும் அத்தத்வமே. அறிவதும் அறியப் படுவதுமாயுள்ள பொருள் ஒரே ஆத்மாவே" எனப் பொருள் படும்படி "தத்வம், தத்வவித், ஏகாத்மா" என்று மூன்று நாமங்கள் வரிசையாய் அமைந்திருக்கின் றன. சிரவண மனன நிதித்யாஸனங்களென உபனிடதங்களில் முதற்பொருளை உணர்தற்கு மூவகை உபாயங்களாக சொல்லப்பட்டவைகளில் முதல் உபாய மாம் சிரவணத்தை இக்குறள் கூறுகின்றது.

68. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

உள்ளம் = மனம், ஓர்த்து = மனனஞ்செய்து, உள்ளது = மெய்ப்பொருளை, ஒருதலை ஆ = நிச்சயமாக, உணரில் = அறிந்தால், பேர்த்து = மறுபடியும், பிறப்பு = மறுபிறப்பு உள்ள வேண்டா = நினைக்கவேண்டா.

இக்குறளால் விமர்சனம் என்னும் மனனம் கூறப்பட்டது.

69. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.

பிறப்பு என்னும் பேதைமை = பிறப்பிற்குக் காரணமாகிய அவித்யை, நீங்க, சிறப்பு = வீடு, என்னும் = என்று சொல்லப்படும், செம்பொருள் = ஸ்வயம் ஜோதியாகிய கடவுளை, காண்பது = அபரோக்ஷமாகப் பார்த்தல், அறிவு = ஞானம் ஆகும்.

இக்குறள் நிதித்யாஸனமென்னும் ஏகாக்ர த்யானத்தைக் கூறுகின்றது. பேதைமையே பிறப்பிற்குக் காரணமென்பது அத்வைதவேதாந்தத்தின் கொள்கை. "க்ஞானேன - து - தத் - அக்ஞானம் - யேஷாம்-நாசிஶிதம் - ஆத்மன :- தேஷாம் - ஆதித்யவத் - க்ஞானம் - ப்ரகாஶயதி - தத்பரம்" (கீதை 5-16) என்பது பகவத்கீதையின் உபதேசம்.

70. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னும்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

அவா = பேராசை, என்னும், துன்பத்துட் துன்பம் = பெருந்துன்பத்தைக் கொடுக்கும் பொருள், கெடின் = அழிந்து போனால், இடையறாது = இடைவிடாமல், ஈண்டும் = இவ்வுலகத்தின் கண்ணும், இன்பம் = பேரின்பம், வரும்.

ஆசையறுபட்டால் இந்த ஜன்மத்திலேயே, அதாவது, சாவதற்கு முன்னமேயே மோக்ஷங்கிடைக்கும். "ஶக்னோதி - இஹ - ஏவ - ய :—ஸோடும்- ப்ராக் - சரீர - விமோக்ஷணத் - காம - க்ரோத - உத்பவம் - வேகம் -

ஸ - யுக்த :—ஸ - ஸுகீ -நர :'' (கீதை 5 - 23) என்பது இவ்விஷயத்தில் கீதையின் உபதேசம். "ந - அஸ்தி-ராக - ஸமம் - துக்கம், ந - அஸ்தி - த்யாக-ஸமம் - ஸுகம்'' சாந்தி - 337 - 6.

71. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

ஆராவியற்கையவா = நிரம்பாத்தன்மையையுடைய அவா, நீப்பின் = நீங்கின் (அது), அந்நிலையே = அந்த நிலையின் கண்ணே, பேராவியற்கை = நித்தியமான வீட்டினை, தரும் = கொண்டுவரும்.

"எப்பொழுது எம்மனிதனுக்கு எல்லா காமங்களும் நீங்குகின்றனவோ, அப்போதே அவன் ஈண்டு ப்ரம்மமாகிறான்'' 2-3-147 என கடோபனிஷத்தும், "எவன் காமமற்று பிரம்மத்தில் ஈடுபடுகின்றானோ அவன் பிராணன் வெளிக்கிளம்புவதில்லை. பிரம்மமாக இருந்து பிரம்மமாகவே ஆகின்றான்'' (4-4-6) என ப்ருஹதாரண்யகோபனிஷத்தும், "எவன் ஒன்றையும் விரும்பாமலும் வெறுக்காமலும் இருக்கின்றானோ அவன் இவ்வுலகிலேயே பிரம்மமாக ஆகின்றான்'' "என" யோ - ந - காமயதே-கிஞ்சித் - ந - கிஞ்சித் - அவமன்யதே - இஹ - லோகஸ்த - ஏவ - ஏஷ :—ப்ரஹ்மஹூயாய - கல்பதே'' என்னும் மகாபாரதம் அசுவமேதபர்வம் 47 வது அத்யாயம் 8 வது சுலோகமும் கூறும். ஆராவியற்கையவா என்பது "ந - ஜாது - காம :—காமானும்-உபபோகேன-சாம்யதி-ஹவிஷா - க்ருஷ்ணவர்த்மா - இவ-ஹூய - ஏவ - அபிவர்யதே'' என்னும் மகாபாரதம் ஆதிபர்வம் 69 வது அத்யாயம் 53 வது சுலோகத்தினால் கூறப்பட்டிருக்கிறது. ஆசையை விட்டு ஒழிக்கவேண்டுமென்பதைப்

பற்றிக் கீழ் குறிப்பிட்டிருக்கும் ச்லோகங்களும் கவனிக்கத் தக்கன.

யத் - ப்ருதிவ்யாம் - வ்ரீஹியவா-ஹிரண்யம் - பசவ:—ஸ்த்ரிய:
ஏகஸ்யாபி - ந பர்யாப்தம்-தஸ்மாத் - த்ருஷ்ணாம் - பரித்யேஜத் |
யா - ஊஹஸ்த்யஜா - ஊஹர்மதிபி:—யா - ந - ஜீர்யதி - ஜீர்யத: |
ய:—அஸௌ - ப்ராணாந்திக:— ரோக:—தாம் - த்ருஷ்ணாம் -
[ஊஹ]ரத:—த்யஜேத் ||

—ஆதிபர்வம் 79—13—14.

யத்-ச - காம-ஸுகம்-லோகே யத் - ச - திவ்யம்-மகத்-ஸுகம் |
த்ருஷ்ணா - க்ஷய -ஸுகஸ்ய -ஏதே-ந அர்ஹத:— ஷோடஸீம்
கலாம்—சாந்தி—282.6

திருக்குறளாசிரியர் ஜீவன்முக்தியை தங்கொள்கையாகக்கொண்டனர் என்பதை இக்குறள் அறிவிக்கின்றது.

72. ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

மற்றொன்று = ஊழைத்தவிர்த்து வேறொன்றை, சூழினும் = நினைத்தாலும், தான் = ஊழே, முந்து = முன்னர், உறும் = நிற்கும்; (ஆதலான்), ஊழின் = ஊழைக் காட்டிலும், பெருவலி = அதிகவலியுள்ளது, யா = யாவை இருக்கின்றன?

தைவமே அதிகபலமுடையது என மகாபாரதத்தில் "தைவம் - ச - பரமம் - மன்யே - பௌருஷம் - ச - அபி - அனர்த்தகம்" என்றும் ஆதிபர்வம் 21 வது அத்யாயம் 5 வது சுலோகமும், சபாபர்வம் 74 வது அத்யாயம் 35 வது சுலோகமும் கர்ணபர்வம் 6 வது அத்யாயம் 3 வது சுலோகமும், கூறும். மகாபாரதம் கர்ணபர்வம் 22 வது அத்யாயம் 31 வது சுலோகத்தில் "தைவம் - து - பலவத்தரம்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்திலும் அயோத்தியா காண்

டம் 22 வது சர்க்கத்தில் "க:—ச - தைவேந - சௌமித்ரே - யோதீயஸம்- உத்ஸஹதே - புமான்" என்னும் 21 வது சுலோகத்திலும், "தைவம் - ச - தயா - ப்ரபாவம்" என்னும் 30 வது சுலோகத்திலும், இந்த கருத்தே கூறப்பட்டிருக்கிறது.

கர்மம், தன்முயற்சி, இவ்விரண்டனுள் அறத்தைச் செய்ய தன் முயற்சிக்கு ஆற்றல் அதிகமென்றும், பொருளை அடைவதற்கும் காமத்தை நுகர்வதற்குங் ஊழிற்கு ஆற்றல் அதிகமெனவும் உணர்க.

73. படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு.

அரசருள் = அரசர்களுள், படை = சேனை, குடி = நாடு, கூழ் = பொக்கிஷம், அமைச்சு = மந்திரி, நட்பு = சினேகிதர், அரண் = கோட்டை, ஆறும் = இவ்வாறினையும், உடையான் = உடையவனே, ஏறு = சிறந்தவன், (ஆவான்)

கூழ் என்பதும் கோசம் என்பதும் ஒரே பொருளைக் கொண்டது. அமைச்சு, நட்பு, என்பது அமைச்சன், நண்பன் என்பனவற்றின் கடைக்குறை. அமைச்சன் என்பது வடமொழி அமாத்யன் என்பதின் தத்பவம்.

ஏறு என்பது வடமொழியில் வ்ருஷன் என்ற சொல்லைப்போல் சிறப்பினைக் குறிக்கவந்தது.

மகாபாரதம் சாந்திபர்வம் 68 வது அத்யாயம் 69, 70, 32, 40 வது சுலோகங்களில் "தான், அமாத்யன் கோசம், தண்டம், மித்ரர், ஜனபதங்கள், புரம், இவ்வேழும் அரசனாற் போற்றத்தகுந்தவை; [ராக்ஞா - ஸப்த - ஏவ - ரக்ஷயாணி - தானி - ச - ஏவ - நிவேய

மே - ஆத்மா - அமாத்ய :—ச - கோஶ :—ச - உண்ட :—மித்ராணி - ச - ஏவ - ஹி - தநா - ஜனபதா :—ச - ஏவ - புரம் - ச - குருநந்தன. "மித்ர அமாத்ய - புரம் - ராஷ்ட்ரம் - உண்டும் - கோஶ: - மஹீபதி :—ஸப்த - அங்கஸ்ய - அஸ்ய - ராஜ்யஸ்ய - " எனக் கூறப் பட்டது காண்க. அவ்வாறே "ஸ்வாமி - அமாத்ய - ஜன - பத-துர்க - கோஶ - உண்ட - மித்ராணி" என்றும் "ஸ்வாமி -அமாத்ய-ஸுஹ்ருத்-கோஶ - ராஷ்ட்ர-துர்க பலானி - ச" என்றும். அர்த்தசாஸ்த்ரம் கூறும். ஆங்கு ஆத்மா புரம், இவற்றிற்கு ப்ரதியாக ஸ்வாமி, துர்க்கம் என்று உள்ளன. இவ்வேழில் தான் என்பது சொல்லாமலே விளங்குமாதலால் மற்ற ஆறும் இக்குறளில் கூறப்பட்டிருக்கிறது.

இக்குறளைக்கொண்டு தென்னாட்டு அரசுமுறையும் வடநாட்டு அரசுமுறையும் ஒருவகைப்பட்டதென்பது தெளிவாகிறது.

74. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறை யென்று வைக்கப்படும்.

முறை = அரசநீதியை, செய்து = அனுசரித்து, (மக்களை) காப்பாற்றும், மன்னவன், மக்கட்கு, இறை = கடவுள், என்று, வைக்க = கருதப்படுதல், படும் = பொருந்தும்.

அரசநீதி மஹாபாரதத்திலும் தர்மசாஸ்த்ரங்களிலும், அர்த்தசாஸ்திரங்களிலும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. நீதிப்படி மக்களைக் காப்பாற்றும் மன்னன் ஆயிரம் அச்வமேதயாகத்தின் பயனையடைவான் என "அசுவமேத - ஸஹஸ்ரேண - ய :—யஜேத் -

ப்ருதிவீ - பதி :—பாலயேத் - வா - அபி - யுர்மேண - ப்ரஜா :—துல்யம் - ஹலம் - லஹேத்'' என்னும் மகாபாரதம் ஆச்ரமவாஸபர்வம் 8 வது அத்யாயம் 23வது சுலோகம் கூறும்.

"ந - அவிஷ்ணு:—ப்ருதிவீபதிः'' என்பது சாஸ்திரம். "இந்திர - அனில- யம - அர்காணும் - அக்னேஸ்ச- வருணஸ்ய - ச - சந்திர - வித்தேசயோ :—ச - ஏவ - மாத்ரா :—நிர்ஹ்ருத்ய - சாஸ்வதீ :- யஸ்மாத்-ஏஷாம்- * * மாத்ராஹியோ - நிர்மிதோ - ந்ருப :'' என்று கூறுகின்றன மனுஸ்ம்ருதி 7 வது அத்யாயம் 4 வது 5 வது சுலோகங்கள்.

75. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி.

வேந்தர்க்கு = அரசர்க்குள், கொடை = வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்தல், அளி = சிறந்தோர்க்குப் பரிசு வழங்குதல், செங்கோல் = நேர்மையான ஆட்சி, குடியோம்பல் = தளர்ந்த குடிகளைக் காத்தல், நான்கும் = இந்நான்கினையும், உடையான் = உடையவன், ஒளி = சிறந்தவன், ஆம் = ஆவான்.

கொடை, அளி இவற்றிற்கு உள்ள மாறுபாடு யாதெனின், பிறர் வேண்டக் கொடுத்தலைக் கொடை என்றும் பிறர் வேண்டாது இருக்க அவரைப் போற்றிக் கொடுத்தலை அளி என்றும் கூறலாம். செங்கோன்மை என்ற பொருளில் செங்கோல் என்பது வழங்கப்பட்டது. குடியோம்பல் என்னுமிடத்து குடி தளர்ந்த குடியையே குறிக்கும். இவ்வாறே மக்கண் மெய்தீண்டல் என்ற குறளில் மக்கள் தம்மக்களையே குறித்தல் காண்க.

தளர்ந்த குடிகள் யார் எனின், அவர், விதவை அனுதையர், அங்கஹீனர், தரித்திரர், முதலானவர் என வியவா - அனுய - விகலான் - க்ருபணுன் - ச-வஹார - ஸ:-" என்னும் மகாபாரதம் ஆதிபர்வம் 48-வது அத்யாயம் 11-வது சுலோகமும், "த்வம் - ஹி - நாய :- து - அநாயாநாം-ஔரிஷ ராணும் - விசேஷத :" என்னும்மேற் சொன்ன ஆதிபர்வம் 227-வது அத்யாயம் 126- வது சுலோகமும் கூறுகிறது. பாலன், வ்ருத்தன், ரோகி, வ்யசனி, அனுதை முதலியோரை அரசன் போற்ற வேண்டும் என்று அர்த்த சாஸ்த்ரம் கூறுகிறது.

76. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விர
கண்ணென்ப வாழு முயிர்க்கு. [ண்டும்

எண் என்ப = எண் எனக் கூறப்படுவன, ஏனை = மற்று, எழுத்து என்ப = எழுத்து எனக் கூறப்படுவன, இவ்விரண்டும் = இவ்விரண்டினையும், வாழும் உயிர்க்கு = வாழ்க்கையில் உள்ள மக்கட்கு, கண் = கண்கள், என்ப = என்று கூறுவர், (பெரியோர்).

எண் என்பது லக்ஷணநூல்களையும், எழுத்து என்பது லக்ஷ்யநூல்களையுங் குறிக்கும். லக்ஷ்யநூல்கள் கலைகள் ஆகும். லக்ஷணநூல்கள் அவற்றை ஆராயும் கருவிநூல்கள் ஆகும்.

"எண்" என்பது இருமையின்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக்கொள்வது. எழுத்து என்பது தாம் கற்கும் கல்விக்குத் துணையுறுப்பாகிய எழுத்து என்றுயிற்று." என்பர் காலிங்கர். எண் என்பது கணிதம் என்பர் பரிமேலழர். "எண்ணித் துணிக" (குறள். 467) போன்ற விடத்து எண்ணுதல்

என்பதற்கு ஆராய்தல் என்ற பொருள் இருத்தலின், எண் என்பதற்கு ஆராய்ச்சிநூல்களாய சாஸ்த்ரங்கள் எனப் பொருள் கொள்ளலாம். எழுதல் என்பதற்கு மனங்கிளர்தல் என்ற பொருள் "ஒள்வாயானை யுருத் தெழுந்தன்று (புற. வெ. 3,2)" போன்ற விடங்களில் இருப்பதால், மனக்கிளர்ச்சியால் தோன்றுவதை எழுத்து எனல் கூடும். அவ்வாறாயின் கலைகள் எல்லாம் எழுத்தின்பாற்படும்.

கண் என்பது இயற்கையாய்ப் பன்மைப்பெயர் என்றும் ஒருமையாகக் கொள்ளவேண்டின் அதற்குத் தகுந்த அடைமொழியையோ வினைமுற்றையோ வழங்க வேண்டும் எனவுந் தொல்காப்பியத்தால் அறியப்படு கின்றது. அதனைப் பன்மைசுட்டிய சினைநிலைக்கிளவி என்பர் தொல்காப்பியனார். "எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்—எண்ணெழுத்திகழேல்" என்பது ஔவையார் வாக்கு.

77. கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

கற்றோர் = படித்தவரே, கண் = கண்களை, உடையார் என்பவர் = என்று கூறப்படுவர்; கல்லாதவர் = படியாதவர், முகத்து = முகத்தில், இரண்டு, புண் = புண்களை, உடையர், (ஆவர்).

ஒரே பொருளைப் பலர் பார்க்கும்போது, ஒவ்வொருவர்க்கும் உண்டாம் மனநிகழ்ச்சி வெவ்வேறாயிருக்கின்றது. நன்கு கற்றவர்க்குச் சிறந்த எண்ணம் உண்டாகிறது; கல்லாதார்க்குத் தீய எண்ணங்கள் உண்டாகின்றன. அக்காரணம் பற்றியே கண்கள் நல்லோரின்

நன்மைக்கும், தீயோரின் துன்பத்திற்கும் காரணமாகின்றன. வித்யைக்குத் தக்க கண் இல்லை என மகாபாரதம் சாந்திபர்வம் 277 வது அத்யாயம் 35 வது சுலோகம் கூறுவதை நோக்கி "ஞானக்கண்ணுடைமையிற் கற்றார் கண்ணுடையர்" எனப் பரிமேலழகர் கூறினர், ஆனால் இக்குறள் ஊனக்கண்களைப் பற்றியே கூறுகின்றன என்பதே பொருந்தும்.

78. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து.

ஒருவற்கு = ஒருவனுக்கு, ஒருமைக்கண் = ஒருபிறப்பின்கண், தான், கற்ற, கல்வி, எழுமையும் = ஏழுபிறப்பின்கண்ணும், ஏமாப்பு = நன்மையைத் தருதலை, உடைத்து.

ஒருவன் என்பது ஒருத்திக்கும் உபலக்ஷணம். காளிதாஸன் குமாரஸம்பவத்தில் "தாம் - ஹம்ஸமாலா :- ஶரதீவ - ம ங் ம ா ம் - மஹௌஷயிம் - நக்தம் - இவ - ஆத்மஹாஸ: | ஸ்யிர - உபதேஶாம் - உபதேஶகாலே - ப்ரபேதிரே - ப்ராக்தன - ஜன்மவித்யா:" || "தாம்ஹ" என்ற சுலோகத்தில் பார்வதியின் வித்யாப்யாஸத்தை வர்ணிக்கும்போது ஆசிரியன் கற்பிக்கத் தொடங்கும் போதே முன்ஜன்மங்களில் கற்ற கல்வியெல்லாம் அவள் முன் நின்றன எனக் கூறுதல் நோக்கத்தக்கது.

79. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்
கற்றா ரனைத்திலர் பாடு. [தும்

கல்லாதார் = படியாதவர், மேற்பிறந்தாராயினும் = உயர்ந்த ஜாதியிற்பிறந்திருந்தாலும், பாடு = சிறப்பின்

கண், கீழ்ப்பிறந்துங்கற்ருரனைத்து=தாழ்ந்த ஜாதியிற் பிறந்திருப்பினும் படித்தவரை ஒத்து, இலர்.

"உடலோடு அழியும் ஜாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லும் கல்வியுயர்ச்சி சிறப்புடைத்து" என்ருர் பரிமேலழகர்.

மேற்பிறந்தார், கீழ்ப்பிறந்தார், என்ற சொற்களால் ஆசிரியர் வர்ணவிபாகங்களை ஒத்துக்கொள்ளுகின்ருர் என்பதும், ஸ்தூலசரீரத்தைக் காரணமாகக் கொண்ட ஜாதியைக்காட்டிலும் சூக்ஷ்மசரீரத்தைக் காரணமாகக் கொண்ட கல்வி சிறந்தது என்றமையால், ஸ்தூலசரீரம், ஸூக்ஷ்மசரீரம் இவற்றை ஒத்துக்கொள்ளுகின்றனர் என்பதும், தெளிவாய் விளங்குகின்றன.

இங்கு "எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்ருேரை வருக என்பர்" என்னும் நறுந்தொகையும், "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனுமவன் கட்படுமே" என்னும் புறநானூற்றுப்பாடலும் கவனிக்கத்தக்கன. மகாபாரதத்திலுள்ள விதுரர் (உத்யோக பர்வம்) தர்மவ்யாதன் (வனபர்வம் 208-216-அத்தியாயம்) இவர்களுடைய சரித்திரங்களும் இந்த உண்மையை விளக்கும்.

80. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

(அரசன்), அறன்=தர்மசாஸ்திரத்தை, அறிந்து, மூத்த அறிவுடையார் கேண்மை=வயது கல்வி முதலியவற்றிற் சிறந்து இயற்கையறிவு உடையாரது நட்பினை,

தேர்ந்து=ஆராய்ந்து, திறன்=அருமையை, அறிந்து, கொளல்=கொள்ளவேண்டும்.

இவ்வதிகாரத்தில் பின்வரும் இரண்டு குறள்களில் மன்னவன், மன்னன், என்ற சொற்கள் இருக்கின்றமையால் இக்குறளும் சிறப்பாக அரசனைப்பற்றிக் கூறியது எனக் கொண்டு அரசன் என்ற சொல் உரையில் வருவிக்கப்பட்டது.

"குணமுடையார், பெருவகையார், தர்மஜ்ஞர், சாதுக்கள் இவரை அரசன் போற்றித் தன் வசப்படுத்த வேண்டும் என "குணவந்த :—மஹோத்ஸாஹா":—தர்மஜ்ஞா :—ஸாயுவ :—ச - யே-ஸங்க்ருஹ்த - ந்ருப :—தை :— ஸ - ராஷ்ட்ரம் - தர்மேண - பாலயன்" என்னும் மகாபாரதம் சாந்திபர்வம் 68 வது அத்யாயம் 18 வது சுலோகம் கூறுவதை நோக்குக. அறனறிந்து என்றதால் இவ்வாசிரியர் தர்மசாஸ்திரங்களை ஒத்துக்கொள்கின்றனர் என்பதை அறியலாம்.

81. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

அளவு=பொருள், வலி முதலியவற்றின் எல்லையை, அறிந்து, வாழாதான்வாழ்க்கை - வாழாதவனுடைய வாழ்க்கைமுறைகள், உளபோல = சிறந்து விளங்குவதுபோல (இருந்து), இல் ஆகி=மங்கி, தோன்றா= இருந்தவிடம் தெரியாமல், கெடும்=அழிந்துவிடும்.

ஒவ்வொருவனும் அவனது வர்ணம், ஆச்ரமம் இவற்றை யனுசரித்துத் தன் அளவிற்குத் தக்கனவற்றைக் கொண்டு அவ்வவற்றின் தர்மங்களைக் கொண்டாலன்றி அவன் கெடுவான் என்பது கருத்து.

இங்கு "ஆனமுதலி லதிகம் செலவானால், மான மழிந்து மதிகெட்டு, போனதிசை - எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்-நல்லார்க்கும்-பொல்லனாநாடு" என்ற ஔவையார்பாடல் கருதத்தக்கது.

82. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. [வெல்லும்,

காக்கை, பகல் = பகற்பொழுதில், கூகையை = கூகையையும், வெல்லும் = சொல்லும், (ஆதலின்); இகல் = மாறுபட்ட வேந்தரை, வெல்லும் = வெல்ல நினைக்கும், வேந்தர்க்கு = அரசர்க்கு, பொழுது = தக்க காலம் வேண்டும் = அவசியமானது.

"சிலர் காலத்தைச் சிறப்பாகக் கொண்டு பகலில் காக்கை கோட்டானைக் கொல்லும் உதாஹரணத்தைக் கூறுகின்றனர்" என "கால :- ச்ரேயான் - இதி - ஏகே - திவா - காக: - கௌசிகம் - ஹந்தி" என்னும் அர்த்த சாஸ்திரம் இங்கு நோக்கத்தக்கது. அர்த்தசாஸ்த்ரத்தை அரசர் நன்கு அறியவேண்டும் என ஆசிரியர் கொண்டனர் எனக் கருதலாம்.

83. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலின்
நீங்கி னதனைப் பிற.

முதலை, நெடும்புனலுள் = ஆழமான நீர்நிலையில், (பிற = பிறவற்றையெல்லாம்), வெல்லும் = கொல்லும்; புனலின் = நீரிலிருந்து, நீங்கின் = வெளியில் வந்தால், அதனை, பிற, அடும் = கொல்லும்.

"தான் வசிக்குமிடத்தில் முதலை சிறந்த யானையையும் கொல்லும்; தன்னிடமிருந்து நீங்கின் நாயும் அதனைக்கொல்லும்" என "நக்ர :- ஸ்வஸ்தானம் -

ஆஸாத்ய - கஜேந்த்ரம் - அபி - கர்ஷதி - ஸ - ஏவ - ப்ரச்யுத :- ஸ்வானைத் - ஶுனா-அபி-பரிஹ்ரியதே" என்னும் மகாபாரதசுலோகமும், "தேசம் சிறந்தது என்பது சிலர், தரையில் நாயும் முதலையைக் கொல்லும் தன்மையால்" என்னும் "தேச :- ஶ்ரேயான் - இதி ஏகே - ஸ்தல - ம்ருதோ - ஶ்வா - நக்ரம் - விகர்ஷதி - நிம்ந - ம்ருதோ - நக்ர :- ஶ்வானம் இதி" என்னும் அர்த்தசாஸ்திரவாக்கியமும் இங்கு நோக்கத்தக்கது.

84. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடும்
நாவாயு மோடா நிலத்து.

கால்வல்நெடுந்தேர் = உருளைகளை வலுவாகக் கொண்ட பெரியதொரு தேர், கடல் = கடலின்கண், ஓடா; கடல் = கடலின்கண், ஓடும் = செல்லும், நாவாயும் = கப்பலும், நிலத்து = நிலத்தின்கண், ஓடா.

எல்லோரது இயற்கைகளும் ஆற்றல்களும் ஒன்றாகவே இராது வெவ்வேறாகவே யிருக்கின்றன என்பதும், ஒவ்வொருவர்க்கும் சிறப்பு சில துறைகளிலேயே இருக்குமன்றி எல்லாத்துறைகளிலும் இருத்தல் இல்லை என்பதும், இக்குறளால் அறியக்கிடக்கின்றன.

இந்தக்குறளின் கருத்தையே "நாவம் - ந - ஶக்யம்- ஆருஹ்ய - ஸ்தலே - விபரிவர்திதும் - ததா - ஏவ - ரதம்- ஆருஹ்ய - ந - அப்ஸு - சர்யா - விதீயதே" என்னும் மகாபாரதம் அச்வமேதபர்வம் 50 வது அத்யாயம் 30 வது சுலோகம் கூறுகிறது.

85. அறம் பொருளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

அறம், பொருள், இன்பம், உயிரச்சம் (இவை), நான் கின், (சோதனையால்), (அறியவற்றைக்கற்று குற்றமில்லாதாரின்) திறம் = மனநிலைமையை, தெரிந்து = ஆராய்ந்து, தேற = நிச்சயித்தல், படும் = பொருந்தும்.

இவை நான்கினையும், தர்மோபதை, அர்த்தோபதை, காமோபதை, பயோபதை, என கௌடில்யர் தமது அர்த்தசாஸ்த்ரத்தில் கூறி, அவற்றை நன்கு விளக்குகிறார்.

அரசன் அதார்மிகன் எனவும், அவனைக் கொன்றால் பெரும்பணம் கிடைக்கும் என்றும், அரசன்மனைவி அவனை நேசிக்கிறாள் என்றும், அரசனைக் கொல்லுவோம் என்றும் ஒருவன் மற்றொருவனைச் சோதிக்கச் சொல்லுதல் முறையே தர்மோபதை, அர்த்தோபதை, காமோபதை, பயோபதை ஆகும். இவற்றிற்கு இணங்காதவனைத் தூயன் என அறிதல் வேண்டும்.

இந்த விஷயத்தைப் பரிமேலழகர் தமதுரையில் விரிவாய் விளக்கியுள்ளார். அதாவது:—

அறவுபதை (தர்மோபதை) ஆவது புரோஹிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் 'இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப் போக்கி அறனும் உரிமையும் உடையனொருவனை வைத்ததற்கு எண்ணினம்: இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது—சேனைத்தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு, அவரான் 'இவ்வரசன் இவறன்மாலையனாகலின் இவனைப் போக்கி கொடையும் உரிமையும் உடையானொருவனை வைத்ததற்கு எண்ணினம்: இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்பவுபதையா

வது—தொன்றுதொட்டு உரிமையோடு பயின்றாளொரு தவமுதுமகளைவிட்டு, அவளால், ' உரிமையுள் இன்னாள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டுமென்று என்னை விடுத்தாள்: அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும் பொருளுங் கைகூடும்' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது—ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவனில்லின்கண் அழைப்பித்து, 'இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினார்?', என்று தான் காவல்செய்து ஒருவனால் 'இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கு இனிய அரசனொருவனை வைத்தல் ஈண்டையாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினும் திரிபிலனாயவழி எதிர்காலத்தும் திரிபிலன் எனக் கருத்தளவையால் தெளியப்படும் என்பதாம்.

86. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

குடி = நற்குடியில், பிறந்து, குற்றத்தின் = குற்றங்களினின்றும், நீங்கி, வடு = பழிக்கு, பரியும் = அஞ்சும், நாணுடையான்கட்டே = இழிதொழிலின்கண் மனம்செலுத்தாதவனிடத்தே, (அரசனுக்கு), தெளிவு = தெளிந்த எண்ணம், (படும் = பொருந்தும்).

படும் என்பது முதற்குறளிலிருந்து வருவிக்கப்பட்டது. குற்றத்தினின்றும் நீங்குதல், வடுப்பரிதல், நாணுடைமை இம்மூன்றுக்கும் குடிப்பிறத்தல் சிறந்த காரணமாகையால் அதனை ஆசிரியர் முதலிற் கூறினர் என்னலாம்.

87. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

மன்னவன்கோல் = அரசனுடைய செங்கோன்மை, அந்தணர்நூற்கும் = வேதத்திற்கும், அறத்திற்கும் = (அதனால் அறியப்படும்) தர்மத்திற்கும், ஆதி = காரணம் ஆய் = ஆகி, நின்றது.

அரசன் செங்கோலன் ஆக இல்லாவிடில், பிராம்மணர் முதலியோர் வேதங்களை அத்யயனம் செய்யார். அப்போது வேதங்களை அவர் அறியார். அப்போது வேதங்களின் பூர்வகாண்டம் கூறும் இல்லறத்தையும் உத்தரகாண்டம் கூறும் துறவறத்தையும் அவர் அறிதற்கு இடன் இல்லாமற்போகும். ஈண்டுக் கூறப்பட்ட அந்தணர்நூலும் தொல்காப்பியனார் கூறும் அந்தணர் மறையும் ஒன்றே. இக்குறளால் இந்நூலாசிரியர் வைதிகமதத்தினர் என்பது வெளிப்படை.

துறவறத்திலுள்ளோரையே அந்தணர்என இந்நூலாசிரியர் "அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்." என்றகுறளிற் கூறியிருப்பினும், இக்குறளில் அச்சொல் இல்லறத்திலுள்ளோரையுங் குறிக்கும். அவ்வழக்கு "அந்தி யந்தண ரருங்கடனிறுக்கும்" என்ற புறநானூற்றடியிற் காணப்படுகின்றது. "பிராம்மணன்" என்றசொல் சிறப்பாக சன்யாசியையே குறிக்கும் என மகாபாரதத்தில் கூறப்பட்டதும் நோக்கத்தக்கது.

அறம் என்றது இல்லறம் துறவறம் இரண்டையும் குறிக்கும். வேதம் அரசர்க்கும் வணிகர்க்கும் உரித்

தாதலின் அந்தணர் நூல் எனக் கூறுவது பொருந்துமா எனின், அது தலைமைபற்றி வந்த வழக்கு எனக் கூறுவர் பரிமேலழகர்,

88. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன் மறப்பர்
காவலன் காவா னெனின்.

காவலன் = அரசன், காவான் எனின் = முறைப்படி ஆட்சி செய்யாவிட்டால், ஆ = பசுக்கள், பயன் = பாலில் குன்றும் = குறையும்: அறுதொழிலோர் = ஆறு தொழில்களைக் கொண்ட பிராம்மணர், நூல் = வேதங்களை, மறப்பர். பயன் என்பது வடமொழியில் பயஸ் என்பதன் முதல் வேற்றுமை யொருமையின் தற்பவம்.

பிராம்மணனுக்குரிய அறுதொழிலாவன :—வேதத்தை ஓதல், வேதத்தை ஓதுவித்தல், யாகத்தைச் செய்தல், யாகத்தைச் செய்வித்தல், தானம் கொடுத்தல், தானம் வாங்குதல்.

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும்" என்ற குறளிற் கூறியபடி இக்குறளிலும் அறுதொழிலோர் எனக் கூறாது பார்ப்பார் என ஏன் ஆசிரியர் கூறவில்லை எனின், பிராமணர்க்குரிய ஆறுதொழில்களைச் செய்யும் பிராம்ணர்களையே ஈண்டுக் குறித்தற்கு அவ்வாறு ஆசிரியர் கூறினர் என்னலாம். இக்காரணம் பற்றியே புறநானூற்றுச்செய்யுளில் "ஆனியற்பார்ப்பன மாக்கள் (புறநா—6)" என்ற விடத்து ஆனியல் என்ற அடைமொழியை அச்செய்யுளாசிரியர் வழங்கினர். பசுக்களிடம் பால் குன்றினமையால் உலகிற்கு எவ்வளவு கேடு வருமோ அவ்வளவு கேடு பிராமணர் வேதத்தை மறத்தலால் உலகிற்கு வரும் என இவ்வாசிரியர் கூறின

மையின் இவர் வைதிகமார்க்கத்தினர், என்பதற்கு ஐயமில்லை.

"பசுக்கள் பால் குன்றியவழி அவியின்மையாலும், அது கொடுத்தற்குரியார் மந்த்ரம் கற்பம் என்பன ஓதாமையாலும் வேள்வி நடவாதாம். ஆகவே வானம் பெயல் ஒல்லாது" (மழை பெய்யாது) என்பதாயிற்று என்றார் பரிமேலழகர். "யஜ்ஞாத்-ஹவதி - பர்ஜன்ய:" என்பது கீதாவாக்கியம்.

"அல்ப - உதகா:— தருா - மேவ்யா:—அல்ப - ஸஸ்யா - வஸுந்தரா - அல்பக்ஷீரப்ரதா:—மாவ:— அல்ப - வித்யா - த்விஜாதய:—என்பது பவிஷ்யபுராண வசனம்.

இக்குறளின் உண்மையையே நேர்முகமாகக் கூறுவது "ஸ்வஸ்தி - ப்ரஜாப்ய:—பரிபாலயந்தாம் - ந்யாய்யேந - மார்மேண மஹீம் - மஹீசா:—மோ-ப்ராஹ்மணேப்ய:—ஸுபம் - அஸ்து-நித்யம் - லோகா:—ஸமஸ்தா:—ஸுகிநோ:—ஹவந்து" என்னும் ஸ்ரீ ராமாயணம் முதலிய உயர்தர நூல்களில் இறுதியில் பாராயணம் செய்யப்படும் மங்களவாக்யம். இதன் பொருள், அரசு புரிவோர் நன்முறையில் மக்களைப் பாதுகாக்கட்டும்; (அதனால்) பசுக்களுக்கும் அந்தணர்களுக்கும் சுபம் உண்டாகட்டும்; (அதனால்) உலகமாந்தர் எல்லோரும் சுகமாக வாழட்டும், என்பதே.

ப்ரதி அக்ரஹாரம் - ப்ரதி - வோஷம் - ஏவ - விப்ரை:-த்ரிவேதீ - விதி - வாவதூகைகை:—மோஹி:- ச - த்ருண்யா - கபளாம் ஸலாஹி:—மஹீயதே - யத்ர -

மனு :—ஹவிர்ச" என்னும் கவிவாக்கியமும் இங்குக் பொருந்தும்.

"வாழ்க -அந்தணர் - வானவர்-ஆன்-இனம் - வீழ்க- தண்புனல் - வேந்தனும் - ஓங்குக - ஆழ்க - தீயது - எல்லாம் - அரன் - நாமமே - சூழ்க - வையகமும் - துயர் - தீர்கவே" என்பது சம்பந்தசுவாமிகளின் திருப் பதிகம்.

இந்த குறளில் சொல்லும் அறு தொழிலோர் நான்மறப்பர் என்னும் கருத்தையே "ப்ராஹ்மண :— சதுரோ-வேதான் - ந - அதீயீரன் * * * யதி - ராஜா - ந - பாலயேத்" என்னும் மகாபாரதம் சாந்தி பர்வம் 67 வது அத்யாயம் 26 வது சுலோகமும் கூறுகிறது. ந - ப்ரஹ்மசாரீ - அயீத - ந - கால்யம் - உஹதே - ச - மௌ : * * * யதி - உண்டு —ந - பாலயேத் ॥ சாந்தி - 15 - 37.

89. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

ஒற்று = ஓர் ஒற்றன், ஒற்று = மற்றோர் ஒற்றனை, உணராமை = அறியாமல், ஆள்க; மூவர், உடன், சொல், ஒக்க = ஒத்திருக்க, தேற = தெளிதல், படும் = பொருந்தும்.

சொல்லொக்க என்பது சொற்றொக்க என விகாரப் பட்டது என்னலாம்.

ஒற்று என்பது ஒற்றன் என்பதன் கடைக்குறை.

அரசனால் ஏவப்படும் ஒற்றர்கள் ஒருவர்க்கொரு வர் ஒற்றர் என அறியாமல் இருக்குமாறு அரசன்

ஜாக்ரதையாய் இருக்கவேண்டும் என்பதும், மூன்று ஒற்றர்கள் ஒரேவிதமாய் ஒரு பொருளைக் கூறின் அதனை உண்மையென அரசர் அறிந்து கொள்ளலாம் என்பதும், "ப்ராணிபி:—ச - தத:—சூர்யாத் - * * * யதா - ந - வித்ு:—அன்யோன்யம் - ப்ராணியேயா:—ததா - ஹி - தே" என்னும் மகாபாரதம் சாந்திபர்வம் 108 வது அத்தியாயம் 8 முதல் 10 வரை "சுலோகங்களும்" ந - ச - அன்ய:—அன்யம் - ஸம்ஸ்யா:—தே - வா - விதீயு:; த்ரயாணும் - ஏகவாக்யே - ஸம்ப்ரத்யய: என்னும் அர்த்தசாஸ்த்ர (12) வாக்கியமும் கூறுவதைக் காண்க.

90. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு.

அடியளந்தான் = அடியால் (உலகங்களை) அளந்த வாமனர், தாஅயது எல்லாம் = அளந்த எல்லாவுலகங்களையும், ஒருங்கு = ஒரேகாலத்தில், மடியிலா மன்னவன் = சோம்பல் இல்லாத அரசன், எய்தும் = அடைகிறான்.

தாஅயது என்பது தாவியது என்பதன் இடைக்குறை. மகாவிஷ்ணு மூன்று உலகங்களையும் மூன்று அடிகளால் அளந்தனர் என்பது ருக்வேதம் முதல் மண்டலம் 154 வது சூக்தத்திலும் மகாவிஷ்ணு வாமனரூபத்தைக் கொண்டு பலியினிடத்தில் யாசித்து மூன்று உலகங்களையும் ஆக்ரமித்தனர் என்பது ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பாலகாண்டம் 29 சர்க்கத்திலும், ஸ்ரீமத்பாகவதம் 8 வது ஸ்கந்தம் 18—21 அத்யாயங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாசிரியர் அத்வைதானுபவி என்பது அறத்துப்பாலிலுள்ள பல குறள்களினால் வெளிப்படையாய் அறி

யப்படுகிறது. அதோடு ஸகுணோபாஸனை விஷயத்தில் அடிக்கடி "அடியளந்தான், உலகளந்தான்" என்ற சொற்களால் கடவுளைக் குறிப்பதால் இவர் வாமன மூர்த்தியை உபாஸிப்பவர் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

91. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

முயற்சி, திருவினை = செல்வத்தை, ஆக்கும் = உண்டாக்கும்; முயற்றின்மை = முயற்சி யின்மை, இன்மை = திருவின் இன்மையை, புகுத்திவிடும் = கொண்டுவரும்.

மக்கள் ஒவ்வொருவரும் தம்மால் இயன்றவரை ப்ரயத்தினம் செய்யவேண்டும் என்பது கருத்து. மக்களின் நிலைக்குக் காரணம் தைவம் மாத்திரமே யன்றி புருஷப்ரயத்தினமும் ஆகும் என்பது இதனால் அறியப்படுகிறது. இக்கருத்தினையே சேனாவரையர் "முயற்சியும் தெய்வமுமாகிய காரணங்களுள்" எனத் தொல்காப்பியம் சொல்லதிகாரம் 242 வது சூத்திரத்தின் உரையிற் கூறுகின்றனர்.

92. அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

(அரசன்) அறி = (பிறர்) அறிந்து கூறலை, கொன்று = கேட்காமல் அவமதித்து, அறியான் = (தானும்) அறியாமல் இருந்தான், எனினும், உழையிருந்தான் = அமைச்சன், உறுதி = (அவனுக்கு) நன்மை பயக்கும் பொருளை, கூறல், கடன் = கடமை, (ஆகும்).

உழையிருந்தான் என்பதும் வடமொழியில் அமாத்ய என்பதும் ஒருபொருட்கிளவி. இக்குறளில் அச்

சொல் மிகப் பொருந்தும்; ஏனெனில் அச்சொல்லிலி ருந்து யாரது உழை இருந்தான் என்ற கேள்வி பிறக்க, கொன்று அறியான் என்பதற்கு எழுவாயாக அரசன் என்னும் கிடைக்கின்றது.

அறி என்பது பெயர்ச்சொல்.

ராகம், மானம், மதம், இவை நிரம்பித் தவறிய அரச னுக்கு நட்புற்ற மந்திரியின் செயல் கைகொடுத்துதவும் என்னும் மகாபாரதச்செய்யுள் நோக்கத்தக்கது.

93. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

(அமைச்சன்), ஈன்றாள்பசி = தாயின் பசியை, காண்பான் ஆயினும் = கண்டாலும், சான்றோர் = பெரி யோர், பழிக்கும், வினை = செயல்களை, செய்யற்க = செய்தல் தகாது.

நூற்றுக்கணக்கான அகார்யத்தைச் செய்தாவது தாயைக் காப்பாற்ற வேண்டும் என "மாதாபிதரௌ அபி - அகார்ய - ஶதம்-க்ருத்வா - ஹர்த்தவ்யா - மனு:— அப்ரவீத்" என்று தர்மசாஸ்த்ரத்தில் (மநுஸ்ம்ருதி 11 வது அத்தியாயம் 11 வதும் லோகம்) கூறியிருக்க, ஈண்டு இவ்வாசிரியர் இவ்வாறு கூறுதல் பொருந்துமா எனில், உண்மையே. ஆயினும் அவ்விதி மக்களெல் லோருக்கும் பொது என்றும், அவ்விதிக்குவிலக்கு அமைச் சன் என்பதும் அறிதல் ஆகும். அன்றியும் ஒரு கார ணம பற்றிச் செய்யத்தகாத காரியத்தை அரசர் செய் தலைத் தர்மநூல்கள் ஆதரித்தல் அரிது.

94. சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீ இயற்று.

(அமைச்சன்) சலத்தால் = மோசடியினால், பொருள் = பொருளை, செய்து = சம்பாதித்து, ஏம் ஆர்த்தல் = க்ஷேமத்தை அடைதல், பசுமட்கலத்துள் = சூளையில் வைக்கப்படாத மட்பானையில், நீர் = நீரை, பெய்து இரீ இயற்று = இருக்குமாறு செய்ததை ஒத்தது.

சுடாத பானையில் வைத்த நீர் விரையில் அந்த விட்டு நீங்குமாறு வஞ்சனையால் சம்பாதித்த பணம் விரைவில் கெடும் என்பதும், அக்காரணம் பற்றி அமைச்சன் "சலத்தை" ஏற்றல் தகாது என்பதும், கருத்து.

சலம் என்பது வஞ்சனை என்ற பொருளைக்கொண்ட வடமொழிச்சொல்லின் தற்பவம்.

ஏம் என்பது ஏமம் என்பதன் இடைக்குறை. ஏமம் என்பது வடமொழி க்ஷேமத்தின் தத்பவம்.

சலம் என்னும் பதப்ரயோகம் செய்திருப்பதி லிருந்து திருவள்ளுவர் தேர்ந்த ஸம்ஸ்க்ருதபாண்டித்ய முள்ளவரென்பது விளங்குகிறது.

95. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்த
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. [வாம்

தூது உரைப்பான் பண்பு = தூதனின் தன்மை, அன்புடைமை = அன்புடன் பேசுந்தன்மை, ஆன்ற குடிப் பிறத்தல் = உயர்ந்த வம்சத்தில் பிறப்பு, வேந்து அவாம், பண்புடைமை = அரசன் கொண்டாடும் சீலமுடைமை, ஆகும்.

"குலீனனும், சீலசம்பன்னனும், வாக்மியாயும்-தக்ஷனும், ப்ரியம்வதனும், யதோக்தவாதியாயும், ஸ்ம்ருதிமானும், தூதன் இருக்கவேண்டும்" என "குலீந:,

சீல - ஸம்பன்ன :- வாக்மீ - தக்ஷ :- ப்ரியம்வத:- யதா - உக்த - வாதீ ஸ்ம்ருதிமான் - தூத :- ஸ்யாத் - ஸப்தபி : குணை:'' என்னும் மகாபாரதம் சாந்திபர்வம் 85-வது அத்யாயம் 28-வது சுலோகம் கூறும்.

"குலீன:-சீலஸம்பன்ன:-ப்ராஜ்ஞா:-ரூபவந்த:-வஹு ச்ருதா :- ப்ரகல்ஹா :- ச - அனுரக்தா :- தே - தவ - ஸ்யு :- பரிச்வதா :-'' என்னும் சாந்திபர்வம் 83-வது அத்யாயம் 6-வது சுலோகமும் "ஸாயுவ :- குலஜா : - ஸூரா : - ஜ்ஞானவந்த :- அநஸூயகா:- அக்ஷத்ரா :-ஸுரூப :- தக்ஷா :- ஸ்யு :-பாரிபார்ஸ்வகா:'' என்னும் சபாபர்வம் 119 வது அத்யாயம் 9-வது சுலோகமும், "அனுரக்த:-ஸுசி :- தக்ஷ :- ஸ்ம்ருதிமான் - தேசகாலவித் - வபுஷ்மான் - வீதபீ :-வாக்மீ - தூத:- ராஜ்ஞ :-ப்ரசஸ்யதே'' என்னும் மனுஸ்ம்ருதி 7-வது அத்யாயம் 64-வது சுலோகமும் தூதர்களுடைய லக்ஷணத்தை விரிவாய்க் கூறுகின்றன.

96. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்.

(அரசரை) இளையர் = வயதிற் சிறியர், இனமுறையர் உறவினர், என்று = என நினைந்து, இகழார் = அவமதிக்காமல், நின்ற ஒளியோடு = இட்ட ஆணைப்படி, ஒழுக = ஒழுகுதல், படும் = பொருந்தும்.

ஒளி என்பதும் ப்ரதாபம்என்பதும் ஒருபொருட்கிளவி ஆகும். ஈண்டு ப்ரதாபத்தால் இட்ட ஆணையை அச்சொல் குறிக்கும். எல்லையைக் கடந்தமகன், பேரன், உடன்பிறந்தான், இவரைமன்னர் போற்றார் என "ந - ஹி - புத்ரம் - ந - நப்தாரம்நஸோதரம் அரிந்தம-ஸம் - அதிக்ராந்த-மர்யாதம் - பூஜயந்தி-நராயிபா:''- என்னும்

மகாபாரதம் விராடபர்வம் 5-வது அத்யாயம் 20-வது சுலோகம் கூறுதல் நோக்கத்தக்கது. 'பால:-அபி-ந-அவமந்தவ்ய:-மனுஷ்ய:-இதி - ஹூமிப:'' - என்னும் மனுஸ்ம்ருதி 7-வது அத்யாயம் 8-வது சுலோகமும் மகாபாரதம் சாந்திபர்வம் 41-வது அத்யாயம் 24-வது சுலோகமும் கூறுதல் இங்கு கவனிக்கத்தக்கது.

97. தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

நாடு, தள்ளாவிளையுளும்=குறைவற்ற விளைபொருள்களோடும், தக்காரும்=தகுதியுடையாரோடும் (தார்மிகரோடும்) தாழ்விலாச் செல்வரும்-குறைவு படாத செல்வத்தை உடையாரோடும், சேர்வது=சேர்ந்திருத்தல் வேண்டும்.

குறையாத விளைவுசெய்யும் குடிகளும், இல்லறம் துறவறம் இவற்றில் தவருத யோக்யரும், பல வகையாலு பொருள் ஈட்டும் வணிகரும் கூடி வாழ்வதே நாடாகும்.

விளைபொருள் நிறைந்த நாடு, செல்வம் அரசனிடம் பக்தி இவை கூடிய மக்கள், திருப்தி முற்றிய அமைச்சர் இவற்றையுடைய அரசனை அசைத்தல் இயலாது என யஸ்ய - ஸ்ஃபீத: - ஜனபத: - ஸம்பன்ன - ப்ரிய - ராஜக:-ஸந்துஷ்ட: - புஷ்ட-ஸசிவ:- த்ரு஢-மூல: - ஸபார்ஶிவ:''-என்னும் மகாபாரதம் சாந்திபர்வம் 94-வது அத்யாயம் 3-வது சுலோகம் கூறுதல் நோக்கத்தக்கது.

98. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

பிணியின்மை=நோயின்மை, செல்வம், விளைவு=நல்லவிளைச்சல், இன்பம்=சௌக்கியம், ஏமம்=காவல்

இவ்வைந்தும், நாட்டிற்கு, அணி = அலங்காரம், என்ப = என்று கூறுவர் (புலவர்).

ஆதலின் இவ்வைந்தும் நாட்டில் நிலைத்திருக்குமாறு அரசன் முயலவேண்டும்.

99. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்
பேதையிற் பேதையா ரில். [காப்

ஓதி (உ-ம்) = (மனமொழி மெய்கள் அடங்குவதற்கு ஏதுவாய நூல்களை) கற்றும், உணர்ந்தும் = மனனம் செய்தும், பிறர்க்கு, உரைத்தும் = உபதேசித்தும், தான், அடங்கா = அதன்படி நடவாத, பேதையின் = அவிவேகியைக் காட்டிலும், பேதையர் - சிறந்த அவிவேகியர், இல் = இல்லை.

ஓதியும் என்றவிடத்து உம்மை தொக்கது.

பேதையார் என்னுமிடத்து ஆர் விகுதி இழிவினைக் குறிக்கும். பிறர்க்குரைத்தும் என்றமையால் இக்குறள் சிறப்பாகப் பிராம்மணரைப் பற்றியது. "மறப்பினு மோத்துக்கொளலாகும்" என்னும் (41-வது) குறள் ஈண்டு நோக்கத்தக்கது.

100. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழி
பண்பிலன் பற்றார்க் கினிது. [நோக்கான்

வழி = தர்மசாஸ்திரங்களை, நோக்கான் = படியாமலும், வாய்ப்பன = (அவற்றின்) கூறப்பட்ட விதிகளை, செய்யான் = அனுஷ்டிக்காமலும், பழி = பாவம் (நேரிடுமென்று), நோக்கான் = பயப்படாமலும், பண்பு = நற்குணங்களை, இலன் = உடைத்தாயிராமலும் இருப்பவன்

பற்றார்க்கு=பகைவரால் (தீங்குசெய்யப்பட), இனிது= எளிதாக ஆவான்.

தர்மசாஸ்த்ரங்களைக் கற்று, அறமுறைப்படிநடந்து, பழிபாவத்திற்கஞ்சுபவனைப் பகைவர் எளிதில் வெல்ல முடியாது என்பது குறிப்புப்பொருள்.

101. பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.

ஒருவன், பகை=விரோதி, என்னும்=என்ற, பண்பிலதனை=கெட்டபொருளை, நகையேயும்=விளையாட்டிற்காகவும், வேண்டற்பாற்று அன்று=விரும்பிக்கொள்ளக் கூடாது.

102. ஏந்திய கொள்கையார் சீறினிடை முரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

ஏந்திய கொள்கையார்=சிறந்த தவமுடையார், சீறின்=கோபித்தால், (அது) வேந்தனும்=தேவேந்த்ரனையும், இடை=இடம், முரிந்து=கெட்டு, வேந்து=அரசத்தன்மையை, கெடும்=கெடச் செய்யும்.

"ஐந்தவித்தானாற்றல் அகல்விசும் புளார்கோமான் இந்திரனே சாலுங்கரி" என்னும் (12-வது) குறள் ஒப்பிடத்தக்கது.

ஆகையால் ஏந்தியகொள்கையரும் அரசரும் சேர்ந்து நாட்டை ஆளவேண்டுமென்பது அறியத்தக்கது. ஏந்திய கொள்கையரை ஸஹஸ்ருத: என்ற சொல்லால் சாஸ்த்ரம் குறிக்கும்.

103. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோ ளஞ்சு பவர்.

இல்லாள் - அமை - ஆர் - தோள் - அஞ்சுபவர் = மூங்கில்போல் அழகுற்ற மனைவியின் தோள் காரணமாக அவளிடம் பயப்படுவார், இமையாரின் = கண்ணிமைத்தல் இல்லாத தேவர்களைப்போல், வாழினும் = வாழ்ந்தாலும், பாடு = சிறப்பினை, இலர் = உடையாரல்லர். ஏ = அசை,

ஈண்டுத்தேவர்கள் கண்ணிமைப்பது இல்லை என்பது இமையார் என்ற சொல்லால் குறிக்கப்பட்டது.

தன் மனையாளிடத்திலுங் காமத்தில் மூழ்கிக்கிடத்தல் தவறு என்பது அறியப்படுகிறது.

104. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

இருமனப்பெண்டிரும் = கணிகையரும், கள்ளும், கவறும் = சூதாட்டமும், திருநீக்கப்பட்டார் = லக்ஷ்மீ கடாக்ஷம் நீங்கியவர்களின்: தொடர்பு, (ஆகும்).

ஸ்த்ரீகள், சூதாட்டம், வேட்டை, பானம், இந்நான்கும் காமத்தால் உண்டாகும் நால்வகைத் துன்பங்கள். அவற்றால் மனிதன் செல்வத்தை இழக்கிறான் "ஸ்த்ரிய:- அக்ஷா :- ம்ருகயா - பானம் - ஏதத் - காம - ஸமுத்பவம்- துக்கம் - சதுஷ்டயம்-ப்ரோக்தம் - யை :- நர :- ஸ்ரீயதே-ஸ்ரிய :" என்னும் மகாபாரதம் வனபர்வம் 13 வது அத்யாயம் 7 வது ஸ்லோகம் கூறும். இக்கருத்தையே "சத்வாரி - ஆஹு :- நர - ஸ்ரேஷ்டா : - வ்யஸநாநி - மஹீக்ஷிதாம் - ம்ருகயாம் - பானம் - அக்ஷான் - ச - க்ராம்யே - ச - ஏவ - அதிரக்ததாம் - ஏதேஷு - ஹி -

நா :- ஸக்த :- ப்ர்மம் - உத்ஸ்ருஜ்ய - வர்த்ததே " என்னும் சபாபர்வம் 90 வது அத்யாயம் 20, 21 வது சுலோகங்களும் " பானம் - அக்ஷா :- தயா-நார்ய :- ம்ருமயா - ஸீத - வாதிதம் - ஏதானி - யுக்த்யா - ஸேவேத - ப்ரஸங்ம :- ஹி - அத்ர - தோஷவான் " என்னும் சாந்தி பர்வம் 140 வது அத்யாயம் 26 வது சுலோகமும், " காமஜ :- வ்யஸர்வர்ம :- * * * * ம்ருமயா - த்யூதம் - ஸ்த்ரிய :- பானம் - இதி " என்னும் அர்த்தசாஸ்த்ர 119 வாக்யமும் கூறும்.

" பானம் - அக்ஷா :- ஸ்த்ரிய :- ச - ஏவ - ம்ருமயா - ச - யதாக்ரமம். ஏதத் - கஷ்டதமம் - வித்யாத் - சதுஷ்கம் - காமஜே-மணே " என்று கூறுகிறது மனுஸ்ம்ருதி 7 வது அத்யாயம் 50 வது சுலோகம்.

லக்ஷ்மீகடாக்ஷம் வேண்டுபவன் இவைகளில் ஈடுபடுதல் தகாது என்பது கருத்து.

105. தேவ ரனையர் கயவ ரவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

கயவர் = இழிந்த ஆசாரமுடையோர், தாம், மேவன = விரும்பிய பொருள்களை, செய்து, ஒழுகலான், தேவரனையர் = தேவர்களை ஒப்பர்.

தேவர்கள் சுயநன்மையையே கருதுமாறு கயவர் சுயநலத்திற்காக நினைத்தபடியெல்லாம் அக்ரமம் செய்வர் என்பது குறிப்பு.

106. அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

கீழ்களது = இழிந்தோருடைய, ஆசாரம் = செயல்கள், அச்சமே அச்சத்தையே காரணமாகக் கொண்

டன; எச்சம் = அவற்றைத் தவிர்த்து ஏனைய செயல்கள், அவா = விருப்பம், உண்டேல் = இருப்பின், சிறிது உண்டாம்.

செய்யாவிடின் தண்டிப்பார்கள் என நினைத்து இழிந்தோர் தாங்கள் செய்யவேண்டியவற்றைச் செய்கிறார்களே யன்றி விருப்பத்துடன் அவற்றை அவர்கள் செய்யவில்லை என்பது கருத்து.

தத்தம் வர்ணதர்மங்களையும், ஆச்ரமதர்மங்களையும் செய்யாது இழிந்தநிலையில் உள்ளோரையே கீழ்கள் என்ற சொல்லால் ஆசிரியர் குறிக்கின்றனர். அவர்களிடம் தமக்குள்ள வெறுப்பைக் கீழ்கள் என்று விடத்து அஃறிணை விகுதியாகிய கள். என்பதால் அறிவிக்கின்றனர்.

" ஸர்வ :- தண்ட - ஜித :- லோக :- துர்லப :- ஹி-ஶுசி: :- நர :- தண்டஸ்ய - ஹி - பயாத் - ஸர்வம் - ஜகத் - போகாய - கல்பதே" என்று கூறுகின்றன மனுஸ்ம்ருதி 7 வது அத்தியாயம் 22 வது சுலோகமும் மகாபாரதம் சாந்திபர்வம் 15 வது அத்தியாயம் 34 வது சுலோகமும்.

கீழ் குறித்திருக்கும் மகாபாரதசுலோகங்களும் இந்த கருத்தையே தெரிவிக்கின்றன :—

ராஜதண்ட - பயாத் - ஏகே - நரா :- பாபம் - ந - குர்வதே, தண்டஸ்ய - ஏவ - பயாத் - ஏதே - மநுஷ்யா :- வர்த்மனி - ஸ்திதா :- | ந - அஹீத: புருஷ :- கஶ்சித் - ஸமயே - ஸ்தாதும் - இச்சதி |

சாந்தி—15—5,12,13.

107. தாம் வீழ்வார் மென்றோட் டுயிலி னினிது
தாமரை க்கண்ணா னுலகு. [கொல்

தாம்வீழ்வார் மென்றோட்டுயிலின் = தாம் விரும்பும் மகளின் மெல்லிய தோளின்கண் துயில்போல, இனிது கொல் = வருந்தாமல் எய்தலாமோ, தாமரைக்கண்ணா னுலகு = செங்கண்மாலுலகம்.

தாமரை க்கண்ணான் என்பதற்குத் தாமரையைப் போன்ற கண்களையுடையவன் எனப் பொருள் கொண்டு அச்சொல் திருமாலைக் குறிக்கின்றது என்று கொள்ளப் பட்டது. தாமரை என்பதற்குப் பதுமம்என்ற (அற்புதம், அப்ஜம் என்ற சங்க்யையுள் கூறப்பட்ட) பேரெண்ணைப் பொருளாகக் கொண்டு அச்சொல் இந்திரனைக் குறிக்கு மென்பாரும் உளர். மலர்மிசை ஏகினானென்ற சொல்லை நோக்கின் அச்சொல் ப்ரம்மாவைக் குறிக்கின்றது என்று சொல்வாரும் உளர்.

"நீவி - மோக்ஷ:- ஹி - மோக்ஷ :" என்கிறார் பர்த்ரு ஹரி = ச்ருங்கார சதகத்தில்.

108. புலத்தலிற் புத்தேளா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.

நிலத்தொடு, நீர், இயைந்தன்னாரகத்து = இயைந்த தன்மையையுடைய காதலரிடத்தில், புலத்தலின் = புலத்தலைக் காட்டிலும், இனிது = மிக்க இன்பத்தை தருவது, புத்தேளாடு = தேவருலகம், உண்டோ?

ஸ்வர்க்கத்தில் அமையும் இன்பத்தைக்காட்டிலும் ஒத்த அன்பினையும், பிறர்மனை நோக்காச் சிறப்பினையுங் கொண்ட கணவரோடு ப்ரணயகலகஞ் செய்தலால் வரும் இன்பம் சிறந்தது என்பது குறிப்பு.

தம்பதிகட்கு ஸௌமனஸ்யம் வேண்டும் என ருக்வேதம் கூறுகிறது. அதனையே பலவிடத்துத் தொகுத்தும் விரித்துங் கூறி, அதற்கு உதாரணமாக அர்த்தநாரீசுவரரைத்தான் உபாஸ்யதெய்வமாகக் காளிதாஸன் "வாகர்த்தௌ - இவ - ஸம்ப்ருக்தௌ" "காந்தாஸம்மிச்ரதேஹோபி", "நீலலோஹித:" என்னுமிடங்களில் தொழுவதையும் மக்கள் நோக்குதல் தகும்.

இவ்வாசிரியரின் சமயம் வைதிகசமயமும், உபாஸனமூர்த்தி வாமனமூர்த்தியும், தத்வநிலை அத்வைதானுபவமும் என்பது தெளிவாகிறது.

திருக்குறள் நூற்றெட்டு முற்றிற்று.

தெய்வப் புலவர் திருவள்ளுவர்

இயற்றிய

# திருக்குறள்

பொருட்பாலும் காமத்துப்பாலும்

[illegible]ருரையுடன்

டாக்டர் ...
உலகத் த...
8, ...
கோட்...
... -85.

வித்யாரத்னம் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி

இயற்றியது

விலை ரூ. 4—0—0

—o◦o—

# திருக்குறள் நூற்றெட்டு

(செய்யுள் மட்டும்)

விலை அணா 2.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை